# காவேரி

APRIL-1945
பார்த்திப-சித்திரை

27 APR 1945
MADRAS



-/6

Widest Circulated Monthly



## 2000 வருஷங்களுக்கு முன்

முனனோர்கள் சந்தனத்தை குறைவற்ற நன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருபபதின் காரணம் அதன சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனாண்ட காலத்தின் உணமை எனறும் உண்மையே.

# மைசூர்
## சந்தன சோப்



சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே

★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★

Estd. 1904

Tel: KETIOR

தென்னுட்டில் ஆதியில் ஏற்படுத்
தப்பட்டு நற்கியாதியுடன்
சுமார் 41 வருஷமாக
அபரிமிதமாக—
...ப்புஜியாகி
...ரும்

27 APR 1945
MADRAS

விஜயபுரம்

K. T. R.

பன்னீர்
சந்தனுதி &
அரைக்கீரை
விதை தைலங்கள்
ஒயிட்ரோஸ்ஹேராயில்
கிருஷ்ணு அகர்பத்தி
ராஜா பற்பொடி
குணத்தில் சிறந்தது எங்கும் கிடைக்கும்.

மதராஸ் ஏஜன்ஸி:

GIRISON & CO.

PARK TOWN :: MADRAS



# பார்ஸிகளிடையே—
# தேநீர் அருந்தும் நேரம்

வெள்ளைக்காரர்களிடமிருந்து கைப்பற்றிய பல பழக்கவழக்கங்களுள்ளும் பிற்பகலில் தேநீர் அருந்துவது பார்ஸிகளுக்கு மிகவும் பிடித்தது அநேகமாய் நேரங்கழித்தே அதாவது எஜமானன் வேலையை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தசமயம் தேநீர் அருந்தப்படுகிறது.

ஐரோப்பிய முறையில்தான் இவர்கள் தேநீர் பருகுவது. அதாவது அவ்வவர்கள் பிரியம்போல் சர்க்கரையையும் பாலையும் தேநீருடன் கலந்துகொள்வார்கள். தேநீருடன் இவர்கள் சமோசா என்ற உப்புப் பணியாரமுதல் தித்திப்புப் பண்டம்வரை சாப்பிடுவது வழக்கம். வீட்டுக் காரியங்களை வகுப்பதில் பார்ஸி ஸ்திரீகளுக்கு அசாத்திய மான பெருமை உண்டு. தேநீர் அருந்துவதற்கு அநேகமாய் சீனப் பாத்திரங்களே உபயோகிக்கப்படும்; இவை தலைமுறை தலைமுறையாக வந்த பாத்திரங்களாக இருக்கும்.

இந்தியா பூராவும் பார்ஸிகளைக் காணலாம். அவர்களுக்கு எந்தச் சமயத்திலும் புத்தப்புதிய ப்ரூக் பாண்ட் தேயிலை கிடைக்கிறது.

# ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"



சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங் களுக்கும்
P.A. ராஜுசெட்டியார் ஸ பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"



ஒரு புராதன வைத்யம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. வுட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது.




# WOODWARD'S
## GRIPE WATER

*keeps baby well*

J-WW111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

புதிய ஸ்டாக் — விஸ்லையில் நயம்

# 'சந்திர விலாஸ்'

பிராஞ்சு:

**பெரிய கடைத்தெரு,**

**கும்பகோணம்.**

கல்யாண காலத்திற்கென்றே நவீன மோஸ்தரில் உள்ள பல ஊர் ஜவுளிகள் புதிய ஸ்டாக்கில் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். தங்களுக்கு வேண்டிய கோட்டிங்ஸ், ஷர்ட்டிங்ஸ், பனியன்கள், புடவைகள், வாயில்கள், பிரிண்டட் துணி ரகங்கள், சீட்டிகள், 4, 7, 8 முழ வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், கலர் டவல்கள், பெட்ஷீட்கள், ரெடிமேட் ஆடைகள் மற்றும் தேவையுள்ள அநேக துணிகள் நேரில் பார்த்து வாங்கத்தக்க சமயம் இதுவே. ஒருமுறை விஜயம்செய்து தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

திருப்பூர் சுத்த கதரும் கிடைக்கும்.

**K. ராகவேந்திர ராவ்**

ஜெனரல் & ஜவுளி வியாபாரம்,

சந்திர விலாஸ் பிராஞ்சு,

('ஸ்ரீ' கோபாலஸ்வாமி கோவிலுக்கு எதிரில்)

பெரியகடைத்தெரு, கும்பகோணம்

# பொருளடக்கம்

பார்த்திப மலர் 4 — சித்திரை இதழ் 9


| | |
|---|---|
| விவசாய வருமான வரி ... | 7 |
| கதம்பம் ... | 9 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் — ராமய்யா | 13 |
| நோயற்ற வாழ்வு ... — தி. சே. சௌ. ராஜன் | 17 |
| காளிதாசர் ... — கே. சந்தானம் | 20 |
| புத்தாண்டு வணக்கம் ... — சுத்தானந்த பாரதி | 24 |
| மல்லிகைச் செண்டு ... — கே. சுந்தரம்மாள் | 25 |
| வாசனைப் பொருள்கள் ... — ஆர். கே. விசுவநாதன் | 35 |
| பார்க்கும் விழி நானுனக்கு ... — சாரி | 39 |
| அறிந்தவர் இரங்குவர் ... — மாரார் | 45 |
| மோதி ... — வேங்கடலக்ஷ்மி | 49 |
| ஐரோப்பாவில் பதிப் பஞ்சம் ... — ஜயலக்ஷ்மி நரஸிம்மன் | 56 |
| சிற்பியின் சபதம் ... — விஜயஸ்ரீ | 59 |
| ஆனைக்குக் குதிரை வைக்கை... — பார்த்தஸாரதி | 65 |
| நாகரிகப் பண்ணை ... — யோகி சுத்தானந்த பாரதியார் | 68 |


குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# ராதா ஸில்க் எம்போரியம்

## பட்டு ஜவுளி வியாபாரம்

**119, பெரியதெரு :: கும்பகோணம்**

(Phone 8016) ஹெட் ஆபீஸ்: மயிலாப்பூர்

**கல்யாண காலத்தை உத்தேசித்து**

எங்கள் சொந்த கைத்தறிகளில் தயார் செய்யப்பட்ட அசல் கொள்ளேகாலம் பட்டு சேலைகளும் பலவூர் நூல் ஜவுளி தினுசுகளும் ஏராளமாக விலை நயமாக கிடைக்கும்.

***N. B.*** பூரா ஜரிகை கொடி வேலைசெய்த கிங்காப் சேலை ஓர் ஸ்பெஷல் ரகம்.

ஸ்பெஷல் ஆர்டர்கள் உடனே தயார்செய்து கொடுக்கப்படும்.

(Pro.) R. K. திருவேங்கட செட்டியார்.


சங்கீத வித்வான்
கும்பகோணம்
**ஏ. டி. சுல்தான்**



# தங்கமெடல்கள்

குடந்தை மகாமகம் ஸ்வதேசி பொருட்காட்சி (1945) யிலும் வாணி விலாஸ சபா காரியதரிசி **ஸ்ரீ எஸ். ரங்கஸாமி அய்யங்கார், பி. ஏ,** (சிக்கா) அவர்களாலும் அளிக்கப்பட்டன.

29—3—45 பாலக்காட்டில் நடந்த கச்சேரியில் **ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர்** அவர்கள் இவ் வித்வானுடைய கச்சேரி சம்பிரதாயப்படி இருந்ததைப் புகழ்ந்து வெகுநேரம் பேசி, மாலை சூட்டி, தங்கமெடல் பரிசு அளித்தார்.

குடந்தை அட்வகேட், மகாமகம் பொருட் காட்சி காரியதரிசி, முனிசிபல் கவுன்சிலர், **ஸ்ரீ சி. எல். ஆராவமுதய்யங்கார், பி. ஏ., பி. எல்.,** எழுதுவதாவது:—

“தென்னாட்டில் கர்னாடக சங்கீதத்தில் மிக்கதிறமையுடன் விளங்கும் இளம் பிராயமுள்ள ஸங்கீத வித்வான் ஏ. டி. சுல்தான் அவர்கள். அவருடைய வார்த்தைகள் உச்சரிப்புச் சுத்தத்துடனும், சம்பிரதாய முறையோடும் திறம்பட இருக்கின்றன. அவர் ஸங்கீத உலகில் முன்னேறிப் புகழ்பெறப் பிரார்த்திக்கிறேன். தமிழ் புது வருஷப்பிறப்பு 13—4—45 திருவாரூர் தமிழ் இசைக் கழகம். 29—4—45 ஈரோடு மகாநாடு.

# காவேரி

பார்த்திப மலர் 4

"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்

சித்திரை இதழ் 9


## விவசாய வருமான வரி

சென்னை கவர்மெண்டார் கொண்டு வந்துள்ள விவசாய வருமான வரி மசோதா பெரிய பண்ணைகளையே பாதிக்கும். ரூ. 5000-க்கு மேலுள்ள மொத்த நில வருமானங்கள்தான் இவ்வரிக்குட்படும். ஒரு மிராசுதாருடைய சாகுபடிச் செலவு, அவர் கொடுக்கும் கிஸ்தி, அந் நிலங்களை அடமானம் வைத்திருந்தால் அதற்காகக் கொடுக்கப் பட்டிருக்கும் வட்டி, வரிகொடுப்பவர் இன்ஷ்யூர் செய்திருந்தால் அதற்காகக் கட்டப் பட்டிருக்கும் பிரீமியம், இவையெல்லாம் அவருடைய மொத்த நில வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டு எஞ்சியுள்ள வருமானம் ரூ. 5000-க்கு மேற்பட்டால் அதற்கு வரி உண்டு.

தனிப்பட்ட நபர், பாகம்பிரிபடாத ஹிந்து ஐக்கிய குடும்பத்தார் இவர்கள் கொடுக்க வேண்டிய விகிதம்:—

மேலே சொன்ன செலவுகள் போக மீதியுள்ள வருமானத்திலும் முதல் ரூ. 1500-க்கு வரி கிடையாது. அடுத்த 3500-க்கு ரூபாய்க்கு 9 பை வீதம் வரி; அதற்கடுத்த ரூ. 5000-க்கு ரூபாய்க்கு 1 அணு விகிதம்; அதற்கு அடுத்த ரூ. 5000-க்கு 1½ அணு விகிதம்; அதற்கும் அடுத்த ரூ. 5000-க்கு 2 அணு; மீதியுள்ள வருமானத்துக்கு 2½ அணு விகிதம்.

பாகம் பிரிக்கப்படாத ஸகோதரர்கள் ஸகோதரரின் பிள்ளைகள் மட்டுமடங்கிய ஹிந்து குடும்பங்களுக்கு வரி விகிதம் குறைச்சல். முதல் ரூ. 1500 தள்ளுபடி கிடையாது. அக் குடும்பத்தின் கிஸ்தி முதலிய செலவுகள் போக எஞ்சி யுள்ள நில வருமானத்தை எத்தனை சகோதரர்கள் சகோதரரின் வார்ஸ் உண்டோ அவ்வெண்ணால் வகுத்து ஒவ்வொரு பாகஸ்தருக்கு வரும் வருமானம் 3500-க்கு மேற்படாமலிருந்தால் ரூபாய்க்கு 4 பை விகிதம் வரி; ரூ. 3500க்கு மேற்பட்டு ரூ. 6000க்கு உட்பட்டிருந்தால் 7 பை விகிதம் வரி; ரூ. 6000-க்கு மேற்பட்டால் ஒவ்வொரு பாகஸ்தருக்கும் தனி நபர் என்பதற்கான வரி விதித்தால் எவ்வளவு வரித்தொகை ஏற்படுமோ அதை அந்த நபருக்குள்ள வருமானத்தால் வகுத்து வரும் எண்தான் அக் குடும்ப பாகஸ்தர்களின் வருமானத்திற்கு வரிவிகிதம்.

கம்பெனிகளுக்கு மொத்த வருமானத்துக்கு ரூபாய்க்கு 2 அணு.

இதுதான் விவசாய வருமான வரி மசோதாவின் முக்கிய ஷரத்துக்கள்.

சென்னை ராஜதானியில் கிஸ்தி பளு, விவசாயத்தையே குறைந்த வருவாயுள்ள தொழிலாகச் செய்துவிட்டது. நமது கிராமங்கள் அனைத்தும் பாழடைந்து வருவதற்குக் காரணம் விவசாயியின் துயரம்தான். நாளுக்கு நாள் அவன் நிலை குன்றி வருகிறது.

பெருவாரியாயுள்ள விவசாயிகள், நிலச் சுவான்தார்கள், மிக ஏழைகளே. விவசாயிகளில் 100-க்கு 90 பேர் சொல்ப நிலம் உள்ளவர்கள்தான். இவர்களை இவ்வரி பாதிக்காது. கவர்மெண்டார் புள்ளி விபரப்படி சுமார் 4000 நபர்கள்தான் இவ்வரி கொடுக்க நேரிடும் என்று கூறுகிறார்கள். இதிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருமானமும் மிகச் சொற்பமே—சுமார் 40 லக்ஷம்.

இவ்வரி விதிப்பினால் எளிய ஏழை விவசாயிகளுக்கு ஏதேனும் விமோசனம் ஏற்படுமானால், இவ்வரி விதிப்பை நாம் எதிர்க்க முடியாது. வரி விதிக்கும் நவீனக் கொள்கைகளில் அதிகப் பணம் படைத்த நபர்களின் சொத்தை வரிமூலம் கவர்மெண்டார் வசூலித்துப் பொது நலத்திற்கும், ஏழை எளியவர்

களின் கஷ்ட நிவாரணத்திற்கும் உபயோகிப்பது முறைஎன்பதை யாரும் மறுக்கமுடியாது

ஆனால் சென்னை கவர்மெண்டாருக்கு இத்தகைய உத்தேசம் கிடையாது என்பது தெளிவாகத் தெரிகிறது. அநேகமாகச் சிறிய மிராசுதார்களெல்லாம் கிஸ்தி பளு தாங்க மாட்டாமல் கஷ்டப்படுகிறார்கள். நில வருமானத்தையே நம்பிப் பிழைப்பது அரிதாகி விட்டது. உழுது சாகுபடி செய்யும் பண்ணை ஆட்களின் கதி இன்னும் சொல்ல இயலாது. அநேகமாக அவர்கள் விவசாயத் தொழிலை விட்டு வேறு நவீனத் தொழில்களில் ஈடுபட ஆரம்பித்துவிட்டார்கள். எனவே அநேகமாக நிலத்தை நேரில் இருந்து சாகுபடி செய்யும் மிராசுதார்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது.

வேறு தொழிலில் ஈடுபட்டு வருவாய் சம்பாதிக்கும் நபர்கள்தான் இன்று பெரிய அல்லது சிறிய மிராசுதார்களாக விளங்குகிறார்கள். நில வருவாயை மட்டும் நம்பிப் பிழைக்கும் நபர்கள் தொகை மிகவும் குறைந்து வருகிறது. பெருத்த பண்ணைகள் மட்டும் இந்நிலையை எல்லாம் பொருட்படுத்தாது நின்று வருகின்றன. அவைகளுக்கும் இன்று தலைவலிக்க ஆரம்பித்துவிட்டது. இப் புதிய வரி அவர்களையும் நிலத்திலிருந்து ஓடச் செய்துவிடும் என்பது திண்ணம். இதனால் என்ன ஏற்படும்? நிலத்தில் பற்றுதலுள்ள கோஷ்டியாரே மறைந்து விடுவார்கள். வேறு தொழிலிலீடுபட்ட நபர்கள்தான் நிலம் வகிப்பார்கள். இது இப்பொழுதே அநேகமாகக் காணக்கூடிய நிலை. இந்தப் பழக்கம் இன்னும் அதிகரிக்கும், இப்புதிய வரியினால்.

இதற்கு மூலகாரணம் என்ன? விவசாயம் நல்லவருவாயுள்ளதொழிலாகாதிருப்பதேன்?

கவர்மெண்டாரின் வரி விதிக்கும் முறையே இதற்கு அடிப்படையான காரணம். அவர்களுக்குக் கொடுக்கப்படும் நிலவரி விளைச்சலையும் விளைந்த தானியத்தின் அக விலையையும் பொறுத்திராமல் விதிக்கப்பட்டுள்ளதேயாகும். அகவிலை தூக்கி விற்கும் காலங்களில் கஷ்டமில்லை. ஆனால் அது குறைந்து விற்கும் காலங்களிலோ விவசாயிகள் சமாளிக்க முடிகிறதில்லை. அதனால்தான் நிலங்கள் அடிக்கடி கைமாறி விடுகின்றன. எளிய மிராசுதார்கள் தங்கள் பூமிகளை விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு, இதரத் தொழில்களில் பணம் ஈட்டிய நபர்கள்— அவைகளை வாங்கி விடுகிறார்கள். சாகுபடியில் பற்றுதலில்லாத நபர்கள் நிலச்சுவான்தார்களாக ஆக நேரிடுகிறது. இதற்கு முற்றிலும் பொறுப்பாளி கவர்மெண்டாரே.

விவசாயம் இந்நிலையிலிருக்கையில் வருவாயை உத்தேசித்து மட்டும் இப்புதிய வரியை விதிப்பது தவறு. அதை நாம் ஆதரிக்க முடியாது.

எளிய விவசாயிகளுக்குச் சௌகரியங்கள் செய்துகொடுப்பதற்காக இவ்வரியை விதித்திருந்தால் அதில் அர்த்தம் உண்டு. நிலவரி விதிக்கும் முறையை அடியோடு மாற்றும் உத்தேசத்துடன் இதைச் செய்திருந்தால் அதை ஒப்புக்கொள்ளலாம். இத்தகைய உத்தேசம் இல்லை என்பதை கவர்னரின் ஆலோசகர், ஸர். ஸ்டிராதி, தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டார். மிராசுதார்களுக்கு நிலவரிப் பளுவைத் தளர்த்தச் சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டார். வருங்கால திட்டங்களுக்கு 155 கோடி செலவாகுமாம். அதற்காகத்தான் இவ் வரியெல்லாம் என்று குறிப்பிட்டிருக்கிறார். அத்திட்டங்களிலும் எளிய விவசாயிகளின் வரிப்பளுவைக் குறைத்து, வரி முறையை மாற்றி அமைக்கும் உத்தேசமே கிடையாது என்று தெரிகிறது.

இந்நாட்டிற்கு வருங்கால திட்டம் என்று ஒரு தீர்க்க திட்டம் வகுக்கப்படுமானால் அதில் முதன்மை ஸ்தானம் விவசாயிகளின் நிலையை உயர்த்துவதற்கென இருக்கவேண்டும். விவசாயிகளின் நிலை குன்றி வருவதினால்தான் கிராமங்கள் பாழடைந்து வருகின்றன. உண்ண உணவு வேண்டும் அவர்களுக்கு. அதை உற்பத்தி செய்பவன் சுபிக்ஷமாக இருக்கவேண்டும். அத்தொழிலில் அவனுக்கு ஊக்கமிருக்கச் செய்யவேண்டும், பிறகுதான் கல்வி, மற்றத் திட்டங்கள் எல்லாம். இதைக் கவனியாது கல்வித்திட்டம், நில உணவுச் சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் எல்லாம் வீணேயாகும்.

விவசாயிகளிடத்திலிருந்து பணத்தைப் பிடுங்கி அவர்கள் க்ஷீணித்துக்கொண்டிருக்கையில் வேறு துறைகளில் செலவழிப்பது முறையாகாது. எனவே இம்மசோதாவை நாம் ஆதரிக்க முடியாது. ஆனால் கவர்மெண்டார் தீர்மானித்துவிட்டார்கள். மக்களிடத்திலிருந்து பணம் பறிப்பதே தொழிலாகக்கொண்ட சென்னை கவர்மெண்டார் பொதுஜன அபிப்ராயத்துக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். அதற்கு அறிகுறியாக இந்தப் புது வரி வசூலிப்பதற்குத் தேவையான அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். பொதுஜன அப்பிபிராயத்தை எப்படிப் பொருட்படுத்துகிறார்கள் பாருங்கள்! ஜனநாயகத்தை இந்தியாவில் நிலைநாட்ட வந்தவர்கள் இவர்களன்றோ!

# கதம்பம்

## கங்காணியின் வருகை

இந்தியாவிலிருந்து பெயர் பெற்ற கங்காணி ஒருவர் சீமைக்குப் பறந்து போயுள்ளார், ஆட்கள் பிடித்துவர. அஸ்ஸாம், சிலோன் தேயிலைத் தோட்டங்களுக்காக அல்ல. சீமை மக்கள் அப்படிப்பட்ட வேலைகளைச்செய்வார்களா? இந்திய போலீஸ் இலாகா, சிவில் சர்விஸ் இலாகா இவைகளில் உத்தியோகங்கள் செய்யத்தக்க வெள்ளையர்கள் வரவில்லையாம். ஆகவே கங்காணி நேரில் சென்று, தக்க ஆசாமிகளைப் பிடித்துவர, பறந்து போயுள்ளார்.

அந்தக் கங்காணி யார்தெரியுமா? இந்திய சர்க்கார் உள்நாட்டு இலாகா மெம்பர் ஸர் பிரான்ஸிஸ் மூடி!

இங்கு உத்தியோகங்களை யெல்லாம் இந்தியமயமாக்க வேண்டுமென்று இவ்வளவு காலமாகக் கிளர்ச்சி இருந்து வருகிறது.

இந்திய உத்தியோகஸ்தர்கள் ராஜவிசுவாசத்தில் சீமை வெள்ளையனுக்குக் கடுகளவுகூட குறைந்தவர்களல்ல என்பது தெரிந்தும், கங்காணி சீமையில் ஆசாமிகளைப் பிடிக்கச் சென்றது ஆச்சரியமாயிருக்கின்றது. ஸர். ராமசாமி முதலியார், உஸ்மான் சாயப்பு, நூன், அம்பட்கார் இவர்களுக்குள்ள ராஜபக்தி அசல் சீமை வெள்ளையனுக்குக்கூட இருக்காது. அப்படியிருந்தும் இந்தியர்கள்பேரில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நம்பிக்கை பிறக்கவில்லை.

உயர்தர வெள்ளையர்கள் இந்தியாவில் சர்க்கார் உத்தியோகம் வகிக்கத் தயங்குகிறார்களாம். ஓரளவு அதில் உண்மையுண்டு. ஆகவே அவர்களுக்கு ஆசைகள்காட்டி, விசேஷ சலுகைகள் காட்டி அழைத்துவர, மூடி துரை சென்றுள்ளார்.

இதைக்குறித்து லண்டன் டைம்ஸ் பத்திரிகை எழுதுவதாவது;— "சிவில் சர்விஸ், போலீஸ் சர்வீஸ் இவைகளில் வெகுகாலமாகப் போதிய வெள்ளையர்கள் இல்லாமல் இந்தியா கஷ்டப்பட்டு வருகிறது. அதுவும் தகுதியான திறமை வாய்ந்த பேர்வழிகள் முன்வரவில்லை. காரணம் வெள்ளையர்களுக்கு இந்தியாவில் கஷ்டம் அனேகம். லீவு கிடைப்பதில்லை. லீவு கிடைத்தால் கப்பல் வசதியில்லை. சம்பளம்போதாது. ஆகவே மூடிதுரை நேரில் வந்து சீமையில் பிரசாரம் முதலியவற்றால் வெள்ளையர்கள் அதிகமாக இந்தியாவுக்குப்போகுமாறு செய்வது மிகவும் அவசியம். இந்தியாவுக்குச் சுய ஆட்சி அளிப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு, வெள்ளையர்களை உத்தியோகங்களில் அமர்த்துவது முறையா என்று கேட்கலாம். யார் உத்தியோகத்தில் இருந்தால் என்ன? வெள்ளையர்களும் இந்தியர்களும் அன்னியோன்யமாக வித்தியாசமின்றி நடந்து வருகையில்? காங்கிரஸ் மந்திரிகளே வெள்ளை உத்தியோகஸ்தர்களைப் புகழ்ந்து பேசியிருக்கின்றார்கள். இந்தியர்கள் வீணாகப்பயம் கொள்ள வேண்டாம். எல்லாம் தற்காலிகமாகத்தான்"

இந்தப் பசப்பு வார்த்தைகளைத் தேசபக்தி கொண்ட எந்த இந்தியனாவது நம்புவானா? தற்காலிகமாகவாம்! ஒட்டிக்கொள்ளும் அட்டை லேசில் விடுமா? பிரிட்டிஷ் சர்க்காரின் இந்த விபரீதப்போக்கைக் கவனித்தால் நம்மீது பிணைக்கப்பட்டுள்ள அடிமைக்கயிற்றைப் பலமாக இறுத்தவே சதி செய்யப்படுகின்றது என்று விளங்குகின்றது.

## நிர்வாண கோலம்!

உண்ண உணவில்லாவிட்டால் உபவாசமிருக்கலாம். முடியாவிட்டால் பட்டினி கிடந்து பிராணனை விடலாம். தங்க இடமில்லாவிட்டால் திரியலாம். உடுக்க உடையில்லாவிட்டால்? மானத்தைமூட வேண்டுமே, ஸ்வாமி!

உணவுப் பஞ்சம் ஏற்பட்டுப் பல உயிர்களைக் கொள்ளைகொண்டது. உடைப்பஞ்சமேற்பட்டு மக்களுடைய மானத்தைத் துறக்கச்செய்யப் போகின்றது! நிர்வாண தேசமென ஒன்று இருந்ததாகவும் அதில் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரனென மதிக்கப்பபட்டதாகவும் சொல்லுவார்கள். பாரத தேசம் நிர்வாண தேசமாக மாறிவிடுமோ என்ற கவலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. 'கல்கத்தாவில் துணிப்பஞ்சம்,' 'பம்பாயில் துணி ரேஷன்;' 'மேஹர்பூர் என்ற ஊரில் மானத்தைமூட, துணி கிடைக்காமல் ஒரு பெண்மணி தற்கொலை செய்துகொண்டாள்' இவ்விதச் செய்திகள் நம்மைத் திடுக்கிடச்செய்கின்றன. நாம் என்ன முற்றிலும் துறந்த முனிவர்களா ஆடைகளில்லாமலிருக்க?

இக்கொடிய துணிப்பஞ்சநோய் ஆடவர்களை அதிகம் பாதிக்காவிட்டாலும் நமது பெண்மணிகளைப் பலமாகத்தாக்கும்! நாலுமுழம் துணிக்கு 'லாட்ரி' அடிக்கும் போது பதி

னெட்டு முழத்திற்கு எங்கே போவது? ஆகவே பெண்மணிகள் தங்கள் ஆடைகளின் அளவைச் சற்றுக் குறுக்கிக்கொள்ள வேண்டியது அவசியம். பல முன் யோசனையுள்ள நாகரிக நாரிமணிகள் இவ்விதத் துணிப் பஞ்சம் ஏற்படலாமென்று எண்ணித்தானோ என்னவோ ஆடைகளின் அளவை அதிகமாகவே குறுக்கிக் கொண்டுவிட்டார்கள். அதுமிகவும் பாராட்டத் தக்க விஷயமே! ஆனால் பஞ்சத்தைச்சாக்காகக் கொண்டு அளவை ரொம்பவும் குறைத்துக் கொள்ளாமலிருக்கப் பெண் தெய்வங்களை மன்றாடிப் பிரார்த்திக்கின்றோம்!

நிற்க, துணிப் பஞ்சம் ஏற்படக் காரணமென்ன? நாட்டில் பருத்தி இல்லையா? ஆலைகளில்லையா? நெசவுத் தொழிலாளர்களுக்குக் குறைவா? பின்?

நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏராளமாகத்துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ராணுவத் தேவை வேறு. வெளிநாடுகளிலிருந்து முன்போல் துணிகள் வரத்தில்லை. நிலக்கரியகப்படாமல் பல ஆலைகள் மூடப்பட்டாய் விட்டன. போக்குவரத்து சாதனங்களின் கோளாறுகள் வேறு.

இவைகளேல்லாம் நிவர்த்திக்க முடியாத தடைகளா? இல்லை. அரசாங்கம் மக்களின் நலத்தைக்கவனிக்கும் மனப்பான்மைகொண்டு விட்டால் பிரமாதமான காரியமில்லை. இப்பொழுதுள்ள அரசாங்கத்துக்கு அத்தகைய மனப்பான்மை ஏற்படுமென நம்புவது கடினம். பஞ்சம் பலமாக ஏற்பட்டு லக்ஷக்கணக்கான மக்கள் மானத்தைத் துறக்கச் சகியாமல் மடிந்தால் அப்பொழுதுதான் உருப்படியாக ஏதாவது செய்ய முன்வரும்.

துணிகள் ஏராளமாக இருந்தும் 'கள்ளமார்க்கெட்டில்' போய்விடுவதாகச் சொல்லுவதுண்டு. ஓரளவு அதில் உண்மை யிருந்தபோதிலும், முழுவதையும் கள்ள மார்க்கெட்டின் பேரில் பழிசுமத்துவது நேர்மையல்ல. எல்லாச் சாமான்களைப்பற்றிய வரையிலும் கள்ளமார்க்கெட் இருந்துவருகின்றது. ஆனால் எல்லாச் சாமான்களும் பஞ்ச நிலைமைக்கு வந்துவிடவில்லை. துணிப் பஞ்சத்திற்குக் காரணம் ஆளும் அரசாங்கத்தின் அசட்டையே என்பதைத் துணிந்து கூறலாம்.

## நீல இரத்தம் (Blue Blood)

மகாராஜாக்கள் மகுடாதிபதிகள் முதலிய உயர்குலத்தவர்கள் தாங்கள் 'நீலநிற' இரத்தக் கலப்புள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்வது வழக்கம். சீமையில் அரசாண்ட முதலாவது சார்லஸ் (Charles first) இப்படிச் சொல்லிக்கொண்டு மக்களின் நலத்தை மறந்து அரசாட்சி புரியவே, ஆலிவர் கிராம் (Oliver Cromwell) என்பவருடைய தலைமையில் மக்கள் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றி, அரசனையும் கைதிசெய்து விசாரணை நடத்தி அரசனுக்கு மரண தண்டனை விதித்தார்கள். அரசன் தலை வெட்டப்பட்டு உருண்டவுடன் ஆலிவர் கிராம்வெல் "ஹா! நீல இரத்தத்தைக் காணோமே! சிவப்பாக அல்லவோ இருக்கின்றது? என்று பரிகாசம் செய்தாராம்—இப்படியாகச் சரித்திரக் கதையொன்றுண்டு.

நம்முடைய தற்போதைய சக்ரவர்த்திக்கு முன் சொற்பநாட்கள் அரசுபுரிந்த எட்வர்ட் அரசுரிமையைத் துறக்க நேர்ந்த காரணம் அவர் 'நீல இரத்த' மில்லாத மங்கையை மணக்கத் தீர்மானித்ததுதான்.

இப்பொழுது ஒரு பிரபல அமெரிக்க டாக்டர் அரிய ஆராய்ச்சியொன்றில் ஈடுபட்டு அபூர்வ ரகசியமொன்றை அம்பலப்படுத்தியுள்ளார்.

"கறுப்பு மனிதன் இரத்தத்தில் நீல இரத்த சம்பந்தமில்லை! வெள்ளையன் இரத்தத்தில் அந்த அரிய நீல இரத்தக் கலப்பு உள்ளது"! அதாவது வெள்ளையன் மனித சிருஷ்டியில் உயர்ந்தவன், கறுப்பு மனிதன் மட்டரகப் பேர்வழி என்பதே பொருளாகிறது.

ஆகவே கறுப்பு மனிதர்கள் வெள்ளையர்களால் இழிவாகபேசப்படுதலுக்கும், நடத்தப்படுதலுக்கும் காரணம் அவர்களிடம் நீல இரத்த சம்பந்தமில்லை!

வால்டர் வின்செல் (Walter Winchell) என்ற பிரபல அமெரிக்கப் பத்திரிகை எழுத்தாளர் நீக்ரோக்கள் பலரைச் சந்தித்து "ஹிட்லர் பிடிபட்டால் அவனை எவ்விதம் நடத்த வேண்டும்?" என்று கேட்டார். நீக்ரோ மாது ஒருத்தி "அந்த ஹிட்லருக்குக் கறுப்புச்சாயம் பூசி, அமெரிக்காவில் கொண்டுவரப்பட்டால் தனித் தண்டனை யாதொன்றும் வேண்டாம்!" என்று பதிலளித்தாள்.

ஆல்பிரெட் ரோஸன்பர்க் என்ற பிரபல நாஜித் தலைவர் "ஜர்மனியர்கள் ஆரியர்கள், அவர்களே உயர்ந்தவர்கள், மற்ற உலக மக்களிடம் ஜர்மன் மக்களிடமுள்ள உயர்ந்தரக இரத்தமில்லை, ஆரியர்கள் ஜர்மனியர்களே! ஜர்மனியர்களே உலகத்தையாளச் சிறந்தவர்கள்" இவ்வாருகப் பிரசாரம் செய்தார். புத்தகங்கள் பல எழுதினார். இந்தக் கூற்றை நேசதேச வெள்ளையர்கள் பலமாகக் கண்டித்தார்கள் அப்பொழுது. இப்பொழுது?

வெள்ளையர்கள் எந்தத் தேசத்தவர்களைச் சேர்ந்தவர்களாயிருந்தபோதிலும் சரி, கறுப்பு மனிதர்களைக் கேவலாக மதிக்கும் துர்க்குணம் அவர்கள் இரத்தத்தோடு ஊறி நிற்கின்றது. ஆளும் ஜாதியார் அல்லவா அவர்கள்?

இப்படிப்பட்ட மனப்பான்மை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கறுப்பு மனிதர்களைப்பற்றி ஆபாசமாகவும் வெள்ளை எழுத்தாளர்கள் பலர் எழுதிவருகிறார்கள். பேவர்லி நிகொலஸ் என்ற வெள்ளையன் மூன்றுநாள் இந்தியாவைச் சுற்றிவிட்டு, மூன்று பக்கம் இந்தியர்களைப்பற்றி அவதூறாக எழுதித்தள்ளினான். நாம் சுதந்திர மக்களாய் வாழ்ந்தால் வெள்ளையர்களுக்கு நம்மை இழிவுபடுத்தத் துணிவு ஏற்படுமா? வெள்ளையர்கள் நீல இரத்தக்கலப்புள்ளவர்கள் என்ற பைத்தியக்கார அபத்த ஆராய்ச்சி இங்கு விளம்பரம் செய்யப்படுமா? எல்லாம் விதிஅய்யா விதி!

## அன்னக் காவடிகளும் :: :: :: :: அன்னதானமும்

அன்னக்காவடிப்பேர்வழிகள் மூவர் ஆற்றங்கரையில் கூடி அன்னதான கைங்கர்யமொன்றை நடத்தத் தீர்மானித்தனர். முதல் அன்னக்காவடி தனக்கும் தன்னைச்சேர்ந்தவர்களுக்கும் பல இலைகள் ஒதுக்கி வைக்கப்படவேண்டுமென அப்பொழுதே பாத்யம் கொண்டாட ஆரம்பித்தான். இரண்டாவது பேர்வழி மூன்று இலைகளின் பாத்யத்தைக் கொண்டாடினான். மூன்றாவது காவடிப்பேர்வழி பல இலைகளின் பாத்யத்துடன் தன் வளர்ப்புக் குழந்தைக்கும் ஓர் இலை ஒதுக்கப்படவேண்டுமென வாதித்தான். இதை மற்றக் காவடிகள் ஒப்புக்கொள்ள மறுக்கவே சச்சரவு உண்டாகி நாய்கள் எச்சில் இலைகளுக்கு அடித்துக்கொள்வதுபோல் ஒருவருக்கொருவர் தாக்கிக்கொண்டனர். அன்னதான திட்டம் பகல் கனவெனக் கண்டுகொண்டார்கள்!

இனி, கதையை விட்டுக் கருத்தை நாடிச் செல்வோம். இப்பொழுது வல்லரசுகளாக விளங்கும் பிரிட்டன், அமெரிக்கா, ருஷ்யா இவர்கள் ஸான் பிரான்ஸிஸ்கோ என்ற ஊரில் கூடி, உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதற்குத் திட்டம் வகுக்கத் தீர்மானித்தனர். ஒவ்வொரு வல்லரசும் சுயநலம்கொண்டு உலகத்தில் அதிக ஆதிக்கம் செலுத்தத் தீர்மானித்துவிட்டது. பிரிட்டன் தனக்கு மூன்று 'வோட்' வேண்டுமென்று சொல்லிவிட்டது. தவிர தன்னைச் சேர்ந்த குடியேற்ற நாடுகள், சாம்ராஜ்யப் பகுதிகள் இவைகளுக்குத் தனியாக வோட்டுக்கள் அளிக்கப்படவேண்டுமென்று சொல்லிவிட்டது. அமெரிக்கா தனக்கு சாம்ராஜ்ய மில்லாவிட்டாலும் தனக்கும் மூன்று வோட்டுக்குக் குறையாமல் கிடைக்கவேண்டுமெனக் கிளர்ச்சி செய்தது. ருஷ்யா தன் தேசத்திலுள்ள பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வோட் தனக்குக் கிடைக்கவேண்டியதோடு கூட தான் வளர்த்துவரும் போலந்துக் குழந்தைக்கும் ஒரு வோட் கிடைக்கவேண்டும் என்பதாக வாதாடியது.

பிரிட்டனும் அமெரிக்காவும் போலந்துக் குழந்தையின் பாத்யத்தை மறுக்கவே ருஷ்யா "இந்தியா அடிமை நாடு, தேசீய அரசாங்கமில்லை, அங்கு. ஆகவே இந்தியாவுக்கு எப்படிப் பிரதிநிதித்வம் அளிக்கலாம்?' என்ற பெரிய வெடிகுண்டை வீசிற்று. அந்தக் குண்டு பிரிட்டனைத் தாக்கியதில் பிரிட்டனுக்கு வாயடைத்துவிட்டது. அமெரிக்காவைத் தாக்கியதில் அமெரிக்கா தன் பாத்யத்தைச் சற்றுக் குறைத்துக்கொள்ள இணங்கிவிட்டது. ஆனாலும் ருஷ்யா தன் பிடியைத் தளர்த்தவில்லை. முதலில் பிரான்ஸ், சைனா இவைகளுக்கு அழைப்புக் கூட அனுப்பப்படவில்லை. பிரான்ஸ் சற்று உறுமியதும் அழைப்பு அனுப்பப்பட்டது. அப்பாவி சைனாவுக்கும் விஜயம்செய்ய உத்தரவு அனுப்பப்பட்டது! மற்ற ஐரோப்பிய சிறிய தேசங்களைப்பற்றிச் சிந்திப்பாரில்லை.

'உலக சமாதானப் பாதுகாப்பு மகாநாடு' 'சர்வதேச மகாநாடு' என்றெல்லாம் சொல்லிக்கொள்வதைவிட 'வல்லரசுகள் மகாநாடு' 'அகில உலக நடிகர்கள் மகாநாடு' என்பதாக நாமகரணம் செய்வதோ முற்றிலும் பொருத்தமானது.

சுயநலமும், பேராசையும், ஏகாதிபத்ய வெறியும் கொண்டுள்ளவர்களால் உலக சமாதானத்தை நிலைநாட்ட முடியுமா? அன்னக் காவடிகள் அன்னதானம் செய்ய முற்பட்ட கதைபோல்தான் ஆகும். மூன்று வல்லரசுகளும் சேர்ந்து மூன்றாவது மகா யுத்தத்திற்கு அங்குரார்ப்பணம் செய்யமுடியுமே தவிர உலக சமாதானத்தை ஒருநாளும் காக்கமுடியாது. கபட நாடகத்தைக் கண்டு உலக மக்கள் ஏமாறமாட்டார்கள்.

# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபிஸ்: மதராஸ்

ஸிடி ஆபிஸ்கள்:

சைனு பஜார், மாம்பலம், மைலாப்பூர்,
— திருவல்லிக்கேணி, பெரியமேட் —.

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | சானூர் | திருச்சினுப்பள்ளி |
| அனகாபள்ளி | மதுரை | சீயாழி | திலாறு (சிகாகோல்) |
| சிதம்பரம் | மருடேரு | தாடபள்ளிக்கூடம் | வேலூர் |
| சித்தூர் (கொச்சி) | பாலக்காடு | தஞ்சாவூர் | விஜயபுரம் (திருவாரூர்) |
| காஞ்சீவரம் | பார்வதிபுரம் | திருநெல்வேலி ஜங்ஷன் | விருதுநகர் |
| ஈரோடு | புதுக்கோட்டை | திருநெல்வேலி டவுன் | விஜயநகரம் |
| காரைக்குடி | | | |

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் நடத்தப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.



ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

## புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

# M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

27 APR 1946

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்



ராமய்யா

சென்ற மலரில் நான் பிடில் வாத்தியத்தைக் குறித்து எழுதிய அபிப்பிராயங்களை ஆமோதிக்காதவர்கள் பலர் இருப்பார்கள் என்று யூகித்தே எழுதினேனல்லவா? அதற்கு அத்தாக்ஷியாக சிலநாட்களுக்குமுன் ஒரு நண்பர் என்னைப்பார்த்ததும் "நீர் பிடில் வாத்தியத்தைப்பற்றி எழுதியதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதுவுமல்லாது, பிடில் வாத்தியத்துக்குப் பதிலாகச் சாரங்கி வாத்தியத்தைப் பக்கவாத்தியமாக வைத்துக்கொண்டு வித்வான்கள் கச்சேரிகள் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறீரே, அது மிகவும் அரோசகமான யோசனை என்றே சொல்லுவேன்" என்றார். அதற்கு நான் சொன்ன ஜவாபு பின்வருமாறு:—

(1) எழுதிய அபிப்பிராயம் என்னுடையதல்ல, அம்மாஞ்சி யுடையது. ஆதலால் அதைக்குறித்து, தர்க்கம் செய்ய உத்தேசமுண்டானால் அம்மாஞ்சியுடன் நடக்கட்டும்—ஆனால், அந்த அபிப்பிராயம் என்னுடைய அபிப்பிராயமுமாகவே வைத்துக்கொள்ளலாம்; தர்க்கத்துக்கு மாத்திரம் எனக்குத் தைரியமில்லை.

(2) அம்மாஞ்சி சொன்னதாவது, பிடில் ஒரு பிரமாதமான வாத்தியம்—தற்காலத்தில் பழக்கத்திலுள்ள வாத்தியங்களில் பிடிலுக்கே உன்னத அந்தஸ்து கொடுக்கவேண்டும்—ஆனால் அதை வாசிக்க எடுப்பவர்களுக்கு யோக்கியதை, ஞானம், சாதகம் மூன்றும் ஏராளமாக இருக்கவேண்டும்.

(3) பெரிய யோக்கியதை உள்ளவர்கள் தற்காலத்தில் குறைந்து விட்டனர். பிடில் வாத்தியம் ஒரு பக்கவாத்தியமாகவே கருதப்படுகிறதேயல்லாது, அதற்கு உரிய கௌரவம் குன்றிவிட்டது—அந்த வாத்தியத்திலுள்ள விமரிசையான அம்சங்கள் அநேகமாயிருந்தும், அவைகளை வெளிப்படுத்தி, கேட்பவர்களைச் சந்தோஷப்படுத்தத் தகுந்த பிரமேயங்கள் தற்கால சங்கீதக் கச்சேரிகளில் காணப்படவில்லை. உதாரணமாக, சாரீர ஸாதகம் (voice culture) உள்ள வித்வான் ஏதாவது ஒரு ரக்திராகத்தில் ஒரு ஜீவஸ்வரத்தைக் கார்வையுடன் பிடித்துக் காட்டினால், பிடில் வாத்தியக்காரன் அனுசரணையாக (Bowing technique) அதாவது வில் சாதகத்திறமையினால் வித்வானுடைய மனோபாவத்தையும், சப்தத்தையும் சோபிக்கச்செய்யலாம்-ஆனால் (Sound effect) எனப்படும் சப்த் சுகத்தை முற்றிலும் உதறிவிட்டு, ராகங்களைப் பாடும் வித்வான்களுக்கு அனுசரணையாகப் பிடில் வித்வான்கள் எதற்கு?

(4) ரக்தி, கார்வை, சுகம் மூன்றும் சேர்ந்து உள்ள சாரீரங்களுக்கே பிடில் பக்கவாத்தியமாக அடுக்கும். தற்காலத்தில் இவை மூன்றும் சேர்ந்து இல்லாதிருப்பதால், பிடில் பக்கவாத்தியமாக இருப்பது, அந்த வாத்தியத்துக்கும், அதைக் கையாளுபவர்களுக்கும், ஓர் அபசாரம்.

(5) தற்காலக் கச்சேரிப் பத்ததியில் பிடில் வாத்தியக்காரருக்குச் சமகௌரவம் கிடையாது. காத்திரவித்வான் உளறினாலும் அவனுக்கு அனுசரணையாக உளறவேண்டும். அவன் காலேயரைக்கால் கட்டை ஸ்ருதியில் செக்குமேடு சப்தம்செய்தாலும் பிடில்காரன் அனுசரணையாய் ரம்பப்பொடியாக அறுத்துத் தள்ளவேண்டும். அப்படிச் செய்யாவிடில் "என்ன பிரயோஜனம் சார், சேர்ந்து வாசிக்கத் தெரியல்லையே" என்பார்கள். காத்திரவித்வான் கொடுக்கைப் பிடித்துக்கொண்டே போகத் தயாராயிருக்கும் பிடில்காரனுக்குத்தான் பிழைப்பு. ஆதலால் இந்தப் பிழைப்புக்கு இங்கிலீஷ் பிடிலும், இடாலியன் பிடிலும் எதற்கு? கொட்டாங்கச்சிப் பிடில் போதுமே!

(6) இதையெல்லாம் உத்தேசித்துத்தான் அம்மாஞ்சி, "அவ்வளவு கேவலமாகக் கொட்டாங்கச்சிப் பிடில் வரையிலும் இழுத்து விடவேண்டாம். கண்களுக்குச் சிறிது கனிசமாயிருக்கும் சாரங்கி வாத்தியமே வைத்துக்கொள்ளட்டும்" என்கிறான்.

(7) ஆழ்ந்த யோசனை செய்துபார்த்தால் தற்காலத்திய காத்திர வித்வான்களுக்குச் சாரங்கி வாத்தியத்தில் உள்ள அனுசரணை எதேஷ்டம். அதற்குமேல் வேண்டியதில்லை. அவர்களுடைய சாரீரங்களில் ஏற்படும் வேலைப்பாட்டிற்குப் பிடில் முற்றிலும் அனுவசியம்.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களில் பெரும்பாலும் சிருஷ்டித்தன்மையாகக் காணப்படவில்லையென்றும், சம்ஹாரத்தன்மையாகவே இருக்கின்றனவென்றும் பலர் சொல்லி நான் கேள்விப்பட்டதுண்டு. முதல் தோற்றத்துக்கு அப்படித்தானிருக்கும். சிறிது கவனத்துடனும் ஆராய்ச்சியுடனும் கிளர்ச்சி செய்தால் சம்ஹார பாவம் மாறி, சிருஷ்டிபாவம் வெளிவரும். ஒரு காலத்திலுள்ள நாகரிகத்தில் அதிருப்திகரமான விஷயங்கள் கண்முன் ஏற்பட்டால், சீர்திருத்தம் தொடங்குமுன் சம்ஹாரம் ஏற்படத்தான்வேண்டும். இது யாவரும் அறிந்தவிஷயமே. உடுக்கும் வஸ்திரத்தில் அழுக்கு மேற்கொண்டால், முதலாவது அதை வெளுக்கவேண்டும், பிறகு கஞ்சி ஏற்றவேண்டும், அதற்குப்பிறகு சிறிது நீலம் ஏற்றி, கடைசியாக அதை இஸ்திரி செய்தால் துணி உடுக்கத் தகுந்ததாயிருக்கும். அழுக்குத் துணியை யெடுத்து இஸ்திரிசெய்து உடுத்திக் கொள்ளலாகுமா? சரீரத்தில் அழுக்குச் சிரங்குகள் வந்துவிட்டால் அவைகளைக் கரகர வென்று ரத்தம் வந்தாலும் வரட்டும் என்றும் தேய்த்து, அலம்பி, உலர்த்தி, பிறகு கந்தகத் தைலம் வைத்துப் பொசுக்கினால் குணம் ஏற்படும். இந்த மர்மம் சென்னையில் நூற்றில் சுமார் ஐம்பது பேருக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் அழுங்குச் சிரங்கினால் பாதிக்கப்பட்டவர் ஜனத்தொகையில் கிட்டமுட்டப் பாதிக்குமேலிருக்கின்றனர். அதுபோலவே, சங்கீத அபிவிருத்தியில் அதிருப்திகரமான தோஷங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று நாமறிந்தபின் அதற்குச் சிகித்சை தேடுவதில் தயாதாக்ஷிணியம் பார்த்தால் முடியுமா? தற்கால சங்கீத சபைகளால் ஒழுக்கமான புது இயக்கங்கள் ஒன்றும் ஆரம்பிக்கமுடியாது என்பது யாவரும் அங்கீகரிக்கவேண்டிய கொள்கையே! சபைகளுக்கோ பணம் வேண்டும். பணத்தை உத்தேசித்துக் கச்சேரிகள் ஏற்பாடு செய்தால், வித்வான்களுடைய சௌகரியங்களையும், அவர்களில் ஒருவருக்கொருவர் வைத்திருக்கும் அன்னியோன்ய பாவங்களையும், அனுசரித்துக் கோஷ்டி சேர்க்கவேண்டும். கோஷ்டி சகவாசம் சங்கீத சங்கடம்! சங்கட சங்கீதத்துக்குத்தான் பாமர கரகோஷம் அதிகம்; பாமர ஜனசங்கம் அதிகரித்தால்தான் சபைக்கு அபிவிருத்தி துரிதம்! இப்படிப் பார்த்துக்கொண்டுபோனால் சுற்றிச் சுற்றி ஒரே இடத்துக்குத்தான் வந்துமுடியும். அதாவது சங்கீத சபைகளுக்கும் சுத்த சங்கீதத்துக்கும் பொருத்தம் கிடையாது. இது நிற்க, சில வருஷங்களாகக் கர்னாடக சங்கீதம் என்பது கச்சேரி பத்ததியை ஒட்டி வெளிக்கிளம்புகிறதே தவிர வேறு மார்க்கத்தில் வெளியே வருவதேயில்லை. வித்வான்களெல்லாரும் முகத்தைக் காட்டுவது கச்சேரிகளில்தான். அவர்களுக்குச் சாதகத்துக்குக்கூட சமயம் கிடைக்காமல் ஓயாமல் கச்சேரிகள் செய்வதில்தான் நாட்கள் கழிகின்றன. இன்றைய தினம் மதராஸ், நாளை திருச்சினாப்பள்ளி அடுத்தநாள் தேவகோட்டை, நான்காவதுநாள் மதுரை, ஐந்தாவதுநாள் திருநெல்வேலி, இப்படியே ஜட்கா குதிரைகள் மாதிரி தினம் தோறும்கச்சேரிகள் செய்வதேகாலப்போக்கு. முன்னொரு காலத்தில் மாதத்துக்கு ஒரு கச்சேரி நடத்தினால் ஒரு சபை பெரிய சபையாகும். இப்பொழுது ஒவ்வொரு சபையிலும் வாரத்துக்கு ஒரு கச்சேரி நடைபெறுகின்றது. ஆதலால் என்ன ஏற்பட்டது? பாடுபவர்களுக்கும், பாட்டைக் கேட்பவர்களுக்கும் ஓய்வு என்பது கிடையாது. இது இப்படியிருக்க, சங்கீதம் பயிலும் சிறுவர்கள் சிறுமிகள் பழக்க ஒழுக்கங்கள் எப்படி? பயிற்சி தொடங்கி ஒரு மாதத்துக்கெல்லாம் ரேடியோவில் 25 நிமிஷம் பாட்டு. அதிலும்கூட, உழக்கில் கிழக்குமேற்கு என்பதுபோல் இரண்டு ஆவர்த்தம் ஸ்வரம் பாடிவிடுங்கள். பிறகு ஒரு வருஷத்துக்குள் ஒரு கான்ஸர்ட் ப்ரோக்ராமில் பாடிவிடவேண்டும்—அதாவது $1\frac{1}{2}$ மணி நேரம் கச்சேரி செய்துவிடவேண்டும். கான்ஸர்ட் ப்ரோக்ராம் என்றால் என்ன தெரியுமோ? கச்சேரி துவக்கத்திலும், மத்தியிலும், அந்தியிலும், சூத்ரதாரி சொல்லுவார்—இப்பொழுது நீங்கள் கேட்கப்போவது (அல்லது நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பது, அல்லது இதுவரை நீங்கள் கேட்டது) ஸ்ரீமதி ஸ்வரத்காரி அம்மாள்; பக்கவாத்தியங்கள் பிடில் ஊத்தப்பம், மிருதங்கம் மைஸூர் போண்டா"—இவ்வளவுதான்—அதாவது பக்க வாத்தியக்காரர் பெயர்களைச் சொல்லி ஒலிபரப்புச் செய்வித்தால் அது கான்ஸர்ட் ப்ரோகராம் அல்லது முதல் வகுப்புக் கச்சேரியாகும்—சாதாரணமாக நீங்கள் கவனித்திருக்கலாம். வக்கீல் ஒருவர் பிரபலமானவர் என்று எப்படித் தெரிந்து கொள்ளலாமென்றால், அவர் ஏதாவது ஒரு விசாரணையில் ஆஜராயிருந்தால், அன்றைய தினம் "ஹிந்து" பத்திரிகையில் பின்வருமாறு வரும்—"இந்த விசாரணையில் மனுதார் தரப்பு ஸ்ரீமான் எமகண்ட ஐயங்கார், ஸ்ரீமான்கள் ராகுகாலம், குளிகைகாலம், வர்ஜ்யம் பந்துலு இவர்களால் சகாயிக்கப்பட்டு ஆஜரானார்" அப்பொழுது மூன்று ஜூனியர்களுடன் ஆஜராகும் வக்கீல் ஒருவர் பிரபலரே என்று ஏற்படும்—அதுபோலவே சங்கீதத்திலும் பக்கவாத்தியங்களுடன் ரேடியோவில் கச்சேரி செய்து, மதராஸில் இரண்டொரு சபைகளிலும் கச்சேரி செய்துவிட்டால் வித்வான் பிரபலராய்விடுவார் என்பது தற்கால ரீதி—ஆகவே, கர்னாடக சங்கீதத்தின் நிலைமை என்ன? கச்சேரி பத்ததி, கச்சேரி பாணி, கச்சேரி யோக்கியதை-கச்சேரி பத்ததி என்பது என்ன? ஒரு வர்ணம், நான்கு கீர்த்

தனைகள், அவைகளுக்கு 2, 4, 8, 16 ஆவர்த்தம் ஸ்வரங்கள், ஒரு பல்லவி, நான்கு சில்லறைத் தமிழ் உருப்படிகள், ஒரு போக்கணங்கெட்ட ஜாவளி, அனுமதேயராகத்தில் ஒரு தேசிய கீர்த்தனை, வாமேபூமிசுதாம் அல்லது ஸ்ரீராமசந்திர ஸ்ருத பாரிஜாதஹ என்ற ராகமாலிகை சுலோகம், பவமான சுதுடுபட்டு—? கச்சேரி பாணி என்பதோ? ஓர் உருப்படி சவக்கம், ஓர் உருப்படி மத்திமகாலம், பாக்கி எல்லாம் கெடிலம் வாராவதியில் போட் மெயில் செய்யும் சப்தம், சில்லறை உருப்படிகளெல்லாம் தவடைசாதக சம்பிரதாயம்—கச்சேரி யோக்கியதை—கதர் ஷர்ட், சரிகை வேஷ்டி, சிறிது நஸ்யப் பிரயோகம், உத்யோகஸ்தர்களிடம் வினயம், ரேடியோ அதிகாரிகள் அபிமானம், சபை செக்ரிடரிகளுடைய அனுக்கிரஹம், கதம்ப ஸ்வரக் கோவை நிபுணத்வம், கேள்விப்படாத அபூர்வ ராகங்களில் பல்லவிபாடி "பல்வல ப்லமனம்" செய்யும் தைரியம்.

சங்கீதப் பழக்க ஒழுக்கங்கள் இப்படியிருக்க, சுத்தமான சுக சங்கீதம் கேட்க விரும்புகிறவர்கள் சபைகளையும், வித்வான்களையும் பார்த்து, "மயிலே, மயிலே இறகு கொடு" என்று கேட்டுக்கொண்டிருந்தால் ஆத்ம திருப்தி ஏற்படுமா? சம்ஹாரம் இல்லாமல் புதிய சிருஷ்டி எப்படி முடியும்? ஆயினும் சபைகளையும்,கச்சேரி பத்ததியையும் தொலைத்துவிடும்படி அம்மாஞ்சி சொல்லவில்லை. அவன் சொல்வது மிகவும் சுலபமான வழி. தயவு செய்து கவனியுங்கள்.

சபைகளும், கச்சேரிகளும் ஓங்கிச் செழிப்புடன் நடக்கட்டும்—சங்கீத அபிமானிகளும், நிஜ சங்கீத அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கும் தனவந்தர்களும், வேறு சந்தர்ப்பங்களிலும் வேறு மார்க்கங்களிலும் வித்வான்களையும் சங்கீத வித்தையையும் போஷிக்கலாகாதா? என்ன விதத்தில் போஷிப்பதையா, அம்மாஞ்சிவாள், சொல்லும், என்பீர்களோ? சொல்லுகிறேன் கவனியுங்கள்:—

(1) மகாமகம் என்ற உற்சவத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கூடிய இடத்தில் கோஷ்டி சேர்த்துக் கச்சேரி வையுங்கள், உல்லாசமாகக் கேட்பவர்கள் கேட்கட்டும்—ஒரு பெரிய கலியாணக் கூட்டத்தில் இரண்டாயிரம் ஆட்கள் சேருமிடத்தில், நூறு பேர் வரவும் போகவும் ஏற்படுமிடத்தில், சந்தடிக்குத் தகுந்தமாதிரி வாய்ப்பாட்டு, பிடில், மிருதங்கம், கஞ்சிரா மோர்சிங்கு எல்லாவற்றுடன் கச்சேரி நடக்கட்டும் — குதூகலத்துக்குத் தகுந்த கூப்பாடு நடக்கட்டும். மயிலைச் சபையிலும், தியாகராஜ சபையிலும், ரஸிக ரஞ்சனி சபையிலும், பார்த்தஸாரதி ஸ்வாமி சபையிலும், தியாகராய நகர் சபையிலும், நுங்கம்பாக்கம் சபையிலும், எழும்பூர் சபையிலும் மாதந்தோறும், அல்லது வாரம்தோறும் கச்சேரிகள் நடக்கட்டும். இன்னும் மியூஸிக் அகாடமி ஸீரீஸ்களும் மற்றைய ஸீரீஸ்களும்கூட நடக்கட்டும். ஆனால் 50 பேர், 100 பேர் கூடும் கூட்டங்களிலும், அதாவது ஒரு சீமந்தம், ஒரு கிரஹப்பிரவேசம், ஓர் ஆண்டு நிறைவு, ஒரு ஷஷ்டி அப்தபூர்த்தி, ஓர் உபநயனம் இவைகளிலும்கூட மதில் சுவரும் கேட்டு உடையும்படியாகக் கோஷ்டி சங்கீதம் வேண்டுமா? அப்பொழுதாவது ஒருபெரிய வித்வானை கூப்பிட்டு,"ஸ்வாமி உம்முடைய கச்சேரி சேஷ்டைகள் வேண்டாம், சிப்பந்திகளும் வேண்டாம், தம்புராவை மாத்திரம் எடுத்துக்கொண்டு வாரும், ஒரு மணி நேரம் ஆத்மார்த்தமாக உம்முடைய குருவை நினைத்துக்கொண்டு சுகமாகப் பாடி ஆநந்திப்பீரோ?" எனலாகாதா? கச்சேரிகளில்தான் வித்வான்கள் ஆத்மார்த்தமாகப் பாடுவதில்லை என்பதை அவர்களே ஒப்புக்கொள்ளுவார்கள். அவர்களுக்கு வேறு சம்பவங்களிலாவது சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தலாகாதா?

(2) நமது நண்பர் செம்மங்குடி ஸ்ரீனிவாவாஸய்யரைப்பற்றி உதாரணமாகச் சொல்லுவோம். திருவனந்தபுரத்திலிருந்து மதராஸுக்கு வருகிறார் என்போம்-வந்தவுடன் அவரிடம் சென்று "ஸீனிவாஸய்யர்வாள்-உங்களிடத்தில் ஸ்வாதி திருநாள் உருப்படிகளில் நவராத்திரி கீர்த்தனைகள் எல்லாம் ஒரு முறை பாடிக் கேட்க ஆவலாயிருக்கிறோம்-நாங்கள் பத்துப்பேர்வழிவள் கச்சேரிக்கு வந்தால் ஒன்றைக்கேட்கலாம். ஆனால் இன்னும் சிலவற்றைக்கேட்க ஆவலாயிருக்கிறோம். இந்த முறை இங்குத் தாமசிக்கும் இரண்டு மூன்று தினங்களில் ஒரு தினம் இரவு எங்களுக்கு நீங்கள் தயவுசெய்து பாடிக் கேட்பிக்கவேண்டும். நல்ல சாப்பாடு உண்டு—ஆநந்தமாக வெற்றிலை சீவல் சந்தனம் உண்டு—எங்களால் ஆனது சிறிது மரியாதை சம்பாவனையும் செய்கிறோம்" என்று சொல்லப் பத்துப் பேர் மதராசில் ஏற்படமாட்டார்களா? இப்படிப் பத்துப் பத்துப் பேராக ஆத்மார்த்த சங்கீதத்தைப் பெருக்க ஆட்கள் நான்கு மூலைகளிலும் ஏற்பட்டால் வித்வான்களுக்கும் உற்சாகம் அதிகரிக்கும்; அம்மாஞ்சியைப் போலுள்ள பேர்வழிகளுக்கும் செவிஊட்டல் ஏற்படும்.

(3) அல்லது நமது நண்பர் அரியக்குடியை உதாரணமாகச் சொல்லுவோம்—அய்யங்காரிடம் க்ஷேத்ரஞயர் பதங்கள் பாடாந்தரம் நிரம்ப உண்டென்று கேள்வி. கச்சேரிகளில் கேள்வி வெகு சிரமம்—அவரையும் மேலே சொன்னபடி பிரமேயங்கள் சேமித்துவைத்து உற்சாகப்படுத்தலாகாதா?

(4) சபைகளும் கச்சேரிகளும் பெருக்கு ஒரு புறம் இருக்க, சங்கீதப்பிரியர்கள் சிறிய கூட்டங்களாகக் கூடி வித்வான்களுடன் பழக்கத்தைப் பெருக்கி, அவர்களுடைய வித்வத்தைப் போஷிக்கவும், ரசித்துப் பெருக்கவும், அவர்களுக்கும் ரசிகர்களுக்கும் அறிமுகம் அதிகரிக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படவும், பெரிய பட்டணங்களில் புதிய இயக்கங்கள் ஏற்பட்டால்தான் Musical renaissance என்பது உண்டாகும் என்கிறான் அம்மாஞ்சி. காலையில் ரயிலிலிருந்து குதித்து, சாயந்திரம் கச்சேரி செய்து, மறுதினம் வித்வான்கள் ஓட்டம் பிடித்தால், ரசிகர்களுக்கும் வித்வான்களுக்கும் அறிமுகம் குன்றிவிடாதா? வருஷத்துக்கு ஒருமுறை தியாகப்பிரும்ம ஆராதனையிலேயோ, அல்லது அகாடமி ஸீரிஸ் கச்சேரிகளிலேயோ நான்கு ஐந்து தினங்கள் சந்திந்தால் சங்கீத சம்பந்தமான விசாரணைகளும், சர்ச்சைகளும் எப்படிப் பெருகும்?

5. கச்சேரிப் பத்ததியில் கோஷ்டி சங்கீதம் வேறு. ஏகாந்தமாகத் தம்புராவை வைத்துக்கொண்டு பத்து ரசிகர்களுக்குப்பாடும் சங்கீதம் வேறு. பிற்கூறிய சங்கீதப் பெருக்குத்தான் இப்பொழுது முக்கியமாக மதராஸில் வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டி, பத்துப்பேர் முயன்று ஒருபுது இயக்கம் கிளம்பினால், கர்னாடக சங்கீதத்துக்குப் புதிய மெருகு உண்டாகும், வித்வான்களுக்கு நூதனமான ஓர் உற்சாகம் ஏற்படும், ரசிகர்களுக்குச் செவிச் சுவை அதிகரித்துச் சங்கீத சம்பந்தமான அபிவிருத்தி எல்லாவற்றிலும் ஊக்கம் அதிகரிக்கும் என்கிறான் அம்மாஞ்சி!


## நவீன ரகங்களில்

கல்யாண காலத்திற்கேற்ற—
ப்ரெஸென்டேஷன் - செட்டுகள்
குடும்பத் தேவைக்கான வெள்ளி பாத்திரங்கள்
தங்கம் - கல் நகைகள்
புளூ ஜாகர் - வைர நகைகள்

**ரெடியாக எப்பொழுதும் நாணயம் கியாரண்டியுடன்**
**"VISI" ஸீல் போட்ட சாமான்கள்**

கிடைக்கும் இடம்:

**ஏ. ஆர். விஸ்வநாத செட்டியார்**

[ S/o ஏ. ஆர். ராஜகோபால செட்டியார் ]

100, பெரிய தெரு] ஷராப் வியாபாரம் [கும்பகோணம்

ஆர்டர்களுக்கு குறிப்பிட்ட டயத்தில் செய்துகொடுக்கப்படும்.

# நோயற்ற வாழ்வு

தி. சே. சௌ. ராஜன்

தடுக்கக்கூடிய நோய்களால் வகை தெரியாமல் அல்லல் படும் நமது மக்களின் உயிரை வாங்குவது மகாமாரி அல்லது பெரிய அம்மை என்னும் தொத்துநோய். இந்த நோய் நமது நாட்டில் வெகு காலமாகப் பரவி உலாவி வருகிறது. வருஷந்தோறும் முக்கியமாக, கோடைக் காலத்தில் அதிகமாகக்காணப்படுகிறது. இந்த நோயைப் பற்றித் தெரியாத கிராமங்கள் நமதுநாட்டில் கிடையாதென்றே சொல்லலாம். எவ்வளவு அற்பமான குக்கிராமமாக இருந்தாலும் அங்கு மாரிஅம்மனுக்குக் கோவிலும், பூசையுமுண்டு. மாரி அம்மனைக் கண்டு பயப்படாத கிராமவாசியைத் தமிழ் நாட்டில் காண்பதரிது. "மாரி ஆயிக்கு முத்துப்போடு" என்று ஒரு பிச்சைக்காரி கேட்பாளாகில் இல்லையென்று மறுக்கப் பரம ஏழைகூடத் துணியமாட்டான். இதற்குக் காரணம் மாரி அம்மனுடைய கோபத்திற்கு ஆளாகக் கூடாது என்பதுதான். மாரிக்குக் கோபம் வந்தால் வீட்டில் நுழைந்து விடுவாள்; அப்படி நுழைந்தால் சில உயிர்களை வாங்காமல் போகமாட்டாள். இது கிராம வாசிகளின் பரிபூரண நம்பிக்கை. இதை அசைக்க முடியாது. மகாமாயி எங்கே பிறந்தாள், ஏன் பிறந்தாள், ஏன் இந்த நாசவேலையில் ஈடுபட்டுவிட்டாள், இதனால் அப்பெண் தெய்வத்திற்கு என்ன ஆனந்தம்; மாரிஆயி பயத்தைக் காட்டி எவ்வளவு பெண்பிள்ளைகள் சோம்போறித்தனமாகப் பிச்சை எடுத்துப் பிழைக்கிறார்கள்? இதையெல்லாம் பற்றி விசாரிப்பதில் பயனில்லை. ஒரு கோரமான நோய்க்கு அதிகாரி என்கிற முறையில் நமது நாட்டில் மக்களின் மனதில் என்றும் குறையாத ஆட்சி மாரிஆயி நடத்துகிறாள். இது பொது ஜனங்களின் அறியாமைக்கும், குருட்டு நம்பிக்கைக்கும், பயத்திற்கும் அறிகுறியா? மாரி அம்மனிடத்தில் நம்பிக்கையில்லாத மற்றச் சாதியார்களிடம் அவள் எப்படி நடந்துகொள்ளுகிறாள்? நம்பினவர்களைத்தான் தொல்லை செய்யும் குணமா? அப்படியானால் இந்த மூட நம்பிக்கையை விட்டுவிட்டால் நோய் வராமலிருக்குமா? இதெல்லாம் பெரிய விசாரணை. ஆராயப்புகுந்தால் பலனுள்ள ஒரு முடிவிற்கு வர முடியாது. வந்தும் பிரயோசனமென்ன? மக்கள் பல ஆண்டுகளாக ஆங்கில அரசாங்கத்தின் கீழும் இந்த மூடபக்தியில் உழன்று வருகிறார்கள். அரசாங்கமும் பார்த்துக் கொண்டுதானிருக்கிறது.

ஆங்கில நாட்டிலும், ஐரோப்பாவிலும் சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், பெரிய அம்மை நோய் ஏராளமாகப் பரவியிருந்தது. வருஷந்தோறும் ஆயிரக்கணக்காக மக்கள் மாண்டு கொண்டிருந்தார்கள். ஆனால் நாளடைவில் குறைந்துகொண்டு வந்து, சென்ற இருநூறு ஆண்டுகளாக இந்த நோய் இருந்த இடமே தெரியாமல் மறைந்து விட்டது. ஆங்கில வெள்ளை மாரிஆயி நமது நாட்டுக் கறுப்பு மாரிஆயியோடு சேர்ந்துவிட்டதுபோல, தோன்றுகிறது சீமையில் மறைந்துபோன நோய் நம் நாட்டைவிட்டும் நீங்கிவிடக் கூடுமென்பதற்கு அத்தாட்சி இருக்கிறது. முயன்றால் முடியும். யார் முயற்சி செய்யவேண்டும்? மக்களும் அரசாங்கமும் சேர்ந்து பாடுபட்டால் இந்த நோயைத் தடுத்துவிடலாம். இந்த நோய்க்குக் காரணம் என்ன? உண்மையில் காரணம் தெரியாது. ஆகையால் மனிதன் அறிவிற்குப் புலப்படாமலிருப்பதால் தெய்வக் குற்றத்தினால் உண்டாகிறதென்பது அவ்வளவு மூடத்தனமென்று கருதமுடியாது. தொத்துநோய் என்பது மட்டில் சந்தேகமில்லை. இந்த நச்சு, தொற்றும் குணமுடையது என்பதை வெகு காலமாகப் பாமரமக்களும் நன்கு அறிந்திருக்கிறார்கள். மகா மாரியின் திருவிளையாடலால் உடல் பூராவும் கொப்புளங்கள் கிளம்பி, அவைகள் சீழ் கோத்துக்கொண்டு, துர்நாற்றமுண்டாகி, பலவித இன்னல்களுக்கும் தப்பினால் உயிர் பிழைப்பது உண்டு. அம்மை நோய் வந்தால், மகா மாரி வீட்டிற்கு வந்திருக்கிறாளென்றும், நோயாளியின்மீது கருணைகூர்ந்து அவளை அடைந்திருக்கிறாளென்றும், அதனால் யாரும் துக்கம் கொண்டாடக் கூடாதென்றும் சொல்வது வழக்கம். இந்த நோய்க்கு மருந்துகொடுக்கக் கூடாதென்பது நமது கொள்கை. எந்த மருந்து கொடுத்தும் பயன்படாத காரணத்தால் இந்த எண்ணம் பரவ நியாயமிருக்கிறது. இதுமட்டிலுமா? மருந்து ஏதாகிலும் கொடுத்தால் நோய் கடுமையாகிவிடும் என்றுகூட அபிப்பிராயம். இந்தப் பயத்தினால் பிழைப்பவர்களுக்கு உண்டாகும் பலவித இடையூறுகள் தடுக்

கப்படாமல் பலர் பார்வை யிழந்து, முகம் அம்மைத் தழும்புகளால் விகாரமடைந்து, நீக்கமுடியாத துன்பத்தை ஆயுள் பூராவும் அனுபவிக்கவேண்டியிருக்கிறது. குணப்படுத்தமுடியாத நோயை வராமல் தடுப்பதுதான் முறை. மகாமாரியை நோய்த் தெய்வமாக்காமல் சுகத்திற்குரிய தெய்வமாக மாற்றவேண்டும். இதுதான் நீதி. இதுவே தர்மம். அப்படி வந்தாலும் பரவவொட்டாமலாவது தடுக்க வேண்டும். அம்மை நோய் வந்திருக்கும் வீட்டு வாசலில் வேப்பிலைக்கொத்தைச் சொருகி வைப்பது நமது வழக்கம். சுகாதார அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டிய கடமை தற்கால நாகரிக வழக்கம். பெரும்பாலும் கிராமங்களில் ஒருவரும் தெரிவிப்பதில்லை. கிராம முனிசிப்தாரிடம் தெரிவிக்கவேண்டியது சட்டம். அப்படித் தெரிவித்தால் அவர் சுகாதார அதிகாரிகளுக்கு ரிபோர்ட் செய்து, அவர்களைக்கொண்டு தடை முறைகளைக் கையாண்டு நோய் பரவாமல் தடுக்க ஏற்பாடு செய்வதற்காக இந்த அறிக்கை அவசியம். ஆனால் இந்தத் தடை முறைகளில் கிராமமுனிசீப், குடிகள் இருவருக்குமே நம்பிக்கை கிடையாது. மேலும் மாரி ஆயியைத் தடை செய்தால் அம்மன் கோபம்கொண்டு தங்கள் பேரில் பாய்ந்துவிட்டால் என்னசெய்வதென்பதான திகில். முடிவில் நோய் பலப்பட்டு அநேகர் இறந்த பிறகுதான் அதிகாரிகளுக்குத் தகவல் எட்டும். ஒரு தாலூகாவிற்குச் சுகாதார அதிகாரி ஒருவர்தான். இவரிருக்குமிடம் இந்த ரிபோர்ட் தேடிச்சென்று, இவர் நோயுற்ற கிராமம் வந்து சேருவதற்குள்ளாகவே நோய் ஒருவாறு அடங்கிவிடும். நோய் வராதவர்களுக்குச் சுகாதார அதிகாரி தடுப்பு அம்மை குத்த ஆரம்பிப்பார். ஊசி குத்தும் தகவல் கிராமத்தில் பரவின உடன் அநேகர் பயந்து ஒளிந்து ஓடிவிடுவார்கள். மிகுதியிருப்பவர்களில் சற்றுச் செல்வாக்கு உள்ளவர்களுக்குக் கட்டாயமாக ஊசி போடுவதற்குச் சுகாதார அதிகாரியும் பயப்படுவார். போன மாதத்தில்தான் குத்திக்கொண்டேனென்று சாக்குப்போக்கு சொல்லித் தப்பிவிடுவார்கள். ஏதோ தெரிந்தும், தெரியாமல் அகப்பட்டுக்கொண்ட சில ஏழைகளே ஊசி குத்திக்கொள்ளுவார்கள். அவர்களும் சுகாதார அதிகாரி கண் மறைந்தவுடன் அம்மைப் பாலைக் கழுவிவிடுவார்கள். இந்த மனப்பான்மையுடன் சுகா


# S. K. R. & CO.

PERFUMERS

Arunachala Asari St. :: Jothy Building

**SALEM TOWN**

1. சக்தி அகர்பத்தி
2. சக்தி ஜவாஜிபத்தி
3. சக்தி தர்பார்பத்தி
4. பத்மா அம்பர்பத்தி
5. ஜோதி ஜவாஜிபத்தி
6. S. K. R. ஸ்பெஷல் கஸ்தூரிபத்தி

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு

**எஸ். கே. ஆர். அண் கோ.**

பார்ப்யூமர்ஸ்

அருணசல ஆசாரி தெரு :: ஜோதி பில்டிங்

சேலம் டவுன்

தார வேலை நமது நாட்டில் நடைபெறுகிறது. வீட்டில் அம்மை நோய் வந்திருப்பதற்கு இப்பொழுதும்கூட வேப்பிலையை வீட்டின் முகப்பில் சொருகிவிடுவது நல்ல பயன் தரும் முறை. இதைக்கொண்டே கிராம அதிகாரி ரிபோர்ட் செய்யலாம். வீட்டில் பிச்சைக்காரர்கள் பிச்சை கேட்கமாட்டார்கள். விருந்தினர், உறவினர், அக்கம் பக்கத்திலுள்ளவர்கள், வீண் வம்பு பேசி காலங்கழிப்பவர்கள் ஒருவரும் உள்ளே நுழையமாட்டார்கள். அம்மை வார்த்திருக்கும் வீட்டாரும் மற்ற வீடுகளுக்குப் போகக்கூடாது. நன்மை, தீமை முதலிய சம்பவங்கள் எல்லாவற்றிற்கும் விலக்கு. இதைப்போல விலக்கு முறை (isolation) மற்ற எவ்விதத்திலும் கையாள முடியாது. ஆனால் இந்த முறையும் பல ஆசாரப் பழக்கவழக்கங்களில் குறுக்கு வழியாக, சோம்பேறித்தனம், அறியாமை இவைகளின் காரணத்தால், அனுஷ்டானமிருந்தும், உண்மை மறைந்து, வெறும் சடங்காக மாறிவிடுகிறது. நமது சமூகம் சீர்குலைந்திருக்கும் நிலையில், இதை உண்மையாகப்பின்பற்றமுடியுமாவென்பதுசந்தேகம். முடியாவிட்டால் சட்டபூர்வமாகக் கட்டாய முறையில் தடை அம்மை குத்தவேண்டும். அம்மை நோய் வந்தபிறகு தடுக்கமுடியாது. அதைக் குணப்படுத்தவும் எந்த வைத்திய முறையிலும் மருந்துகள் கிடையாது. ஆகையால் தடுப்பு முறை ஒன்றுதான் பயன் அளிக்கக்கூடியது. கட்டாயப்படுத்தி ஊசி குத்திக்கொள்வதற்குப் பல ஆட்சேபனைகள் உண்டு. நமது நாட்டில் வைத்தியம் பலவகைப்பட்ட முறைகளுடன் கையாளப்பட்டுவருகிறது. மேல் நாட்டு வைத்திய முறை புதுமை முறை. பழைய காலத்து ஆயுர்வேத, சித்த யூனானி முறைகளில் தடை அம்மை என்கிற பேச்சே கிடையாது. இதன்றி இப்பொழுது ஹோமியோபதி (அணு அளவு மருந்து) முறை, இயற்கை முறை வைத்தியம், மனச்சாட்சி முறை, இவ்விதம் பலவிதக் கொள்கைகளும், முறைகளும் நடமாடிக்கொண்டிருக்கின்றன. இவைகள் எல்லாவற்றிற்கும் இடங்கொடுத்துச் சட்டம் நிறுவவேண்டுமானால், தடை முறை ஒன்றையும் கட்டாயப்படுத்த முடியாது. சென்னை சுகாதாரச் சட்டம் நிறைவேறிய காலத்து, மனச்சாட்சி வேகம் அதிகரித்த சில சட்டசபை அங்கத்தினர்கள் கட்டாயத் தடைமுறைகளுக்கு ஆட்சேபித்தனர். மனப்பூர்வமாக ஆட்சேபிப்பவர்களுக்கு நாம் கட்டாயப்படுத்தமுடியாதென்கிற கட்சியை ராஜாஜி ஆதரித்தார். ஒரு சமூகத்தில் பெரும்பாலோருக்கு ஒரே காலத்தில் பரவும் கொடிய நோய்கள், ஒரு நோயாளியிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுவது எல்லோரும் அறிந்ததே. அப்படியிருக்க மனச்சாட்சியின் காரணமாக நோயைத்தடுக்கும் முறைக்கு உட்படாத ஒருவரால் அந்தச் சமூகத்திற்கே ஆபத்து வரக்கூடும். இப்படி உண்டாகும் ஆபத்தை ஒருவருடைய மனச்சாட்சி யென்று சொல்லும் ஆட்சேபனையைப் பொருள்படுத்தி, தடுக்காமலிருப்பது நியாயமாகாதென்பது எனது கட்சி. கடைசியாக ஒரு சமரச ஏற்பாட்டுடன் சட்டம் நிறைவேறியது. மனச்சாட்சியின் காரணமாக ஆட்சேபிப்பதை ஒரு ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அதிகாரம் படைத்த அதிகாரியிடம் ருஜுப்படுத்தவேண்டும். அதன் பிறகு சுகாதார அதிகாரிகள் எவ்வித நிபந்தனைகள், நோய் பரவாமலிருப்பதற்காக விதிப்பார்களோ அதற்குட்பட்டு நடக்கவேண்டும். அப்படிச் செய்யக்கூடியவர்களுக்குமட்டில் கட்டாயத் தடை முறைகள் அனுஷ்டிக்கப்படமாட்டா என்ற முறையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அம்மை பிறருக்குப் பரவாமல் தடுக்கும் முறையில் பலகாலமாக நமது நாட்டில் நடைபெற்று வரும் வழக்கங்கள் இன்றும் பொருத்தமானவை. அவைகளை நாம்பின்பற்ற வேண்டும். அம்மை குணமாகும் காலத்து அடிக்கடி, ஒருநாள்விட்டு எண்ணெய் தடவி, வேப்பிலைபோட்டுக் காய்ச்சின தண்ணீரில் ஸ்நானம் செய்விப்பது; அம்மை உதிர்ந்து தழும்பாகிற வரையில் விடாது இம்முறையை அனுஷ்டிப்பது; ஆகார முறைகளில் இளநீர், பழவர்க்கங்கள், தயிர், இவை போன்ற குளிர்ச்சி தரக்கூடியனவும், பலம் குறையாமல் காப்பாற்றக்கூடியனவுமான உணவுகொடுப்பது; அம்மை நோய் குணமாகிவிட்டாலும், வீட்டிலிருப்பவர்கள் ஆறு வாரம் பிற இடங்களுக்குப் போகாமலும், மற்றவர்களுடன் கலக்காமலும், பிரயாணம் முதலியவை செய்யாமலும், தீண்டல் கொண்டாடி நோய் மற்றவர்களுக்குப் பரவாமலிருப்பதற்காகப் பழக்கத்திலிருந்து வரும் ஆசாரத்தின் தத்துவத்தை அறிந்து அதைப் பின்பற்றுவது—இவையெல்லாம் சரிவரச்செய்து, அம்மை வராமலிருப்பதற்கு, தடையாகச் செய்யப்படும் அம்மை குத்துவதை ஐந்து வருஷத்திற்கொருதரமாகிலும் செய்துகொண்டால், அம்மை நோய் ஒழிந்துவிடும். இம்முறைகளால் மற்றத் தேசங்களில் இந்த நோய் வராமல் தடுத்துவிட்டார்கள். நாமும் அவ்விதமே செய்யவேண்டும். செய்தால் நாமும் இந்த நோயினால் அவதிப்படமாட்டோம். மாரிஅம்மனின் தெய்வத் தன்மை சிறப்புடன் பரம்பரையாக நமது நாட்டில் இடம்பெறும்.

# காளிதாசர்

கே. சந்தானம்

இவ்வுலகில் அழியாப் புகழ்பெற்ற அமர கவிகளில் காளிதாசர் ஒருவர். அவர் வடமொழிக் கவி. அவர் எங்கே பிறந்தார், எப்படி வளர்ந்தார், சுகமாகக் காலங் கழித்தாரா, அல்லது மற்றப் பெரியோர்களைப் போல வறுமையால் வாடினாரா என்னும் கேள்விகளுக்குப் பதில்கூற வழியில்லை. அவருடைய நூல்களில் தம்மைப்பற்றிச் சிறிதும் கூறவில்லை. அவர் ஒரு விக்ரமாதித்ய மன்னன் காலத்தில் வசித்திருக்கவேண்டும் என்று மட்டுமே சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர். இந்த மன்னனைப் பற்றியும் பல அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் சாம்ராஜ்யாதிபதிகளாகஇருந்த குப்தசக்ரவர்த்திகளில் ஒருவராக இருந்திருக்க வேண்டுமென்று சிலர் நினைக்கின்றனர். இது தவறு; கிறிஸ்தவ சகாப்தத்திற்குமுன் விக்ரம சகாப்தத்தின் மூல புருஷரான விக்ரமாதித்யர் சபையில் இவர் கவிரத்னமாக இருந்திருக்கலாம் என்று சிலர் ஊகிக்கின்றனர். ஆனால் காளிதாசரின் கீர்த்தியைக் காலநாகத்தின் விஷம் தீண்டமுடியாது.

இவர் நூல்களில் இப்பொழுது நமக்குக் கிட்டியிருப்பவையாவன மூன்று நாடகங்களும் மூன்று காவியங்களுமே. நாடகங்கள் சாகுந்தலம் விக்ரமோர்வசியம், மாளவிகாக்னிமித்ரம். ரகுவம்சம், குமார சம்பவம், மேகதூதம் (சந்தேசம்) காவியங்கள். இவ்வாறும் உயர்ந்த நூல்களே ஆயினும் இவற்றுள் முதல் ஸ்தானம் பெற்றது சாகுந்தலம், மேக சந்தேசத்தைச் சாகுந்தலத்திற்கு ஏறக்குறைய சமானமென்றே கவிதையின் ரசத்தை நன்குணர்ந்தோர் கூறுவர்.

அவ்வப்பொழுது மனதில் உதித்து மறையும் பேருணர்ச்சிகளுக்குக் கல்லாலும் சொல்லாலும் சித்திரத்தாலும் சங்கீதத்தாலும் சாசுவத உருவம் அளித்து வாழ்க்கையின் பெருமையை வளர்ப்பது கலைகளின் வேலையாகும். இவ்வுணர்ச்சிகளை ஒவ்வோர் கலைஞனும் தன் சக்தி, அறிவு, மனப் போக்குக்குத் தகுந்தவாறு வெவ்வேறு விதமாக வெளிப்படுத்துகிறான். ஆனால் அவற்றை அனுபவிப்போர் மனத்தில் ஏற்படும் பாவனைகளைக் காம்பீர்யம், அழகு, உருக்கம் என்று மூன்றுவிதமாக வகுக்கலாம். இவற்றைக் கலைகளின் அதிஷ்டான தேவதைகள் என்று கூறுவேன். காளிதாசர் அழகுத்தேவதையின் தனித்தொண்டர். அவருடைய கவிதையில் எல்லா உணர்ச்சிகளும் அழகு மயமாகப் பரிணமிக்கின்றன.

சில்ப உலகில் தாஜ்மஹாலுக்கு என்ன பதவியோ, அது நாடக உலகத்தில் சாகுந்தலத்திற்கு உண்டு. இந்தியாவிலும், இதர நாடுகளிலும், தாஜ்மஹாலைவிடப் பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. அதைவிட அதிசயமான வேலைப்பாடு உள்ளவைகளாகவும் இருக்கின்றன. தாஜ்மஹாலின் தனிப் பெருமை என்ன? முற்றிலும் சுத்த சலவைக் கல். இயற்கை தோற்கும் இழைப்புக் கொடி, செடி, மலர்கள். அற்புத அமைப்பு. இவை ஒன்றுகூடி அழகுத் தேவதையே ஒரு கட்டிடமாக அவதாரம் செய்ததுபோலிருக்கிறது. இலக்கிய உலகத்தில் சாகுந்தல நாடகமே அழகின் அவதாரம் என்பதில் சந்தேகமில்லை. இதைப்பற்றி ஜெர்மன் மாகவி, கேதே:- நறுமலர் மணமும், நல்ல பழத்தின் சுவையும் நிறைந்து, இன்பமும் கவர்ச்சியும் கூடி, ஆன்மாவின் ஆனந்தமாகி, பூமியின் பெருமையும், சுவர்க்கத்தின் சோதியும் சேர்த்து அளிக்கும் ஒரு பொருள் உண்டோ எனில் சகுந்தலையே, உன் பெயர் சொன்னால் போதுமம்மா" என்று கூறியது மிகையன்று.

காளிதாசர் கவிதையில் கரடுமுரடென் பதே கிடையாது. ஹரித்துவாரத்தில் கங்கா ப்ரவாகம்போல் தெளிவும், தண்மையும் தடையில்லாப் போக்கும் உள்ளது. சொல்லின் சிக்கனத்தைக் கொள்கையாகக் கொண்டவர். வீண் வர்ணனையை வெறுப்பவர். அவர் சுலோகங்களில் அர்த்தமில்லாத பதத்தைக் காணவேமுடியாது.

அவரது கற்பனையும் மிகவும் சரளம். பௌர்ணமி நிலாவின் தன்மை கொண்டது.

* டில்லி அகில இந்திய ரேடியோ நிலயத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது. மாசி இதழில் வெளியான "எனது முதல் கதை" என்ற கட்டுரையும் அதே நிலயத்தில் ஒலிபரப்பப்பட்டதே.

பூர்ண சந்திரன் பிரகாசிக்கும்போது அரசர் மாளிகையும் ஏழைக்குடிசையும், வனமும் வனாந்தரமும், பூஞ்சோலையும், புல் தரையும் வெண்ணிலாவின் வெள்ளத்தால் சம அழகு பெற்று மனத்தைக் கவர்கின்றன. அவ்வாறே காளிதாசர் கற்பனை உலகத்தில் தோன்றிய பொருள்களுக்கெல்லாம் சௌந்தர்யம் சாதாரண குணம். கதை, காரியம் எதுவும் கலப்பில்லாத வெறும் கற்பனையை அனுபவிக்க விரும்புவோர் மேக சந்தேசத்தைச் சாவகாசமாகப் படிக்கவேண்டும். அதில் ஒவ்வோர் பாட்டும் ஓர் அற்புதச் சித்திரமாகும். அளகாபுரியில் குபேரனுக்குப் பணிவிடை செய்யும் ஒரு யக்ஷன் காலையில் பிரிந்த காதலியை மாலை வரையில் காணாமல் எப்படி இருப்பது என்ற மயக்கத்தில் தன் சேவையைச் சரிவரச் செய்யவில்லை. எஜமானன் கோபித்து, "ஓர் வேளை பொறுக்க மு;-யாத நீ ஓராண்டு பூமியில் பொறுமைகற்றுவா" என்று சபித்து விடுகிறான். எளிய யக்ஷன், விந்திய மலையில் ராமகிரிக் குன்றின் தாழ் வரையில் குடிசை கட்டி வாழுங்காலத்தில், கார்மேகத்தைக் கண்டு பிரிவாற்றாமையால். புலன் இழந்து, அம்மேகத்தின் மூலம் தன் நாயகிக்குச் செய்தி அனுப்ப விரும்புகிறான். முதல் பாகத்தில் அளகாபுரிக்குப் போகும் வழியில் உள்ள காட்சிகள் கூறப்படுகின்றன. இரண்டாவது பாகத்தில் அளகாபுரி வர்ணிக்கப்பட்டு முடிவில் பிரிவால் வாடும் மனைவியின் சித்திரம் வரையப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் பாட்டும் ஓர் ஓவியச் சித்திரம் என்றே கூறவேண்டும். அவற்றில் எழுதிய படம் கூட நம்முன் அவ்வளவு தெளிவாகவும் மனோகரமாகவும் இருக்கமுடியாது.

வேட்டையாடும் துஷ்யந்தன் கண்வர் வனத்தை அடைந்து, சேனையை வெளியில் நிறுத்தி ஒரு விதூஷகனுடன் உள்ளே நுழைகிறான். தூரத்திலிருந்து மூன்று கன்னிகைகள் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறான். அவன் பிரமித்து எண்ணுகிறான்:—

"மன்னர் மாளிகையில் கூட இவ்வாசிரமப் பெண்களுக்கு நிகரான அழகுபெற்ற சுந்தரிகளைக் காணமுடியாது. ஆனால் ஆச்சரியம் என்ன? எவ்வளவு பாடுபட்டு வளர்த்தாலும், பூங்காவனத்தின் மல்லிக்கொடி, காட்டுக்கொடிமுன் தோற்றுவிடுமல்லவா." இன்னும் சிறிது முன் செல்ல, மூவருள் சகுந்தலை பிரகாசிக்கிறாள். இவளையும் இம்மாதிரி வேலையில் ரிஷி அமர்த்தியிருக்கிறார் பார்! என்ன கொடுமை?


# தமிழ் நாட்டுச் சிறு கதைகள்

1. தொகுதி— 13 குழலோசை
   ஸரோஜா ராமமூர்த்தி எழுதிய— 19 கதைகள்
2. தொகுதி— 14 வாடா விளக்கு
   சு. குருசாமி எழுதிய 20 கதைகள்
3. தொகுதி-15 குழந்தையின் மனம்
   த. நா. ஸேனாபதி எழுதிய 19 கதைகள்
4. தொகுதி— 16 பிள்ளை வரம்
   "பெ. தூரன்" எழுதிய கதைகள்
5. தொகுதி— 17 தேவகி
   குகப்ரியை எழுதிய கதைகள்

ஒவ்வொரு தொகுதியும் விலை ரூ. 2—0—0

* * * *

## அடுத்து வரும் நூல்கள்

1. இரு துருவங்கள்—காண்டேகர் 5/8/-
2. தென்னை வளர்ப்பு—சு. க. கணபதி
3. மல்லிகை மாலை — கி. வா. ஜகந்நாதன்
4. கம்பன் கவியமுதம்
5. கதைக் கோவை — நான்காம் தொகுதி
6. சக்தி வேல்
7. மோகினி

# அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

"அழகே தன்னியல்பாகப் பெற்ற இம் மெல்லியலாளைக் கடுந்தவத்தில் அமர்த்திய முனிவன் நீலத் தாமரையின் மெல்லிதழால் காட்டு மரத்தை வெட்டப் புகுந்தான் போலும்" என்று தூஷித்துக்கொண்டு அவர்கள் இருக்கும் இடம் அணுகுகிறான். என்ன ஆச்சரியம்! சகுந்தலை கட்டியிருக்கும் முரட்டு மரவுரியும், அவள் அழகை அதிகரிக்கிறது. எப்படியெனில், "செங்கமலத்தில் ஒட்டிய பாசியும் பிரகாசிக்கும். நிறைமதியின் களங்கமும் உள்ளங் கவரும். மரவுரியால் இம்மங்கையும் மோகினி ஆனாள். இயற்கை அழகிருப்போருக்கு எப்பொருளும் ஆபரணமாகும்."

இவ்விதம் கொஞ்சங் கொஞ்சமாக நேர் வர்ணனையின்றி, கடைக்கண் பார்வை போன்ற இங்கிதச் சொற்களால் கண்வர் வனமும், துஷ்யந்தன் மனமும் சகுந்தலையின் சௌந்தர்யத்தால் பூரித்துப் போகின்றன.

சாகுந்தல நாடகத்தில் தலைசிறந்து விளங்குவது அதன் நான்காம் அங்கம். துர்வாசரின் சாபத்தால், துஷ்யந்தன் சகுந்தலையை மறந்துவிடுகிறான். கண்வர் அவளைக் கணவனிடம் அனுப்புகிறார். இச்செய்தி தெரிந்தவுடன் கண்வர் காடெல்லாம் சோக வனமாக மாறிவிடுகிறது. தம் உள்ளத்தின் உணர்ச்சியை வியந்து கண்வர் கூறுகிறார்:—

"இன்று சகுந்தலை சென்றுவிடுவாள் என்று என்னிதயம் தத்தளிக்க, தொண்டை அடைத்துக் கண்ணீரால் பார்வை இழந்து, தவம் புரியும் யானே தவித்தால், இல்லறத்தில் உள்ள சாதாரண மனிதர் தம் மக்களைப் பிரியும்போது என்ன பாடுபடுவார்?"

சகுந்தலை வந்து அவரது அடிபணிகிறாள். எல்லோரும் புறப்படுகிறார்கள். இப்பொழுது ஆசிரம மரங்களைப் பார்த்துக் கண்வர் கூறுகிறார்.

'உங்களுக்கு நீர் ஊற்றுமுன் தன் தாகம் தணியாள். அலங்காரத்தில் ஆசை உள்ளவளானாலும், உங்கள் நேசத்தால், இளந்தளிரையும் கிள்ளச் சகியாள். உங்களிடம் புது மலர் தோன்றும் தினமே, அவளது திருவிழா. அந்தச் சகுந்தலை கணவன் வீடு செல்லுகிறாள். எல்லோரும் ஆசி கூறுவீர்."

சிறிதுதூரம் செல்லுமுன் சகுந்தலையின் உடையில் ஏதோ மாட்டிக்கொண்டதுபோல் தோன்றுகிறது. திரும்பிப் பார்க்கிறாள்.

**கண்வர்:**— கூரிய புல் முனையால் புண்பட்ட முகத்தில் இலுப்பையெண்ணெய் தடவி வேதனை போக்கி, கையால் காட்டரிசி கொடுத்து வளர்த்த உன் வளர்ப்புப் பிள்ளையான மான் கன்று உன்னை விட்டுப்பிரிய மறுக்கின்றது.

**சகுந்தலை:**— குழந்தாய்! தோழர்களைத் தியாகம் செய்யத் துணிந்த என்னை ஏன் பின் தொடருகிறாய்? என்னை இழந்த தந்தை, இனி உன்னை வளர்ப்பார். என்று அழுது கொண்டே சொல்லுகிறாள்.

ஆசிரமவாசிகள் அனைவரும் ஒரு தடாகத்தை அடைகின்றனர். இவர்கள் தாமாக நிற்கமாட்டார்கள் என்று கண்டு, சகுந்தலையின் துணைக்காக அனுப்பப்பட்ட சார்ங்க்ரவன், "குளத்திற்கு அப்பால், கூடச் செல்லலாகாது" என்று சாத்திரம் கூறித் தடுக்கிறான். கடைசியில் சில நிமிஷங்களாவது சேர்ந்திருக்கலாமென்று எல்லோரும் மரத்தடியில் உட்காருகிறார்கள். அரசனுக்குத் தாங்கள் கூறவேண்டிய செய்தி என்னவென்று சிஷ்யன் கேட்கிறான். கண்வர் இந்தச் சந்தேசத்தைக் கொடுக்கிறார்.

"தவமே செல்வமாகக் கொண்ட எம்மையும் மதித்து, உன் உயர் குலத்தின் நலத்தையும் சிந்தித்து, உறவினர் அறியாது உன்னிடம் இவள்கொண்ட நேசத்தையும் நினைத்து, இவளை ஒரு மனைவியின் சாதாரண மரியாதையுடன் ஏற்பாய். அதன்பின் அவள் பாக்கியம். அதைப்பற்றிப்பேசப் பந்துக்களுக்குப் பாத்தியமில்லை."

பிறகு சகுந்தலைக்குத் தர்மோபதேசம் செய்கிறார், "பெரியோர்க்கென்றும் பணிவிடை செய். சக்களத்திமார்களிடம் சகி போல் நடந்துகொள். கணவன் குற்றம் செய்தால் கோபித்து வெறுக்காதே. வேலை செய்வோருக்குத் தாராளமாகக்கொடு. அதிருஷ்டத்தால் அகம்பாவம் கொள்ளாதே. இவ்வழிபற்றிய மங்கையர் குலமகளிர். மற்றவர் குலத்தைக் கெடுக்கும் தீயவராவர்."

இனி, தாமதிக்கமுடியாது. பிரியவேண்டும். தனது நிலையைச் சகுந்தலை ஓர் ஒப்பற்ற உவமையால் விளக்குகிறாள்:—

"தந்தையே மலயமலைச் சாரலிலிருந்து பிடுங்கப்பட்ட சந்தனக்கொடி வேறு தேசத்தில் வளருமா? உங்கள் மடியிலிருந்து நழுவி

நான் வேறிடத்தில் உயிர்வாழ முடியுமா?'' என்று கேட்கிறாள்.

அதற்குக் கண்வர் விடையளிக்கிறார்.

“பந்துக்கள் நிறைந்த பர்த்தாவின் வீட்டில் உயர்பதம் பெற்று, உன்னத நிலையில், ஓய்வு நேரம் சிறிதுமின்றி, பரபரப்புடன் தலைவியின் தொழிலைத் திறமையுடன் செய்து, கீழ்த்திசை உதிக்கும் பால சூரியன் போன்ற பிள்ளையையும் பெற்று, என் பிரிவின் துக்கத்தை எளிதில் மறந்துவிடுவாய்''

இதற்குப் பதில் சொல்லச் சகுந்தலைக்கு நாவெழவில்லை. ஆசிரமத்தை நோக்கிநின்று:-

“பிதாவே மீண்டும் தபோவனத்தை எப்பொழுது பார்ப்பேன்?''

என்று வினவுகிறாள். உண்மை விரதம் பூண்ட கண்வர் அவளுக்கு வீணாசைகாட்ட விரும்பவில்லை.

“நெடுங்காலம், பாருலகில் பட்டமகிஷியாகி, ஒப்பற்ற வீரப்புதல்வனைச் சிங்காதனத்தில் அமர்த்தி, அவனிடம் நாட்டை ஒப்புவித்து, உன் கணவனுடன் இவ்வாசிரமத்தை மீண்டும் நீ நாடுவாய்'' அதாவது என் ஆயுளில் நான் உன்னைப் பார்க்கமாட்டேன். நீ என்னை நினைக்கமாட்டாய். நான் உன்னை நினைத்து வருந்துவேன்'' என்கிறார் கண்வர்.

அவரது துக்கத்தைக்கண்டு சகுந்தலை தன் வருத்தத்தைக்கூட மறந்து,

“தவத்தால் மெலிந்திருக்கிறது உங்கள் உடல். என் வருத்தத்தால் அதனை அதிகம் வாட்டாதீர்கள்'' என்று வேண்டிக்கொள்ளுகிறாள்.

“நீ குடிசை வாயிலில் குருவிகளுக்கு வைத்த அரிசி முளைத்துப் பயிராகி இருக்கிறது. அதைக்கண்டு என் துக்கம் எப்படித் தணியும்?'' என்று புலம்பி, “உன் வழியெல்லாம் மங்களம் உண்டாகுக'' என்று விடை கொடுத்தனுப்புகிறார். சகுந்தலை மறைந்ததும், அவளது இரு சகிகளும் வாய்விட்டு அலறுகிறார்கள். அவர்களுக்கு எவ்வித ஆறுதலையும் கண்வர் அளிக்கவில்லை. தாமும் பெருமூச்சுவிட்டு, “அனுசூயே, உங்கள் சகி போய்விட்டாள். துக்கத்தை அடக்கி என்பின் வாருங்கள்'' என்று மௌனமாக ஆசிரமம் திரும்புகின்றார். அதற்குள் கண்வர் மனதில் சாந்தி குடிகொள்கிறது. “பிறந்த நாளே பெண் பிறர் சொத்தாவாள். இவளை இன்று அவள் நாயகன்பால் அனுப்பி, பலநாள் சுமந்த சொத்தைச் சொந்தக்காரனிடம் ஒப்படைத்ததுபோல் என்மனதில் ஒரு புதிய சாந்தி உதித்தது'' என்று தம்மைத் தேற்றிக் கொள்ளுகிறார்.

இந்த அங்கத்தில் பங்கெடுக்கும் ஒவ்வொரு பாத்திரமும், ஒவ்வொரு சொல்லும், செயலும், தனித்தனியாக ஆராய்ந்தால் ஆச்சரியமாகத் தோன்றாது. ஆனால் அவை அனைத்தும்கூடி ஓர் ஒப்பற்ற சித்திரமாக நம் மனதில் பதிந்துவிடுகிறது. இந்த ஓர் அங்கத்தைப் படித்து இன்புறுவதற்காக மட்டும், தமிழர் வடமொழி கற்கவேண்டும்.

நான்காவது அங்கத்தில் அன்பும் அன்பினரைப் பிரியும் சோகமும் அழகாக மாறிவிடுகின்றன. ஐந்தாவது அங்கத்தில் அவளை ஏற்க மறுக்கின்ற துஷ்யந்தன் கொடுமையும், துணைசென்ற கண்வர் சிஷ்யர்களின் ஆத்திரமும், எல்லோராலும் கைவிடப்பட்டு, வெட்கம், கோபம், துயரம் இவற்றால் ஏக காலத்தில் பீடிக்கப்பட்ட சகுந்தலையின் அவஸ்தையும் மிகவும் விசித்திரமாகக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

வடமொழியில் உபநிஷத் எழுதிய மகரிஷிகளும், வால்மீகியும், வியாஸரும், காளிதாசரைக் காட்டிலும் உயர்ந்த கவிகள். ஆனால் அழகையே பிரதானமாக நாடுவோர், காளிதாசரை அவர்களையும்விட மேலான கவியாகக் கருதுவார்கள்.

# புத்தாண்டு வணக்கம்

காபி-ரூபகம்

ஒன்று பட்ட நெஞ்சமும்,
உலக மெல்லாங் கோயிலே
என்று காணுங் காட்சியும்,
இலகுயிர் நலங்களே
நன்று செய்யும் ஆற்றலும்
நலிவிலாத் தருமமும்,
வென்றியும் அளித்தருள்
விரிந்த பூமி நாதனே!

சள்ளையற்ற சாந்தமும்,
சலிப்பி லாத சக்தியும்,
கொள்ளை யற்ற செல்வமும்
கொடுமை யற்ற நீதியும்,
எள்ள லற்ற சீர்த்தியும்
எதிர்ப்பை வெல்லும் வீரமும்
கள்ள மற்ற வாய்மையும்
கடவுளே யருளுவாய்.

வறுமையற்ற வாழ்க்கையும்
வரம்பிலாத ஈகையும்,
சிறுமை யற்ற சிந்தையும்
சிறந்த தேச சேவையும்,
பொறுமையுற்ற வீறுடன்
பொருமை யற்ற நேயமும்
திறமை யுற்ற சொல்லுடன்
சிறந்து வாழ்க மானிடர்

சூதிலாத் தொழில்களும்
சுரண்ட லற்ற வணிகமும்,
கோதிலாக் குணங்களும்,
குறையிலா வளங்களும்,
தீதிலாப் பொறிகளும்,
திருமிகுங் கலைகளும்,
வாதிலாச் சன்மார்க்கமும்,
வளர்க மாந்தர் வாழ்கவே!

—சித்திரை- பார்த்திப-ளுப்

சுத்தானந்த பாரதி.

தொடர்கதை

# மல்லிகைச் செண்டு

கே. சுந்தரம்மாள்

— 5 —

அன்று முதல் ராஜுவுக்கும் பட்டுவின் புருஷனுக்கும் மனதில் பகைமை மூண்டது, நேருக்குநேர் பார்க்கும்பொழுது ஏதோ பேசுவார்களே தவிர, ஒருவர் தலையை ஒருவர் வெட்டும் மனப்பான்மையிலிருந்தார்கள். மாமனாரின் சொல் மதிப்பிற்காக ட்யூஷனை நிறுத்த முடியவில்லை. ஆனால் பட்டுவையும், ஜீஜியையும் கண்டித்துக்கொண்டே வந்தான். அதிலிருந்து காலேஜிலிருந்து நேரம் சென்று வரும் நாட்களில் கடுமையாகக் கோபித்துக்கொள்ளத் தொடங்கினான்.

இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைமையை அடைந்தாள் ஜீஜி. அத்திம்பேர் வார்த்தை நியாயத்திற்குக் கட்டுபடக் கூடியதாக இருந்ததினால், அதை ஒத்துக்கொண்டு நடக்கவேண்டியதாயிற்று. ராஜுவின் மனம் நோகும்படி நடக்க அவள் மனம் இடமளிக்கவில்லை. அவனைக் காலேஜ் வாசலுக்கு அடிக்கடி வரவேண்டாமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாளே தவிர வாரத்திற்கு ஒருமுறையாவது அவனுடன் சுற்றுவதை நிறுத்தமுடியவில்லை. இப்படி இருவருக்கும் நடுவில் சொல்லமுடியாத அவஸ்தையை அனுபவித்து வந்தாள். அத்திம்பேரைத் திருப்தி செய்வதற்காக, ராஜுவினிடம் அதிகப் பேச்சிற்கு இடமின்றி நடந்தாளானால் காதலின் வேகத்தில் சொல்லம்புகளை எய்து விடுவான் ராஜு.

ராஜுவின் மனத் திருப்திக்காகத் தன்மனம் போனபடி நடந்தால் கடமையில் சொல்லம்புகளை எய்துவிடுவார் அத்திம்பேர். இந்த நிலைமையில் கிளாஸ் மாற்றும் பரீக்ஷையில் வெற்றி கண்டாளே த்விர, மனச் சாந்திக்குரிய வெற்றியைக் காண முடியவில்லை.

மறு வருஷம் தசரா விடுமுறைக்கு ஊருக்குச் சென்ற ஜீஜிக்கு டைபாடு ஜ்வரம் வந்துவிட்டது. இரண்டு மாதம் படுக்கையாகவே இருந்தாள். ஜ்வரம் சற்றுக் குறையத் தொடங்கும் சமயம் முனிசிப்பின் அழைப்பிற் கிணங்கி, ஒரு மாத ரஜா எடுத்துக்கொண்டு, பதினைந்துநாள் தாய் தந்தையருடன் இருந்துவிட்டுப் பிறகு ராஜு இவ்விடம் வந்தான்.

ஜீஜியின் உடல் நிலைமை அவனைத் திடுக்கிடச் செய்தது. அவன் சென்ற சமயம் ஜீஜியின் தாயார் சற்றே தேக அசௌக்கியமாக இருந்ததினால், அவனையே ஜீஜிக்கு மருந்து முதலியவைகளைக் கொடுக்கச் சொன்னாள். முனிசீப் கோர்ட்டிற்குச் செல்லும்பொழுது, அவனிடம் ஜீஜியைக் கவனித்துக்கொள்ளும்படி ஸ்பெஷலாகச் சொல்லிப்போவார். பிறகு தடை என்ன? படுக்கைக்குப் பக்கத்திலுள்ள நாற்காலியில், இவனைப் பிரதிஷ்டை பண்ணியிருந்ததென்றே சொல்லலாம். மருந்து குடித்து அலுத்துப்போனவள் அதை மறுக்கும் சமயம் இவன் வந்துசேர்ந்தான். அப்பாவிப் பெண் இவன் கோபத்திற்குப் பயந்து எதையும் வாய்திறவாமல் வாங்கிச் சாப்பிடுவாள். பெற்றோர்கள் தங்கள் செல்வத்தின் நன்மையை நாடுவது இயற்கைதானே, ராஜுவிற்குப் பயந்து மருந்து சாப்பிடுகிறாள் என்ற நினைப்பில், அவளை அவனிடம் ஒப்படைத்தார்கள்.

ஒருவரும் இல்லாத சமயம் அவள் படுக்கையிலேயே உட்கார்ந்து பேசுவான். ஆள் நடமாட்டம் இருக்கும் சமயம் மரியாதையாக நாற்காலியில் உட்கார்ந்திருப்பான். இவன் வரவினால் மத்தியானத் தூக்கம் அற்றது ஜீஜிக்கு.

இந்த நிலைமையில் ஜீஜியின் ஜாதகம் அனுப்பியதில் இரண்டு இடத்தில் பொருத்தமிருப்பதாயும், ஒன்று ஐ. ஸி. எஸ்; மற்றவன் ஸி. ஐ. டி. ஆபீசர். என்றும், மனிதர்கள் நல்ல குணமுள்ளவர்கள், நல்ல குலம் சகல அம்சத்திலும் சம்பந்தத்திற்குத் தகுந்தவர்கள், ஜீஜிக்கு உடம்பு நன்றாகக் குணமானதும் எழுதினால் பெண்ணைப் பார்க்க அழைத்துவருவதாகவும், முனிசிப்பின் தமையனார் பூனாவிலிருந்து கடிதம் எழுதியிருந்தார்.

"ராஜு", தை பிறந்ததும் கல்யாணத்தை நடத்திவிடலாம். முடியுமானால் எட்டே நாள் லீவு எடுத்துக்கொண்டு, ஜீஜியைச் சீக்கிரம் எழுந்திருக்கும்படி செய்துவிடு. பிறகு கல்யாணத்தின்பொழுது பதினைந்து நாள் லீவு எடுத்துக்கொள். கல்யாணப் பொறுப்பு முழுவதும் உனக்குத்தான். இந்த வேலைபோனால் போகிறது. இன்னும் உயர்ந்த உத்யோகத்திற்கு ஏற்பாடு செய்துகொண்டு வருகிறேன். அநேகமாகக் கிடைத்துவிடும்"

தீயை மிதித்ததுபோலிருந்தது ராஜுவுக்கு இச்சொற்களைக் கேட்டது.

"தை மாதம் கல்யாணமென்றால் என் படிப்பு என்னவாவது அப்பா? இப்பொழுது கல்யாணம் ஒன்றும் வேண்டாம்"

"எல்லாம் இந்தப் படிப்புப் போதும். உனக்குப் படிக்கவேண்டுமென்றால் வருகிறவன் நோக்கத்தைத்தெரிந்துகொண்டு அடுத்த வரு

ஷம் சேர்ந்து படியேன். அவனை உன் இஷ்டப்படி நடக்கச்செய்வதற்கு உன் சாமர்த்தியம் உதவவேண்டும்''

ராஜுவின் முகக் குறியிலிருந்து அவன் மனதைத் தெரிந்துகொண்ட ஜீஜி மேலே பேச்சை வளர்க்க இஷ்டமில்லாமல் மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டாள்.

அமைதியுற்றிருந்த ராஜுவின் மனம் முனிசிப்பின் சொற்களினால் தத்தளிக்கத் தொடங்கியது. ஜீஜி என்ன செய்யப்போகிறாள்? இரண்டிலொன்றைத் தெரிந்துகொண்டே இவ்விடம் விட்டுச்செல்லவேண்டும் என்ற முடிவிற்கு வந்தான். இதைப் பற்றிக்கேட்கத் தனிமையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவன் எண்ணம் மறுநாள் மத்தியானமே கைகூடிற்று.

முனிசிப் கோர்ட்டிற்குச் சென்றார்.

''ராஜு, ஒரு வீட்டில் துக்கம் விசாரிக்க வேண்டும். மிகவும் வேண்டிய. மனிதர்கள் ஜீஜியை விட்டுப்போக முடியாமலிருந்தேன். நீ இருக்கும் பொழுதே போய் வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள் தாயார். குழந்தைகள் பள்ளிக்கூடம் சென்றார்கள். சமையல்காரன் முனிசிப்பிற்கு டிபன் எடுத்துச்சென்றுவிட்டான்.

ராஜு வாசற் கதவைத் தாளிட்டுவிட்டு ஜீஜி இருக்கும் அறைக்கு வந்தான். கட்டிலின் தலைப்பக்கம் சுவரோரமாகத் தலையணையை வைத்து அதில் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தாள் ஜீஜி. கட்டிலின் கால்பக்கம் சட்டத்தில் சாய்ந்தவண்ணம், கால்மேல்கால்போட்ட வண்ணம் உட்கார்ந்தான் ராஜு. அந்த நிலைமையிலும், தனது உயிருக்கு மேலாக மதித்து வந்த ராஜுவுடன் தனிமையிலிருப்பது இவளுக்கு ஒரு மாதிரியாகவே தோன்றினது. அதைக்காட்டிக்கொள்ளாமல், சிரித்த வண்ணம் ''காதலின் பாதையில் முள் கல் எதுவுமின்றிச்சாவதானமாக நடக்க வசதிபோலும்'' என்றாள்.

''காதல்! அதுவிஷயம் பேசத்தான் சமயம் எதிர்பார்த்திருந்தேன். நடக்கப் பாதையை எதிர்பார்க்கவில்லை. உன் அப்பாவின் போக்கு உனது சொல்லிற்கு அனுகூலமாகத்தோன்றவில்லையே! இலவு காத்த கிளியின் கதிதானா?''

''அது இலவின் குற்றமா? கிளியின் குற்றமா?''

''என்ன? பேச்சு ஒருமாதிரியாக வருகிறது. விதியின் குற்றம். நான் போவதற்குள் முடிவு தெரியவேண்டும். உன் அப்பாவிடம் விஷயத்தைச் சொல்லிவிடு. அதுதான் நன்மை''

''அப்பா! என்ன பதற்றம். நான் எப்படி லஜ்ஜையைவிட்டு அவரிடம் சொல்லுவேன். அம்மாவின் உதவியினால்தான் முடியும். அவளிடம் நேற்று இரவு மெதுவாக என் இஷ்டமென விஷயத்தை ஒரு மாதிரி தெரிவித்தேன்''

''என்ன சொன்னாள்?''

''இது விஷயம் அவ்வளவு எளிதில் முடிந்துவிடுமா? தனக்குச் சம்மதமென்றும், உன் அப்பா இதற்குச் சம்மதிக்கமாட்டார்; வீணாக அவரிடம் சொல்லி அந்தப்பிள்ளையை பொல்லாப்பாக்க வேண்டாம் என்றாள். நான் என்ன செய்வேன்?''

''உன் எண்ணம் என்ன?'' என்றான் கடுமையாக.

''என் எண்ணத்தை இனிமேல் சொல்லியா தாங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். என் எண்ணம் நிறைவேறுமா என்ற ஏக்கம்தான் என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தது''

''என் இஷ்டப்படி நடக்க முடியும் என்று சொன்னாயே, எந்தப் புத்தியில் சொன்னாய்?''

''அப்பொழுதிருந்த சிந்தனையில் சொல்லிவிட்டேன். இப்பொழுதிருக்கும் நிலைமையில் எவ்விதம் சமாளிப்பதென்பதை அறியாமல் தவிக்கிறேன். என்னால் என் குடும்பமும் தங்கள் குடும்பமும் பிளவுபட வேண்டாம். வசைச் சொல்லிற்கு ஆளாக வேண்டாம். என்னை மறந்துவிடுங்கள். நாம் என்றும் சகோதரர்கள் போலவே இருந்து வருவோம்'' என்றாள் கெஞ்சும் பாவனையாக.

''என்ன? இவ்வித முடிவு சொல்லவா என்னைக் காக்க வைத்தாய். துரோகி! உனது ஆசை வார்த்தையை நம்பித்தானே மோசம் போனேன். நான் தயங்கிப் பின்வாங்கும் சமயம் உன் சொல்லும், செயலுமே எனக்குத் தைரியத்தைக் கொடுத்தன. பெண்கள்ஸ்திர புத்தியற்றவர்கள் என்பது உண்மையே. உங்களுடைய கண் ஒன்றே மனிதனை வெறும் பைத்தியமாகச் செய்துவிடுகிறது; மயக்கிக் குலுக்கி வாய் திறவாமலே அநேக உறுதிமொழி கூறி, பார்வையிலேயே இன்ப வெறியை உண்டு பண்ணி, மான அவமானங்களைக்கூட துறக்கச் செய்துவிடுகிறது. உன்னைக் காணும் இன்பத்திற்காகக் கௌரவத்தை விட்டுக் கொடுத்து, நாடோடியைப்போல் காலேஜ் வாசலில் வந்து நின்றதை இப்பொழுது நினைத்தால் நாக்கைப் பிடுங்கிக்கொள்ளலாமென்று தோன்றுகிறது. அந்தச் சமயம் ஸ்வர்க்க பதவியை அனுபவிப்பதாகத் திருப்தியுற்றது மனம். அடி! உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்ற ஒரு திருப்திக்காக நாய்போல் உழைக்கும் உத்யோகத்தை ஏற்றுக்கொண்டேன். எவ்வளவோ வில்லங்கமிருந்தும் அதை அலக்ஷ்யம் செய்தேன். இரவில் தூக்கமின்றித் தவித்தேன். கஷ்டமில்லாமல் ஊருடன் இருந்த உத்யோகத்தை இழந்தேன். 'சேலை கட்டிய மாதரை நம்பினால்' என்ற வாக்கியம் என் விஷயத்தில்

உண்மையாயிற்று. உனது காதல் என்ன வாயிற்று? இவ்விதம் பேச உன் மனம் எவ்விதம் இடமளித்தது? என்னைப் புறக்கணிக்கத் துணிந்துவிட்டாயா? கடைசியாக என்ன சொல்லுகிறாய்? சொல்லு! சொல்லு!'' என்று நகர்ந்து அவள் பக்கத்தில் சென்று இருதோள்களையும் பற்றிக் குலுக்கிக் கேட்டான்.

அச்சமயம் அவன் செய்கையாலும் தோற்றத்தாலும் அவளுக்குக் காதலனாகத் தோன்றாமல் காலனாகவே தோன்றினான். தனது தோளைப் பற்றிய கைகளைத் தன் இருகைகளாலும் எடுத்துப்பிடித்துக்கொண்டு, ''என் காதல் என் ஹ்ருதயத்தில். என் ஆத்மா பிரியும்பொழுது அதுவும் பிரியும். இந்தச் சமயம் என் நிலைமை மிக்க மோசமானது. கடமையை விடவும் முடியவில்லை. காதலைத் தியாகம் செய்யவும் சக்தியில்லை. இப்படியே என் ஆத்மா பிரிந்துவிட்டால் யாவருக்கும் நன்மை. எனக்கும் நிம்மதி'' என்றாள் கண்களில் நீர்வடிய.

அவள் கண்களில் நீரைக்கண்டதும் இவன் ஹ்ருதயத்தில் திகில் பிடித்தது. ஜ்வரம் இறங்கிவரும் சமயம் அழுது அதிகமானால் அதற்குப் பொறுப்பாளி யார்? என்பது நினைவில்தோன்ற, ''ஜீஜி, வருத்தப்படாதே. காதல் மனிதனைப் பைத்தியமாக்கிவிடுகிறது. மனதில் எழுந்த தாபத்தினால் இவ்விதம் செய்துவிட்டேன். உன் கண்ணீர் என் ஹ்ருதயத்தைப் பிளக்கின்றது. உடம்பு திரும்பினால் என்னவாகும்? இதுவா உள்ளன்பின் செய்கை'' என்று அவள் கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்துவிட்டுப் பழையபடி கட்டிலின் ஓரமாக உட்கார்ந்தான்.

இரு கைகளாலும் இரு தோள்களையும் பிடித்துக்கொண்டே'' அப்பா! என்ன கோபம்? உங்கள் வீரமெல்லாம் என்னிடம்தானா காண்பிக்கவேண்டும்? உலுக்கின உலுக்கில் அடிபட்ட புண்மாதிரி வலிக்கிறது. மறுபடி உடம்பு திரும்பி எனது முடிவு கிட்டுமானால் அதை ஆனந்தமாக வரவேற்பேன்''

''ஜீஜி எனது மடத்தனம். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பதுபோல் செய்துவிட்டேன். பேசாமல் படுத்துக்கொள். அரை அவுன்ஸ் பிராந்தி தருகிறேன். சாப்பிட்டுவிட்டுப் பேசாமல் தூங்கு. எல்லாம் பின்னால் பேசிக்கொள்ளலாம். விதிப்படி ஆகட்டும். தற்சமயம் நீ சுகமாக எழுந்திருந்தால் அதுவே போதும்'' என்று பிராந்தியைவிட்டுக் கொடுத்தான்.

அதைச்சாப்பிட்டுவிட்டு,''நான் சொல்வதைக் குற்றமாகக் கொள்ளாமல் கேட்பீர்களா?'' என்று சொல்லியவாறு படுத்துக்கொண்டாள்.

''ஜீஜி இல்லை! ஜீஜி! ஏதோ சற்றுப் பதட்டத்தில் செய்துவிட்டேன். தயங்காமல் சொல்லு ஏற்றுக்கொள்ளுகிறேன்'',


மறைந்து கிடக்கும் உங்கள் முக அழகை




வெளிப்படுத்த

ஜாப்கோ ஸ்னோ

ஓர் இன்றியமையாத பொருள்

"முதலில் வாசற் கதவைத் திறந்துவிட்டு வாருங்கள்"

அப்படியே செய்துவிட்டு எதிரிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்.

"தாங்கள் இவ்விடம் இருக்கும்வரை இது வரை இருந்ததுபோல் சாதாரணமாக நடந்து வரவேண்டும். அம்மா இதுவரை நம்மைப் பற்றி மிக்க மேன்மையாக நினைத்துவந்தாள். நேற்று இவ் விஷயத்தைச் சொல்லும்பொழுது நான் விரும்புவதாகவே சொன்னேன். தாங்கள் அப்படி. நினைக்கமாட்டீர்கள் என்றாள். உங்களுக்கும் இவ்வெண்ணம் உண்டு என்று சொன்னேன். அவன் அதைப்பற்றி உன்னிடம் கேட்டானா? என்றாள். இல்லை என்று சொன்னேன். இனி அவன் கேட்டாலும் நடக்காத விஷயம் என்று சொல்லிவிடு, அவன் அப்படி நிலைமை தெரியாமல் நடக்கக்கூடிய பிள்ளையல்லவென்று சொன்னாள். அதனால் தாங்கள் ஒரு விஷயமும் நடவாததுபோலிருக்க வேண்டும். நானும் இது விஷயமாக உங்களிடம் பேசினதாகச்சொல்லவில்லை. இனிமேல்உடம்பு குணமாகிப் பலம்ஏற்பட்டு, படிக்கப்போகும்பொழுது பரீக்ஷை வந்துவிடும். அதனால் படிப்பு அடுத்த வருஷம். அல்லது இத்துடன் சமாப்தி. தாங்கள் பொறுமையுடனிருங்கள், முயற்சிசெய்கிறேன். ஜனவரியில் இது விஷயம்பற்றிக் கடிதம் எழுதுகிறேன்".

"ஜனவரி என்ன கணக்கு?"

"தை மாதம் அவசியம் என் கல்யாணம் நடைபெறவேண்டுமென்பது அப்பாவின் தீர்மானம். அப்படியானால்?

"சரி உன்னிஷ்டம்"

6

அன்று இரவில் வேலை கிடையாது. பகல் வேலை முடிந்ததும் கூட்டிலிருந்து விடுபட்ட பக்ஷியின் மனம்போலிருந்தது ராஜுவுக்கு. ஹோட்டலில் டிபன் காப்பி சாப்பிட்டுவிட்டு, தன் அறைக்கு வந்து முகங்கழுவி, தலை வாரி டிரஸ் செய்துகொண்டான். சினிமாவிற்குப் போய்வரலாமென்று கதவைப் பூட்டிக்கொண்டு கிளம்பும் சமயம் ஹோட்டல் பையன் ஒரு கவரைக்கொடுத்துச் சற்று முன்பு வந்ததாகச் சொன்னான். கவரின் மேலுள்ள எழுத்துக்கள் ஜீஜியினுடையவை என்று தெரியவே 'அச்சா பலே!' என்ற வாக்கியம் சந்தோஷமிகுதியினால் வெளிவந்தது. பையனுக்கு அரை ரூபாய் இனாம் கொடுத்துவிட்டுக் கதவை உட்புறம் தாளிட்டுக்கொண்டு கான்வேஸ் சேரில் சாய்ந்துகொண்டு கடிதத்தைப் பிரித்தான்.

'அநேக நமஸ்காரம்' என்ற வாக்யத்தைப் படித்ததுமே மனம் துணுக்குற்றது. அதுவரை 'மை டியர் ராஜு' என்றே எழுதுவாள். இப்படி எழுதியது? மனம் படபடக்கப் படித்தான்.

அநேக நமஸ்காரம்.

நான் சுகமேயிருக்கிறேன். தாங்களும் சுகமே இருப்பீர்களென்று நினைக்கிறேன். நான் இவ்விதமான கடிதம்எழுதநேருமென்று கனவில்கூட நினைக்கவில்லை. தாங்கள் பொறுமையுடன் முழுவதும் படித்துவிட்டு, ஆழ்ந்து சிந்தனைசெய்து. பிறகு உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். உங்கள் சித்தப்படி நடக்க நான் சித்தமாகவே இருக்கிறேன்.

என்னுடைய அனுபவத்தில் கண்டறிந்த உண்மையைச் சிந்திக்கும்பொழுது காதல் என்பது, மனப்பிராந்தியும், பழக்கத்தின் தன்மையுமே என்று தோன்றுகிறது. ஒருவரால் எவ்வித இடுக்கண் நேர்ந்தபோதிலும் அவர்களால் நமக்கு யாதொரு பிரயோஜனமும் இல்லாத நிலைமையில் நமது மனம் அவர்கள்மீது பற்றுதலாக இருக்குமானால் அதுவே ஹ்ருதய பூர்வமான அன்பு. சாதாரணமாக ஆண் பெண்களிடை சரீர இச்சையில்லாத காதல் உண்டாகுமா? அப்படி உண்டானால் அதுவே தெய்விகக் காதல் என்று நிச்சயிக்கலாம். ஆனால் யௌவன காலத்தில் இயற்கையை வெற்றிகொள்வது என்பது சர்வ சாதாரணமல்ல. உறுதியான மனமும், கலங்காத ஹ்ருதயமும் இருந்தால் சற்று எதிர்க்கலாம். மனம் மதயானைபோன்றது. புத்தி என்ற அங்குசத்தினால் அதை நிலை நிறுத்த முயலவேண்டும். நாகரிகத்தில் ஆண் பெண் சமத்துவமென்பதாவது, ஆண்கள் செய்யும் எந்த வேலையையும், பெண்கள் செய்யமுடியாது என்ற வாதத்திற்கு எதிர்ப்பாகக் கூறலாம். ஆண்களுக்குச் சமமாக எந்த வேலைகளையும் செய்யும் சக்தியும், மூளையும் பெண்களுக்கு உண்டு. ஆனால் இடம் பொருள் ஏவல் என்ற பாகுபாட்டில் அவர்கள் சக்தியற்றவர்களாகி விடுகிறார்களே தவிர, முடியாது என்ற பதம் அவர்கள் அகராதியிலேயே இருக்கமுடியாது என்று சமூகத்தின் முன்னணியில் நிற்பவர்கள் மார்புதட்ட முடியும். அதுபோலவே யௌவனகாலத்தில் இயற்கைக்கு மரியாதை கொடுக்கும் தன்மையும் குரு பாலரிடத்தும் சமத்துவமே பெறுகிறது. இதில் ஒருவரை ஒருவர் பழிசாற்றிக்கொள்ளக் காரணமே கிடையாது. அப்படிச் செய்வதும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளும் செய்கையாகும். நமக்குள் ஏற்பட்ட காதலுக்கு நீங்கள் மாத்திரமோ, நான் மாத்திரமோ காரணமாகமுடியாது. யௌவன காலத்தில் பாரபக்ஷமின்றி வியாபிக்கும் இயற்கையே காரணம். அதற்கு அனுகூலம் செய்தவர் என் தந்தையே யாவர்.

சாதாரணமாக ஊன்றிப் பார்த்தோமானால், பரம்பரைச் சரித்திரங்களை ஆராய்ந்து பார்த்

தோமானால், அந்தக் காலங்களில், பெண்கள், கல்வி கேள்விகளில் ஆண்களுக்குச் சமமாகவே விளங்கிவந்தார்கள் என்பது புலனாகும். தற்காலத்தில் அந்த ஓலையைத்தான் திரும்பவும் படிக்கிறார்கள். ஆனால் ஒருவித்யாசமென்னவென்றால் அக்காலங்களில், ராஜவம்சமானாலும், சாதாரண குடும்பமானாலும் பருவ காலப் பெண்கள், துணைவன் தோன்றும்வரை ஆடவர் முன்னிலையில் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாட்டில் வளர்க்கப்பட்டார்கள். அந்நிலைமையிலும் காதல் மணம் நிகழாமலில்லை. குணங்களின் மேம்பாட்டைக் கேள்வியுற்றோ, வீரச் செயல்களைக் கேள்வியுற்றோ, அல்லது கண்ணுற்றோ, அல்லது தற்செயலாக ஏற்படும் கண்களின் சந்திப்பினாலோ மனம் ஒன்றுபட்டு உறுதியாக நின்று மணம் நடைபெற்றதுண்டு. அப்படி நடந்துவருவதானால் ஏதோ சமயங்களில் மனம் சஞ்சலமுறும். பிறகு ஏற்படும் பலாபலன்களைச் சிந்திக்கும்பொழுது மனம் நினைத்தபடி நடக்க முயலுவதில்லை. கிடைக்கும் என்ற நம்பிக்கையுண்டானால் கனிந்த அன்பில் ஊறும் கனியாகிறது காதல். தற்சமயம் நாகரிகமெனக் கருதப்படும் ஆண்பெண் வித்யாசமின்றிச் சமமாகப் பழகும் நிலைமையில் சிந்திக்க அவகாசமேற்படுவதில்லை. மண்வெட்டி பட்டதும் ஊற்றுக் கண் பீரிடுவதுபோல், தனிப்பட்ட முறையில் அச்சம்நாணம் எல்லாம் மறைந்து, யௌவனத்தின் தன்மை தைரியமாகத் தலைதூக்கி நிற்கிறது. நிறைவேறினால் அதிக ஆனந்தம், தடைபட்டால் அளவற்ற ஏமாற்றமும், வாழ்க்கையில் ஒரு பயங்கரமும் தென்படும். ஆனால் இவையெல்லாம் கொஞ்ச காலமே நிலைநிற்கும் என்று நினைக்கிறேன். காலமானது மனிதனின் எத்தகைய சக்தியையும் மீறிச் சென்றுவிடுகிறது. அப்படிக் காலச்சக்கரம் சுழலும்பொழுது யாவும் மறைந்து அந்தச் சமயம் எது மிஞ்சுகிறதோ அதுவே உண்மையான நிலைமை என்று தோன்றிவிடுகிறது. தற்சமயம் நாம் அனுபவிக்கும் துன்பமானது நமக்கு ஏற்பட்ட வசதியினால் விளைந்ததுதான். ஒருவிதக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி நடப்பதே பெண்களுக்கு மேன்மை தரும். நன்மை, தீமை இவைகளைப் பகுத்தறியும் சக்தி ஏற்படாத யௌவன நிலைமையில் சுயேச்சை, நாகரிகம், முன்னேற்றம் என்ற பெயரால், தைரியமாக எங்கும் செல்வதால் நன்மையைவிட தீமையே அதிகம் வெற்றிபெறுகிறது.

நாம் ஒருவரை ஒருவர் விரும்பக் காரணமானது, ஏகாந்தமென்று சொல்லக்கூடிய நிலைமையில் பாடம் படித்ததே என்று தோன்றுகிறது. அப்படியும், எந்த நிமிஷத்திலும் யாரும் வரலாம் என்ற நிலைமையில் நாம் தனியாக இருக்கும்பொழுது நமது கண்கள் அடிக்கடி சந்தித்தன. ஆனால் ஒருவர் அழகில் மற்றவர் மயங்கவில்லை என்பது நிச்சயம். ஆனாலும் யௌவனத்தின் வசிகரம் அப்படிச் செய்ய இடமளித்தது. கண்களே மனதைத் லதரியப்படுத்தியதும், அதிகக் காற்றினால் பலூன் வெடிப்பதுபோல், சாகுந்தலத்தின் உதவியினால் வாயினால் பரிமாறிக்கொண்டோம். அத்துடன் பிரிந்திருந்தாலும் ஒருமாதிரி. சென்னை வந்தபிறகு தனியே சுற்றத் தொடங்கியதும் மனம் தளரத் தொடங்கியது. அந்தச் சமயம் தங்களுடைய அடக்கமான குணமும் உயர்ந்த நோக்கமுமே என்னைப் பாதுகாத்தன. நாலுபேர் பார்க்கக்கூடிய இடத்தில்தான் சுற்றினோம். ஆனால் அந்தச் சமயம் என் மனம் தாங்கள் எந்த இடத்திற்கு அழைத்துச் சென்றாலும் வரத் தயங்கியே இருக்காது. உங்கள் விருப்பத்திற்கு எதிர்ப்பே இருந்திருக்காது. அந்த விஷயத்தை இப்பொழுது நினைத்துப் பார்க்கும்பொழுது, தங்களைத் தெய்வமாகப் போற்றத் தோன்றுகிறது. நான் பாதுகாக்கப்பட்டேன்.

இவ்வித நிலைமையில் நடக்கும் பெண்கள் மானத்திற்கஞ்சிப் பிராணனைவிட நேர்ந்துவிடுகிறது. ஆனால் இம்மாதிரி நடப்பதற்கு வசதியளிப்பது சென்னைபோன்ற நகரங்களேயாகும். அதனால் படிப்பு ஒன்றையே கவனிக்காமல், பெண்மையின் நலத்தையுங் கூடக் கவனிக்கவேண்டும். என்போன்ற பெண்கள் ஹாஸ்டலில் இருந்தால் இஷ்டப்படி சுற்ற வசதியளிக்கமாட்டார்கள். அல்லது நம்மைக் கண்டித்து நடத்தும் பெரியோர்களுடன் வசிக்கவேண்டும். நாம் இஷ்டப்படி சுற்றிவிட்டு வரும்பொழுது, ஏன் இவ்வளவு நாழி என்று கேட்டதற்கு, ''மீட்டிங் லெக்சர்'' என்று வாய் கூசாமல் பொய் சொன்னேன். அனுபவம் பற்றாத அக்கா சரியென ஒப்பினாள். சற்றுச் சந்தேகம் கொண்ட அத்திம்பேர் கண்டிக்கத் தொடங்கினாலும், அயலார் பெண் என்ற மனப்பான்மையில் அக்காவின் சமாதானத்தில் அடங்கிவிட்டார். அப்படிக்கின்றி, தீரவிசாரித்து நமது குட்டை உடைத்து விடுவார் என்ற பயமிருந்தால், நமது இஷ்டப்படி நடந்திருக்க முடியுமா?

இயற்கையில் மிளிரும் யௌவனகாலத்துவக்கத்தில் மனம் பொங்கி வரும் பிரவாகத்தின் தன்மையை அடைகிறது. அடங்காத பிரவாகத்தில் எந்த வஸ்துவையும் அடித்துச் செல்வதுபோல், எதிர்ப்புக்களையும் ஏற்றத் தாழ்வுகளையும் சிந்திக்கமுடியாமல் யௌவனவேகம் சென்றவிடமெல்லாம் இழுபடுகிறது மனம். பிரவாகத்தினால் ஜீவராசிகளுக்குக் கெடுதல் வராமல் அணைபோட்டு உபயோகப்படும் மார்க்கத்தில் பிரவாகத்தை எழுப்புவதுபோல், யௌவனத்தின் வேகத்தை இஷ்டப்படிவிட வசதியில்லாமல் ஒருவித விதிக்குள் கட்டுப்படுத்துவது மிகவும் நன்மைதரும் என்று நினைக்கிறேன். கல்வி கேள்விகளில் மனம் சென்றாலும் எவ்வித உயர்ந்த நோக்கத்தை அடைய விரும்பினாலும் இயற்கையை மீறுவது என்பது சிரமசாத்தியமான விஷயம். நான் அடைந்த ஏமாற்றத்தின்வேகம், ஹ்ருத

யத்தின் தாபம், மனக்கொதிப்பு, இவ்விதம் எழுதத்தூண்டினது. பொறுமையுடன் படிக்கவும் என்னை மன்னிக்கவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நேற்று ஐ. ஸி. எஸ். என் அனுமதியின்றி என்னை வந்துபார்த்தார். அவர் நல்ல சிகப்பு நிறம். என்னைவிட நூறுமடங்கு அழகுவாய்ந்தவர். நம்மை ஒப்பமாட்டார் நல்லவேளை என்று நினைத்தேன். எனது அழகு தேவையில்லையாம். எனது பாட்டு (இஷ்டமில்லாமல் பாடின முகாரி க்ஷிணமைதிகோ) அவருக்குப் பிடித்துவிட்டதாம். தமக்குச் சமதையாக ஆங்கிலம் பேசும் பெண்ணிற்காக வீசின வலையில் அகப்பட்டுவிட்டேனாம்.

நேற்று இரவே நிச்சயம்செய்து, பாக்கு வெற்றிலை கொடுத்து, வருகிற பத்தாம்தேதி முகூர்த்தமும் நிச்சயிக்கப்பட்டாய்விட்டது. இரவே தகப்பனாரும் பிள்ளையும் சென்றுவிட்டார்கள். என்னை ஒரு வார்த்தை கேட்காமல் அப்பா இப்படிச் செய்வார் என்று நான் நினைக்கவில்லை. அவர் அப்படிச்செய்தும், தைரியத்துடன் அவர்கள் சென்றதும்,

"என்ன அப்பா! என்னைக் கேட்காமலே நிச்சயம் செய்துவிட்டீர்களே" என்றேன்.

"ஏதாவது சற்றுக் குறைவுபாடு தோன்றினால்தானே உன்னைக்கேட்கவேண்டும், அவன் உன்னைப்பார்த்துச் சம்மதிக்கவேண்டுமே என்று கவலைப்பட்டேன், உன் அதிர்ஷ்டம் அவனை மயக்கிற்று. உன்னைவிட நல்ல அழகன். தங்கமான குணம் என்று அவ்வூர் முழுவதும் சொல்லுகிறார்கள். கலெக்டர் உத்தியோகம். ஆயிரக்கணக்கில் சம்பளம். நல்ல குலம். ஐ. ஸி. எஸ். ஸின் சம்சாரம் என்று சொல்லிக்கொள்ள விரும்பாத பெண்கள் உண்டா? எத்தனையோ பெண்கள் அவனுக்காகத் தவம் கிடக்கிறார்கள். உன் அதிர்ஷ்டம் சம்மதித்தான். உன்னைக் கேட்பதற்கு என்ன இருக்கிறது?"

"இவை எல்லாவற்றையும்விட காதல் என்பதுதானே முக்கியம்?"

"காதலாவது, கத்திரிக்காயாவது? கல்யாணமானால் காதல்தானேவரும்"

"முன்னால் ஒருவர்மீது அது ஏற்பட்டிருந்தால்?"

"இதைப்பார் ஜீஜி! முன்னால் பின்னால் என்று தறிதலைபோல ஆரம்பிக்காதே. நான் உனக்கு நன்மைதான் செய்வேன் காதலெல்லாம் வெறும் அர்த்தமற்ற பிரமை"

"இல்லையப்பா! இது என்ன விளையாட்டான விஷயமா? நம்ம ராஜுவிற்கு என்ன குறை?"

"என்ன? ராஜுவா? ரொம்ப அழகு. ஜாதி விட்ட சம்பந்தம் ஒன்றுதான் பாக்கி. நான் சம்மதித்தாலும் அவர்கள் சம்மதிக்கமாட்டார்கள். அவன் என்ன முயற்சி செய்தாலும் முந்நூறுக்குமேல் சம்பளம் வாங்கமுடியாது. உன் அக்காமார்களை உயர்ந்த இடங்களில் கொடுத்துவிட்டு உன்னை இந்த இடத்தில் கொடுக்க அம்மா சம்மதிப்பாளா? என்மனம் ஒப்புமா? சிறுசாலக்ஷணமாகச் செய்வதைச் சரியெனப் பார்த்துக்கொள்.

"பணம், குலம் இவைகளை இந்த நூற்றாண்டிலுமா கவனிப்பார்கள்? மனமொத்தால் யாவும் கிடைத்தாற்போல்தான். இது விஷயத்தில் நீங்கள் என்னிஷ்டத்தைக் கவனிக்க வேண்டியது முக்கியம். ராஜுவும் என்னைப் போல்தான் விரும்புகிறார்" என்றதற்கு அவர் சொன்ன பதில் என்னை மேலே பேசமுடியாமல் செய்துவிட்டது.

"ஜீஜி! 'தான்கெட்டதுமன்றி சந்திரபுஷ்கரணியையும்கூடக் கெடுத்தானாம்' என்பது போலிருக்கிறது. ஒரு நாளும் ராஜு அவ்வித எண்ணங்கொண்டிருக்கமாட்டான். அவன் மாசற்று, கள்ளமின்றி உன்னிடம் பழகியதை நீ வித்தியாசமாக நினைத்துக்கொண்டுவிட்டாய். அவன் குணம் எனக்குத் தெரியும். அவன் தன்மையை ஆராய்ந்தபிறகே உன்னை அவனிடம் அச்சமின்றிப்பழக அனுமதி அளித்தேன். இந்த நினைப்புடன்தான் பழகினேன் என்று அவனே நேரில் சொன்னாலும் உனக்காகச் சொல்லுகிறான், ஹ்ருதய பூர்வமாகச் சொல்லவில்லையென்றே நினைப்பேன். உன் கல்யாணத்திற்கு உதவியாக வரும்படி எழுதப்போகிறேன். அவன் வராமலிருப்பானானால் உன் வார்த்தையை ஓரளவு நம்புவேன். பிறகு அவனை மனித வர்க்கத்தில் சேர்க்கமாட்டேன். முகாலோபமும் செய்யமாட்டேன். அவன் மனதில் கள்ள எண்ணமே கிடையாது. அவன் உத்தமன். நீ தவறாக எண்ணிவிட்டாய். இனி வீணாகப் பிதற்றிக்கொண்டிருக்காதே. நான் வாக்குக் கொடுத்தாய்விட்டது. அவன் நமது பணத்தைக் காரனல்ல. உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவன். நான் மாறினால் என் மானம் கப்பலேற வேண்டியதுதான். பிறகு உலகத்தின்முன் தலைகாட்டமுடியாது. உனக்கு யாதொரு குறையும் வாராது, நீங்கள் அன்னியோன்னிய தம்பதிகளாக வாழ்வதை நான் பார்க்கப்போகிறேன். அவரைவிட்டு எப்படி வரமுடியும் என்று நீ சொல்லும்பொழுது நான் சொல்லுகிறேன். வீணாக ராஜுவைப் பழிக்கு ஆளாக்கதே" என்றார்.

நான் பதில்பேச என்ன இருக்கிறது. இதன் தாத்பர்யத்தை ஆராயும் பொறுப்பை உங்கள் சிந்தனைக்கே விட்டுவிட்டேன். இனிமேல் நேர்வழியில் என் எண்ணம் கைகூடாது. அதனால் கல்யாணத்திற்கு முதல்நாள் காலை தாங்கள் வந்துவிடுங்கள். இரவு சந்தடியில்

# BALANCE

## AND THE BALANCE WHEEL



கடிகாரம் நுட்பமாக மணியைக் குறிப்பது பாலன்ஸின் எடையும் ஹேர் ஸ்பிரிங்கின் வலுவும் சரியான விகிதத்தில் அமைக்கப்பட்டிருப்பதைப் பொறுத்திருக்கிறது. இம்மூலப் பாகங்கள் உலகத்திலேயே கை தேர்ந்த நிபுணர்களால் சம நிலையிலும் சோதனையிலும் நேர்மையுடனிருக்கும் வகையில் வெஸ்ட் எண்டு கடிகாரங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது.

மிக நவீன சாஸ்திர விதிப்படி கட்டப்பட்டுள்ளவை வெஸ்ட் எண்டு கடிகாரங்கள். அவைகளை ஆக்க உபயோகப்படுத்தப் படும் மிக உயர்ந்த சாமான்களும் இணையற்ற கைத்திறனும் வெஸ்ட் எண்டு கடிகாரங்கள் நம்பத்தகுந்த நீடித்துழைக்கும் மணிகாட்டி என்பதற்கு காரண்டி அளிக்கின்றன.



காகிதக் கட்டுப்பாடு ஆர்டரின்படி காட்லாக் அனுப்ப இயலவில்லை என வருந்துகிறோம்.



சப்ளைகள் சரிவர வருவதில்லை. ஆகையால் எல்லா ரகங்களையும் சப்ளை செய்ய இயலாது. ஸ்டாக் உள்ளவரை சப்ளை செய்வோம்.

# WEST END WATCH Co

BOMBAY CALCUTTA

மறைந்துவிடுவோம். என்மீது இருக்கும் நகைகள் குறைந்தது மூவாயிர ரூபாய்கள் இருக்கும். கல்கத்தா, ஜான்ஸி, அல்லது இலங்கை முதலிய இடங்களுக்கு டிக்கெட் வாங்கப் பணம் மட்டும் கொண்டுவாருங்கள். பிறகு இருவருக்கும் வித்தையிருக்கிறது. நமது உண்மையான காதலுக்குமுன் எதுவும் தேவையில்லை. உங்களுடன் எந்தக் கஷ்டமனுபவித்தாலும் அது ஸ்வர்க்க பதவியே. என் மனதிற்கு வேறொன்றும் எட்டவில்லை. இஷ்டத்திற்கு விரோதமாக நடக்கும் பெற்றோர்கள் அவமானமடையட்டும். பிற்காலதில் யாவும் சரியாகப் போய்விடும். நிச்சயம் நம்மிரு பேற்றோர்களும் பிறகு நம்மை வரவேற்பார்கள்.

தாங்கள் வரத்தவறினால் என் நிலைமை என்னவாகுமோ? பிறகு என்னை நொந்து கொள்ளக்கூடாது. தாய் தந்தையரின் சொற்களில் கடமையின் வேகத்தில் கட்டுப்பட்டு மணமகளானாலும் ஆகலாம்; மணமகள் பிணமகள் ஆனாலும் ஆகலாம். எல்லாம் அந்தச் சமயம் ஏற்படும் மன நிலைமையைப் பொறுத்ததே.

N. B. இந்தக் கல்யாணத்திற்கு முனைந்து நின்றவர் பட்டுவின் புருஷன். அர்த்தம் உங்கள் மனம் அறியும். அவர் முகத்தில் கரி பூச வேண்டும் என்பது எனது ஆவல்.

இப்படிக்கு உங்கள் வரவை

ஆவலுடன் எதிர்பார்க்கும்

அடிமை,

ஜிஜி (ஸௌம்யமி)

கடிதத்தைப் படித்து முடித்ததும் அவ்வறையிலுள்ள வஸ்து முழுவதும் ஒரே சுற்றாகச் சுற்றுவதுபோலிருந்தது. மனதில் துக்கம், அக்னி ஜ்வாலை வீசுவதுபோன்ற உணர்ச்சியே தோன்றிற்று. அவ்விஷயங்களைச் சிந்திக்கச் சிந்திக்க ஒன்றுமே தோன்றவில்லை. இன்ன முடிவிற்கு வருவது என்பதும் புலப்படவில்லை. கடிதத்தை மூன்றுமுறை படித்தான். வாக்யம் ஒவ்வொன்றும் உருப்பெற்று அவன்முன் நிற்பதுபோலிருந்தது. காதல் ஒன்றை மட்டும் சிந்திக்கும்பொழுது ஜீஜியின் யோசனைப்படி நடப்பதுதான் முடிவு என்ற தீர்மானம் தோன்றும். முனிசிப்பின் அளவற்ற நம்பிக்கையின் வாக்கியத்தை நினைக்கும்பொழுது நம்பிக்கைத் துரோகம் என்ற உணர்ச்சி, அவரின் நம்பிக்கைக்காக எந்தவிதத் தியாகமும் செய்யலாம் என்ற முடிவு தோன்றிற்று. இதில் எதற்கு முதல் ஸ்தானம் கொடுப்பது என்ற சிந்தனையில் ஆழ்ந்தவண்ணம் படுத்திருந்தான். அவன் மனதைப்போலவே அந்த அறையும் இருளால் நிரம்பி, சற்று நேரம் சென்றதும் பௌர்ணமி சந்திரன் உதயமானான். ஜன்னல் வழியாக இவன் முகத்தில் நிலவின் ஒளி விழுந்தது. சந்திரனையே உற்றுப் பார்க்கும்பொழுது,

"ராஜூ என்ன சிந்தனை? காதல் மனிதனைப் பைத்தியமாக்கிவிடுகிறது. கடமையை மறக்கச்செய்கிறது. நான்கூட காதல் வசமாகித் கடமையை மறந்து நம்பிக்கைத் துரோகமாகத் தாரையை அடைந்து, சாபத்திற்கு உள்ளானேன். அப்படியும் கடமைக்குக் கட்டுப்பட்டுக் காதலை உதறினதால் இந்தமட்டும் ஒருநாளாவது பூர்ண அம்சம் பெற்றேன். என்று அவனைப் பார்த்துச் சொல்லுவதுபோலிருந்தது அவன் மனதிற்கு. சற்று நேரம் கண்களை மூடினான். மனம் ஒரு முடிவிற்கு வந்ததாகத் தோன்றவே எழுந்து விளக்கின் ஸ்விச்சைப் போட்டான். எதிரில் மாட்டப்பட்ட சாந்தரூபியான மஹாத்மாவின் படத்தைக் கையெடுத்துக் கும்பிட்டான். புயல் காற்றிலகப்பட்ட மரம் காற்று நின்றதும், அசையாமல் நிற்கும் சாந்த நிலைமையை அடைந்தது அவன் மனம்.

## 7

"ஜிஜி! ராஜூ. வந்துவிட்டான்[பார்த்தாயா? என் குறி தப்பாது" என்றார் முனிசிப்.

"பதில் பேசாமல் அவ்விடம்விட்டுச் சென்றாள் ஜீஜி"

"ராஜூ! ஜீஜி ஏதோ உளறிக்கொண்டிருக்கிறாள். நான் ஒன்றையும் நம்பவில்லை. நீ அவளுக்குப் புத்திமதி சொல்லு. பள்ளிப் பரீக்ஷையில் உன் முயற்சியால் வெற்றிபெற்றதுபோல் வாழ்க்கைப் பரீக்ஷையிலும் உன் உபதேசத்தால் வெற்றிகாணட்டும்" என்றார் முனிசிப்.

"அம்மா!" என்று நினைக்கும்பொழுது மெய் சிலிர்த்தது ராஜூவுக்கு. என்ன உதார குணம், என்ன நம்பிக்கை? 'இதற்காக நாம் எதைத்தான் தியாகம் செய்யக்கூடாது. 'உங்கள் நம்பிக்கைக்கு நான் பாத்திரமல்லவே' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டான். "மாப்பிள்ளை ஜோராக இருக்கிறார். மிகவும் சரஸகுணம். ஒரு மணி சாவகாசத்தில் என்னுடன் அத்யந்த நண்பராய்விட்டார். அநேக வருஷங்களாகத் தேடி அருமையான வரனைத் தான் கண்டுபிடித்திருக்கிறீர்கள். இதில் ஆக்ஷேபனைக்கு இடமேயில்லையே. கல்யாணம் முடிந்துவிட்டால்யாவும் சரியாகப்போய்விடும். நானும் உங்கள் சித்தப்படியே சொல்லுகிறேன்" என்றான் வெளிக்கு.

மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் விமரிசையாக ஆரம்பமாயிற்று. பெயர்பெற்ற நாயனக்காரர்களும், உயர்ந்த பாண்டு வாத்தியக்காரர்களும் மாறி மாறி அள்ளி வீசும் இன்னிசையில் யாவர் மனமும் லயித்தது. வீட்டில் ஒருவருமில்லை; வேலைக்காரர்கள் வேலை செய்துகொண்டிருந்தனர். ஏதோ உறவினர் ஓரிரண்டு பேர்கள் போவதும் வருவதுமாகவிருந்தனர். ஜீஜி சர்வாலங்கிருத பூஷிதையாக

மாடியில் சந்தனம் புஷ்பம் தாம்பூலம் இவைகள் வைத்திருக்கும் அறையில் வாசற் பக்கமாக உள்ள ஜன்னலின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்.

ராஜு வந்ததுமுதல் தன்னைத் தனியிடத்தில் சந்திக்கும்படியாக எவ்வளவோ ஜாடை செய்தும், அதை அறிந்தவனாகவே காட்டிக்கொள்ள வில்லை ராஜு. அவன் என்ன தீர்மானத்தில் இருக்கிறான் என்பதை அறியமுடியவில்லை. இதனால் அவள் மனம் சொல்லமுடியாத வேதனையை அடைந்தது. அவ்வறையில் நின்றுகொண்டிருந்தால் எப்படியும் புஷ்பம் எடுக்கவருவான், அப்பொழுது அவனை மடக்க லாம் என நினைத்தாள். அவள் குறிதப்ப வில்லை. ராஜு அவ்வறைக்குள் வந்தான். இவளைக்கண்டதும் திடுக்கிட்டு நின்றுவிட் டான். ஆஹா! இந்த அலங்காரம் நமக்கு உரிமையாகவேண்டியது என்ற நினைப்பு ஓர் விநாடியில் தோன்றி மறைந்தது. அடுத்த விநாடி என்ன மயக்கம்? என்று நிதானித்து ஜிஜி!'' இவ்விடம் ஏன் தனியாக நிற்கிறாய்?'' என்றான்.

''உங்களைப் பிடிக்கவே. இப்படி என்னைச் சித்ரவதை செய்வதில் உங்களுக்கு என்ன திருப்தி? வந்ததுமுதல் நானும் பார்க்கிறேன். என்னைத் தனியிடத்தில் காணாமலிருக்கப் பிரயத்தனம் செய்கிறீர்கள். முதன் முதல் வண்டினம் என்று சொன்னதற்கு வந்த கோபம்? இப்பொழுது நடக்கும்விதம்?''

''ஜிஜி! என்னை மன்னித்துவிடு. ஏன் அவ் விஷயங்களை நினைப்பூட்டுகிறாய்? வேண்டாம், அது ஒரு ஜன்மம். இது மறு ஜன்மம்'' என்று ஒரு கட்டு மாலைகளைக் கையிலெடுத்துக் கொண்டு திரும்பினான்.

ஒரே எட்டில் தாவி அவன் கையைப் பிடித்து நிறுத்திவிட்டு, ''அம்மாலைகளுக்கு அவசர மில்லை. என் மாலைக்கு வழி சொல்லிவிட்டுச் செல்லுங்கள்.''

''என்ன? இன்னுமா அந்த எண்ணம்?''

''இன்னுமா? மணிக் கணக்கை எதிர்பார்த்த வண்ணமிருக்கிறேன். சாப்பாடு முடிந்ததும் எனக்குத் தலைவலி என்று சொல்லிவிட்டு அதோ எதிர்ப்பக்கத்து அறையில் உள் தாளிட்டுக்கொள்ளப் போகிறேன். வடக்குப் பக்கத்து வராண்டா சிறியது. அதில் ஒருவரும் நடமாட மாட்டார்கள். எந்தச் சமயம் அந்த வராந்தா வழியாக ஜன்னலுக்குப் பக்கத்தில் வந்தாலும், நான் தயாராக நின்றுகொண்டிருப்பேன். ஜன்னல் நிலைக்கதவு திறக்கமுடியும். இருவரும் வராந்தா வழியாகப் பத்தடி சென்றால் பக்கத்துத் தோட்டத்தின் சுவர் படிபோல் இறங்கும்படியாக இருக்கிறது. அதில் குதித்துவிட்டோமானால் நேரே ஆற்றுக்குச் சென்றுவிடலாம். ஜலம் குறைவு. தாண்டிக் கரையேறினால் ஸ்டேஷன். ஒரு மணிக்குச் சென்னைக்கு வண்டி புறப்படும். இருவரும் மூடிக்கொள்ள இரண்டு கம்பளியும், சிறு தோல் பெட்டியில் அவசியமான சாமானும் துணியும் எடுத்துவைத்திருக்கிறேன்.''

அச் சொற்களால் அவன் மனம் நிலைதடுமாறிற்று. சரியென்று சொல்லிவிடுவோமா என்றுகூட நினைத்தான். ஆனால் மூனிசிப்பின் நம்பிக்கையான சொற்களும், சாந்தமான முகமும் மனக் கண்ணில் தோன்ற, சுயநினைவு தோன்றலாயிற்று. தன் கையைப் பிடித்திருந்த அவள் கையை விலக்கிவிட்டு, ''ஜிஜி! உன் காதல் போற்றத் தகுந்தது. உன் உறுதி மெச்சத்தகுந்தது. ஆனால் உன் கடிதம் என்னைப் புனர்ஜன்மம் எடுக்கச் செய்துவிட்டது. உன் தந்தையின் பரந்த நோக்கம் என் ஒவ்வோர் அணுவிலுமுள்ள ரத்தத்தையும் கொதிக்கச் செய்கிறது. அவமானத்தினால் அவரது நம்பிக்கைக்குத் துரோகம் செய்தேனானால், நான் எங்குச்சென்றாலும் சுகம்பெற முடியாது. உன் கடிதமூலம் அவர் வாக்யம் எனது மூடத்தனத்தைத் தெளிவுபடுத்திவிட்டது. அவர் என்னை இன்று நடத்தும் விதத்தையும், சொன்ன விஷயங்களையும் நினைக்கும்பொழுது எனது தேகத்தைச் செருப்பாகத் தைத்துப் போட்டாலும் என் பாவம் தீராது. நம்பவைத்துக் கழுத்தறுப்


## நரையை ஒழியுங்கள்!



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலேன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: **அப்பா & கோ.,**
கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

## கேடரைன்



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: **அப்பா & கோ.,** கெமிஸ்ட்ஸ்,
286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

பது எவ்வளவு கொடுமை? நீ இந்த நோக்கத்துடனா சுற்றினாய்? பழகினாய்? என்று என்னைக் கேட்டுவிட்டால் என் நிலைமை என்னவாகும்? நான் அதிகம் சொல்லவேண்டுவதில்லை. உன் கடிதப்படி காதல் மனப்பிராந்தியே. சரீர இச்சையில்லாத காதலே தெய்விகம். அதுதான் இனி நம்மிடை காதல் என்று சொல்லப்படவேண்டியது. நமது நடத்தையினாலேயே மனம் இவ்வளவு துன்பத்தை யடைந்தது. ஆனால் இப்பொழுது தெளிவுபெற்றுவிட்டது. இனி நீ எனது உடன்பிறந்த சகோதரி. ஒரு விஷயம் சிந்தித்துப்பார். நாம் இஷ்டப்படி சுற்றினாலும், வரம்பிற்கு மீறி ஒருநாளும் நடந்ததில்லை. சகோதரனும், சகோதரியும் விளையாடுவதைப்போல் விளையாடினோம், அவ்வளவே. ஏதோ சில சமயங்களில் வார்த்தைகளை வித்யாசமாகப் பரிமாறியிருப்போமே தவிர வேறு தவறினதில்லை. அந்தமட்டும் வருங்காலத்தைக் காட்டும் குறிப்பாகப் பகவான் புத்தி தந்தார். யாராகிலும் வந்துவிடுவார்கள். நான் சென்றுவிடவேண்டும். வரப்போகும் கணவனை ஹ்ருதயத்தின் காதல் பீடத்தில் வை. எனக்கு அன்புப் பீடத்தில் இடம் வை. எக்காலத்திலும் உனக்காக எந்த உதவியையும், எந்தத் தியாகத்தையும் செய்யப் பின்வாங்கமாட்டேன். இது சத்யம்'' என்றான்.

"ஜீஜியின் கண்களில் நீர் அருவிபோல் வந்துகொண்டிருந்தது. உங்கள் முடிவான தீர்மானம் இதுதானா?

"ஆமாம், ஜீஜி! கண்ணீர் விடாதே. உறுதியுற்ற மனதைக் கலைத்துவிடாதே.''

"ஒருவனை எண்ணி மற்றவனுடன் வாழ்வதுதானா என் விதி?''

"விதியில்லை. மதிக்குறைவு. ஜீஜி! ஏன் வருந்துகிறாய்? விஷயங்களை எவ்வளவு தெளிவாகக் காட்டிக் கடிதம் எழுதினாய். நீ எழுதியதுபோல் நாகரிகத்தின் போக்கில் ஆண் பெண் சமத்துவம் என்ற மனப்பிராந்தியில், இயற்கையை மீறமுடியாது என்ற பெரியோர்களின் வழக்கத்தை மீறி ஸ்வதந்திரமாக நடந்ததின் பலன். நம்விஷயம் மோசமாகப் போய்விடவில்லை. இதனிலும் கேவலமாக எவ்வளவு பெயர்கள் மிக்க துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். எல்லாம் அனுபவத்தின்பின் தெரிகிறது. மனதைத் தைரியப்படுத்திக்கொள். என்மீது பரிசுத்தமான அன்பு என்றால் நீ சந்தோஷமாக இருக்க வேண்டும்''

"உம்'' என்ற நீண்ட மூச்சிற்குப்பின் "உங்கள் சித்தம். என்றும் என்குரு'' என்று அவனை நமஸ்கரித்தாள்.

"நீதான் எனது குரு. உனது கடிதம் எவ்வித ஆழ்ந்த கருத்தைக் காட்டிற்று. எப்படி இவ்வளவு விஷயம் உதயமாயிற்று''

"அது எனக்கே தெரியவில்லை. அப்பாவிடம் தர்க்கம் செய்து ஏமாற்றத்துடன் படுக்கைக்குச் சென்றேன். தாங்கமுடியாத அழுகை பீரிட்டுக்கொண்டு வந்தது. பெண்கள் சுதந்திரம் என்று மார்புதட்டுவதுதான் மிச்சம், காரியத்தில் ஒன்றுமில்லைஎன்றுநினைக்கும்பொழுது பழைய சம்பிரதாயங்களைப் பற்றிய சிந்தனை ஓடிற்று. அதிலிருந்து நமது காதலின் தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு விஷயமாக நினைத்துப் பார்க்கும்பொழுது ஒவ்வொன்றும் தெளிவாயிற்று. துக்கத்தின் முடிவு காணாத நிலைமையில் கடிதம் எழுத உட்கார்ந்தேன். பேனாவைக் கையில் பிடித்ததும், தோன்றிய விஷயங்களைத் தாபம்திர எழுதினேன். மறுபடி படித்துப் பார்க்கக்கூட அவகாசமில்லை. ஒருவருக்கும் தெரியக்கூடாது என்ற பயத்தில் போஸ்ட் செய்துவிட்டேன்''

"உன் தாபச் சொற்கள் என் தாபத்தைப் போக்கடித்தன. எல்லாம் ஒரு கனவு. உன் வாழ்க்கைப் பூங்காவில் மணமுள்ள காதல் மலர்கள் விகஸிக்கட்டும். இப்பொழுது நீ முகத்தை அலம்பிப் பொட்டு வைத்துக்கொள். வீண் சந்தேகத்திற்கு இடமளிக்காதே''

"அப்படியே செய்கிறேன். உங்கள் வாழ்க்கைப்படகு ஆனந்த சாகரத்தில் மிதந்தால்தான், என் வாழ்க்கை மலர் விரியும். யாவும் விதிபோல் நடக்கும். இனிமேல் மனம் தடுமாறாது என்பது சத்யம்.''

எவ்வளவு முயன்றாலும் வேரூன்றிய காதல் தீயை அடியுடன் அணைக்கும் சக்தி, காலத்தின் எல்லையையும் தாண்டி நிற்கிறது. மாலையைக் கையிலேந்தி நிற்கும் ஜீஜியைப் பார்க்கும்பொழுது, ராஜுவின் ஹிருதயத்தை மின்சாரம் தாக்குவது போன்ற உணர்ச்சி மிகுந்தது. மணமகனுக்குப் பின்னால் சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்த ராஜுவை ஜீஜியின் கண்கள் அவளை யறியாமலேயே நோக்கின. துக்கம் நெஞ்சை யடைத்தது. கண்களில் நீர் நிரம்பிற்று. அடுத்த க்ஷணம் வழிந்து ஓடிவிடும், பிறகு? இதைக்கண்ட ராஜு சட்டென மறைந்துவிட்டான். "நாழிகையாய் விட்டது, சிக்கிரம் மாலையைப்போடு'' என்ற தகப்பனாரின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு, சட்டெனக் கணவன் கழுத்தில் மாலையைப்போட்டுவிட்டு வியர்வையைத் துடைப்பதுபோல் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். பிறகு கல்யாணம் முடியும் மட்டும் கூடிய மட்டும் ஜீஜியின் முன் அதிகமாக வராமல் நடந்தான் ராஜு. தான் கல்யாணத்திற்கு வந்தது பிசகு என்று நினைத்தான். ஆனால் முனிசிப்பின் சொற்கள்?

(அடுத்த இதழில் முடியும்)

# வாசனைப் பொருள்கள்

ஆர். கே. விசுவநாதன்

பூஜை வேளைகளில் சாம்பிராணி, ஊதுவத்தி போன்ற வாசனை தரும் பொருள்களை உபயோகிப்பது நம்நாட்டில் தொன்றுதொட்டுவரும் வழக்கங்களில் ஒன்றாகும். பழங்காலத்தில் எஜிப்த் போன்ற நாடுகளில் உயிர் நீங்கியபின்னர் பலவகை வாஸனைப் பொருள்களை உபயோகித்து, துர்நாற்றம் இல்லாமல் பிணத்தைப் பாதுகாத்துவந்தார்கள். அக்காலத்தில் அநேகர் இத்தொழிலில் ஈடுபட்டுவந்ததாகவும் சரித்திர வாயிலாகத் தெரிகின்றது. நாளடைவில் வாஸனைப் பொருள்களை உபயோகிப்பது ரஸிகச் சின்னங்களில் ஒன்று என்று மக்கள் கருதலாயினர். வெப்பத்தின் கொடுமையை ஒருவாறு தணித்துக்கொள்ள ஸ்நானம் செய்யும்போது வாஸனைத் தைலங்களை உபயோகிக்கலானார்கள். விஞ்ஞானத்தின் விளைவாகப் பலவகைக் கிரீம்கள், அத்தர்கள், ஸோப்புகள் முதலியவற்றைத் தயாரிக்கும் முறைகள் எல்லா நாடுகளிலும் பிரபலமாயின. இத்தொழிலில் பிரான்ஸ் தேசம் மற்றத் தேசங்களுக்கு வழிகாட்டியாக இருந்துவருகிறது. அங்கே பலவகைப் புஷ்பங்களிலிருந்து அத்தர்களை எடுக்கின்றார்கள். இதற்கென்று பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவ்வாறு எடுக்கப்படும் இயற்கை அத்தர்களைத் தவிர இரசாயனப் பொருள்களைக் கொண்டு இதுபோன்ற அத்தர்களைச் செயற்கையாக ஆங்காங்கே செய்துவருகிறார்கள். இச்செயற்கை அத்தர்களே எங்கும் மலிந்துவிட்டன. ஏனெனில் இவற்றை எளிதில் தயாரித்துவிடலாம். செலவு குறைவு. இவற்றை வாங்கி ஏமாற்றம் அடையும் ரஸிகர்கள் அநேகர் உண்டு. அத்தர்கள், ஸோப்புகள் முதலியன எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என்பதை இக்கட்டுரையில் கவனிப்போம்.

மல்லிகை, ரோஜா புஷ்பங்களின் இணையற்ற வாசனையை அனைவரும் கவனித்திருக்கலாம். இவற்றின் இதழ்களில் ஒருவித எண்ணெய் (Essential oil) இருக்கின்றது. இதுதான் வாசனைக்குக் காரணம். மரம், செடி கொடிகளில் புஷ்பங்களைத் தவிர வாஸனை அளிக்கும் மற்றப் பாகங்களும் உண்டு. சில வகை இலைகள் நல்லமணத்தைக் கொடுக்கும். கதிர்ப்பச்சை, விபூதிப்பச்சை, மாசிப்பச்சை, மருக்கொழுந்து போன்ற இலைகளின் மணத்தைத் தமிழ்நாட்டில் உள்ளவர்கள் கவனித்திருக்கலாம். அவைபோல வெட்டிவேர், விளாமிச்சவேர், நன்னாரிவேர் இவற்றின் வாசனையையும், திரவியப்பட்டை, சந்தனப்பட்டை முதலியவற்றின் வாஸனையையும் கவனித்திருக்கலாம். இவற்றிலும் வாஸனைக்குக்காரணமாய் இருப்பது அதே எண்ணெய் தான். பலவகை அத்தர்களைத் தயாரிப்பதற்கு ஒவ்வொன்றின் எண்ணெயையும் வேருகப் பிரிக்கவேண்டும். முன்னாளில் புஷ்பங்களின் இதழ்களையும், மொட்டுக்களையும் நன்றாகக் காயவைத்து நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் ஊறப் போடுவார்கள். நன்றாக ஊறியபின் அத்தர் எண்ணெயுடன் கலந்து நல்ல வாஸனையைத் தரும். தற்காலம் புஷ்பங்களிலிருந்து காய்ச்சி வடித்தல் (Distillation) என்னும் முறையினால் அத்தர்களைத் தயார்செய்கின்றார்கள். முதன்முதலில் அனுஷ்டித்து வந்த முறையில் வாஸனைப்பொருள்களைத் தண்ணீரில் கொதிக்கவைத்து, நன்றாகக் கொதித்த பின்னர், ஆவியைக் குளிரச்செய்து நீரை வேருகவும், எண்ணெயை வேருகவும் பிரித்துவிடுவார்கள். பின்னர் கையாண்ட முறையில் தண்ணீரில் கொதிக்கவைக்காமல் நீராவியால் கொதிக்கவைத்து எண்ணெயைப்பிரித்துவந்தார்கள். நீராவிநன்றாகப்பொருளினூடே புகுந்துசென்று எண்ணெயைப்பிரித்துவிடுவதால் இம்முறையே சிலாக்கியமானது. மல்லிகை, ரோஜா முதலிய புஷ்பங்களிலிருந்து இம்முறையினால்தான் அத்தரை எடுத்து வந்தார்கள். சந்தனக்கட்டை, வேர்கள் முதலியவற்றிருந்து எண்ணெயை எடுக்குமுன் அவற்றை நன்றாகப் பொடிசெய்து கொண்ட பின்னரே நீராவியைச் செலுத்தி அத்தரை எடுத்தார்கள். இம்முறையிலும் சில கெடுதல்கள் உண்டு. நீராவியினால் கொதிக்கவைக்கும்போது அத்தரின் மணம் பாதிக்கப்படுவதைக் கண்டார்கள். மேலும் அத்தர் முழுவதும் கிடைப்பதில்லை. எனவே தற்காலம் வேறு முறைகளைக் கையாண்டுவருகிறார்கள். சீக்கிரம் ஆவியாக மாறக்கூடிய திரவங்களில் (Volatile liquids) வாஸனைப் பொருள்களைக் கரையச்செய்து பின்னர் அதைக் காய்ச்சி, கரைக்கும் திரவத்தை (Solvent)வேருகவும், எண்ணெயைவேருகவும் பிரிக்கின்றார்கள். இதற்குப் பெரும்பாலும் பெட்ரோலியம் ஈதர் (Petroleum ether) என்னும் திரவமே உபயோகப்பட்டுவருகின்றது.

அத்தரை எடுக்கும் சாதனத்தில் காற்றிறுக்கமான பல பாத்திரங்கள் ஒன்றோடொன்று தொடராக இணைக்கப்பட்டிருக்கும். இத்தொடரின் ஒரு முனையில் உள்ள பாத்திரத்தில் கரைக்கும் திரவம் வைக்கப்பட்டிருக்கும். மற்றொரு முனையில் வெற்றிட வடிபாண்டம் (Vacuum still) என்ற கருவி இருக்கும். புஷ்பங்களையும் மொட்டுக்களையும் போடவேண்டிய பாத்திரத்தில் அவற்றைப்போட்டுவிடுவார்கள். கரைக்கும் திரவத்தின் ஆவி அவற்றின்மூலம் உறிஞ்சப்படும். இதனால் அவை திரவத்தில் கரையும். ஆவி வடிபாண்டத்தை அடைந்தவுடன் குளிர்ந்து திரவமாகிவிடும். இதை மறுபடியும் உபயோகிப்பார்கள். திரவத்தில் கரைந்து தங்கும் அத்தர்ச் சத்துக்களுக்கு (Concrete oils) என்றுபெயர். இவற்றில் அத்தருடன் சில மெழுகு வகைகளும் (Waxes) கலந்திருக்கும். இவற்றை நீக்குவதற்கு அத்தர்ச் சத்துக்களை ஆல்ககால் (Alcohol) என்னும் திரவத்தில் போடுவார்கள். இதில் மெழுகுகள் கரைவதில்லை. எனவே அவற்றை வடிகட்டி எடுத்துவிடுவார்கள். அத்தர்மட்டும் ஆல்ககால் திரவத்தில் கரைந்து நிற்குமாதலால் அத்தரை வேறாகவும் ஆல்ககாலை வேறாகவும் வெற்றிட வடி பாண்டத்தின் உதவியால் பிரித்துவிடுவார்கள். வேறொரு வழியிலும் பிரித்துவிடலாம். கலவையில் சிறிது உப்பைப் போட்டால் அத்தர் எண்ணெய் மட்டும் மிதக்கும். எனவே அதை மட்டும் சுலபமாக எடுத்துவிடலாம். இவ்வாறு தயாரித்த அத்தர்கள் சிறிது நிறத்துடன் இருக்கும். சில சாதனங்களினால் அத்தர்களை நிறமில்லாமல் செய்துவிடுவார்கள். உதாரணமாக, புற—ஊதாக்கிரணங்களை (Ultra violet rays) அதனுட்செலுத்தினால் நிறத்தைப் போக்கிவிடலாம்.

இனி ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்களிலிருந்து எண்ணெயை எவ்வாறு எடுக்கின்றார்கள் என்று கூறுவோம். ஆரஞ்சுப் பழத்தின் தோலைச் சிறிது மடக்கினால் அதிலிருந்து எண்ணெய் வருவதைக் கவனிக்கலாம். இந்த எண்ணெயைத் தனியே எடுப்பதற்கு மேனாட்டில் அனேக தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதில் உள்ள யந்திரங்களில் இரண்டு உருளைகள் எப்பொழுதும் சுழன்று கொண்டே இருக்கும். இவற்றினிடையே பழங்களைப் போடுவார்கள். உருளைகளில் உள்ள முட்களினால் தோலில் பல துவாரங்கள் ஏற்பட்டு, பழங்கள் நன்றாக நசுக்கப்படும். இதனால் பழச்சாறுடன் எண்ணெயும் கலந்துவிடும். அவ்வப்போது உருளைகளின்மீது தண்ணீர்த் திரையை அடித்துக் கழுவி வருவார்கள். எண்ணெய் கலந்த பழச்சாற்றை மட்டும் பிரித்து வேறிடத்திற்குக் கொண்டுபோவார்கள். பழச்சாற்றை மைய விலக்கு யந்திரங்கள் (Centrifugal machines) என்று கூறப்படும் சாதனங்களில் செலுத்தி எண்ணெயைப் பிரித்துவிடுவார்கள். ஓரளவு பழச்சாற்றில் கரைந்துள்ள எண்ணெயை முன்புகூறிய காய்ச்சி வடித்தல் முறையினால் பிரித்துவிடுவார்கள்.

தற்காலம் இவ்வத்தர்களை எவ்வாறு செயற்கைப் பொருள்களிலிருந்து தயாரிக்கின்றார்கள் என்று பார்ப்போம். இதற்கு இரசாயனம் உதவி செய்கின்றது. இது எவ்வாறு என்று அறிய மல்லிகைப் புஷ்பத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். மல்லிகைப் புஷ்பத்திலிருந்து எடுத்த அத்தரைச் சோதனைசெய்து வாசனைக்குக் காரணமாய் அதில் அடங்கியுள்ள பாகங்கள், மூலப்பொருள்கள் எவை என்று அறிந்தார்கள். மல்லிகை அத்தரில் நூற்றுக்கு அறுபத்தைந்து சதம் பென்ஸைல் அசிடேட் (Benzyl acetate) என்ற பொருளும், பதினைந்தரை சதம் லினலால் (Linalol) என்ற பொருளும், ஏழரைச் சதம் லினலைல் அசிடேட் (Linalyl acetate) என்ற பொருளும், ஆறு சதம் பென்ஸைல் ஆல்ககால் (Benzyl alcohol) என்ற பொருளும் இருப்பதை அறிந்தார்கள். இங்கே கூறிய இரசாயனப் பொருள்களில் முக்கியமானது பென்ஸைல் அசிடேட் (Benzyl acetate) இதுதான் மல்லிகையின் மணத்துக்கு முக்கிய காரணம். இந்த இரசாயனப் பொருளை எடுத்துக்கொண்டு, இவற்றுடன் மற்றப் பொருள்களையும் கலந்து, செயற்கை அத்தரைத் தயார் செய்கின்றார்கள். செயற்கை அத்தர்களுக்கு இயற்கை அத்தர்களைப் போல மணம் நிறம் முதலியவை இருந்த போதிலும் அதைப்போல மிருதுத் தன்மை இருப்பதில்லை. எனவே இவற்றுடன் இயற்கை அத்தர்களைச் சேர்த்துக்கொண்டுதான் வியாபாரம் செய்கின்றார்கள். இரசாயனத்தின் உதவியால் எல்லா வகைப் புஷ்பங்கள், இலைகள், பட்டைகள் இவற்றில் உள்ள அத்தர்களைபோலச் செயற்கை அத்தர்களைத் தயாரித்து வருகின்றார்கள். இவ்வாறு தயாரித்த அத்தர்களை கொண்டு தைல வகைகள், போமேடுகள் (Pomades), கிரீம்கள் (Creams), பிரிலியன்டைன்கள் (Brilliantines), டால்கம் பவுடர்கள் (Talcum powders) முதலிய அலங்காரப் பூச்சுகளை ஏராளமாக உற்பத்தி செய்து மேனாட்டார்கள் எல்லா நாடுகளிலும் வியாபாரம் செய்து வருகிறார்கள். தற்காலம் நம்நாட்டிலும் பல இடங்களில்




கோடை வெப்பத்தில் மலையூற்றுக்களின் குளிர்நீர் போன்று
— ஆசுவாசமளிப்பது —

வீட்டில் எப்பொழுதும் ஒரு பாட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்

●

டாடாஸ்

# ஓ டி கொலோன

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியர் வீதி, த. பெ. நெ. 31
சென்னை.

## தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

இப்பொருள்கள் செய்யப்பட்டு வருகின்றன. உதாரணமாக, கிரீம் வகையில் ஒன்றை எடுத்துக்கொள்வோம். இதைத் தயாரிப்பதற்கு உபயோகப்படும் மூலப்பொருள் எண்ணெய்ச் சத்து அல்லது கொழுப்பு. இதை நன்கு தயாரித்துப் பின்னர் இத்துடன் வாசனைப்பொருளைச் சேர்ப்பார்கள். இது குளிர்ச்சியுடன் இருக்கும். இதை முகத்திலும் உடம்பிலும் தடவிக்கொண்டால் சருமத்தின் மயிர்த்துவாரங்களில் படிந்து இருக்கும் அழுக்கை எடுத்துவிடும். சருமத்துக்கு மிருதுத் தன்மையையும் கொடுக்கும். டால்கம் பவுடர் (Talcum powder) என்று சொல்லப்படும் மாவைத் தடவிக்கொண்டால் சருமத்திலுள்ள எரிச்சலை நிவர்த்தி செய்யும். இவை எல்லாம் நல்லமுறையில் தயாரிக்கப்படவேண்டும். இல்லாவிடில் இவற்றை உபயோகிப்பதினால் நன்மையைக்காட்டிலும் தீமையே அதிகமாக ஏற்படும். நல்லமுறையில் தயாரிக்கப்படாத கிரீம்களையும் பவுடர்களையும் முகத்தில் உபயோகித்தால் சருமம் சுருங்கி மயிர்த்துவாரங்கள் பெரிதாகிவிடும். எனவே முகத்தின் அழகு கெட்டுவிடும். இதனால் தான் பலர் இவ்வலங்காரப் பூச்சுக்களையும் சௌந்திரிய முறைகளையும் ஏற்றுக்கொள்ளுவதில்லை. இவற்றைப்பற்றிப் பத்திரிகைகளில் விதவிதமாக வரும் எண்ணற்ற விளம்பரங்களிலிருந்து யார்தான் தப்ப முடியும்!

கடைசியாக வாசனை ஸோப்புகள் தயாரிக்கும் விதத்தைப் பார்ப்போம். ஸோப்புகளில் பலவகை உண்டு. பல முறைகளில் தயாரிக்கலாம். பெரும்பாலும் கொதித்தல் முறை (Boiling process) என்ற முறையினால் தான் தயாரிக்கப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் உபயோகப்படும் மூலப்பொருள் பலவித எண்ணெய்களிலுள்ள கொழுப்பு ஆகும். இதைத்தவிர மிருகக் கொழுப்புக்களையும் உபயோகிப்பதுண்டு. தாவர எண்ணெய்களில் தேங்காய், ஆமணக்கு போன்ற எண்ணெய்களே பெரும்பாலும் உபயோகப்படுகின்றன. இவற்றைத் தயார் செய்யும் ஆலைகளில் பெரிய கொதிகலங்கள் உண்டு. இதில் எண்ணெயை எடுத்துக்கொண்டு அத்துடன் ஸோடாக் காரத்தை (Sodium bydroxide) அல்லது பொடாஸியம் காரத்தை (Potasium bydroxide) சேர்ப்பார்கள். இரண்டையும் நன்றாகக் கலக்கி நீராவியைக் கொண்டு கொதிக்கவைப்பார்கள். இரண்டும் ஒன்றோடொன்று நன்றாகக் கலந்து ரஸாயனச் சேர்க்கை முடிவதற்கு இரண்டு மூன்று நாள்கள் ஆகும். முடிவு அடைந்துவிட்டதாவென்று அவ்வப்போது கலவையில் சிறிது எடுத்துச் சோதனைசெய்வார்கள். சேர்க்கை முடிந்தவுடன் அதில் உப்பைக் கொட்டுவார்கள். கொட்டியவுடன் ஸோப்பு பிரிந்து மேலே மிதக்கும். இதை எடுத்துச் சுத்தம் செய்தபின்னர் வாசனைப் பொருள்களைச் சேர்த்துக்கொள்வார்கள். பின்னர் இறுகவைத்துத் துண்டு போடுவார்கள். இவை எல்லாம் இயந்திர சாதனத்தினால் நடைபெறும். ஸோப்புடன் சிறிதும் காரம் தங்கி இருக்கக்கூடாது. இருக்குமானால் சருமத்திற்குக் கெடுதல் ஏற்படும். ஆடைகளை வெளுப்பதற்குத் தயாரிக்கப்படும் ஸோப்புகளில் காரம் தங்கி இருந்தால் பாதகமில்லை.

நம் நாட்டில் ஸோப்புகளைப் பல இடங்களில் தயாரித்து வருகின்றார்கள். முக்கியமாக மைசூர், கள்ளிக்கோட்டை இவ்விடங்களில் உள்ள தொழிற்சாலைகளைக் குறிப்பிடவேண்டும். கள்ளிக்கோட்டையில் உள்ள தொழிற்சாலையைச் சென்னை அரசாங்கத்தார் நடத்திவருகின்றார்கள். ஆரம்பிக்கும் போது இத்தொழிலை நாட்டில் பரப்பவேண்டிய நோக்கத்துடனேயே ஆரம்பித்தார்கள். சில வருஷங்கள்வரை லாபம் இல்லாமலிருந்தது. இந்நிலைமை மாறி 1943 ஆம் வருஷம் வரை ஆதாயம் சுமார் பன்னிரண்டு லக்ஷம் ரூபாய் என்று தெரிகின்றது. இங்கே சில மாணவர்களுக்கு இத்தொழிற் பயிற்சி அளித்துவருகின்றார்கள். அனேக மாணவர்களுக்கு இதைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்பொழுது வாசனைப் பூச்சுக்களையும் (Colmetics) இங்கே தயாரித்து வருகின்றார்கள். எண்ணெய் வித்துக்கள் ஏராளமாய் உள்ள நம் நாட்டில் இது போன்ற தொழிற்சாலைகள் அனேகம் ஏற்பட இடமிருக்கின்றது. வாசனைப் பூச்சுக்களைக்காட்டிலும் ஸோப்புகள் மக்களின் சுகாதாரத்துக்கு அவசியமாதலால் இத்தொழிற்சாலைகள் அனேகம் ஏற்படவேண்டும்.

# “.......................பார்க்கும் விழி நானுனக்கு”

*சாரி*

தன்னுந்தா கோவிலுக்குக் காணிக்கை செலுத்த வந்திருந்த எவ்வளவோ ஜனங்களுள் ராஜம்மாவையும் அலமுவையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆனால் இவர்கள், எல்லோரையும்போல், காணிக்கை செலுத்துவதற்கென்று மட்டும் வரவில்லை. மறுநாள், சென்னை கண் வைத்யசாலை ஒன்றில், அலமுவுக்குச் செய்யப்போகும் சஸ்திர சிகித்சை அனுகூலத்தைத் தரவேண்டுமே என்கிற கவலையில் வந்தவர்கள்.

‘எத்தத் தின்னால் பித்தம் தீரும்’ என்பது வசனம். வியாதியோ, துன்பமோ, துயரமோ இவைகளில் எதையும் நம்மை மீறிய அளவில் அனுபவிக்க நேரிட்டால், இஷ்ட தெய்வத்தையெல்லாம் வேண்டுகிறோம்; நமது ஆத்திரத்தில் கோவிலில் உள்ள விக்ரஹங்களை, வேருடன் பிடுங்கியே எடுக்கிறோம்.

*　　　*　　　*

“அம்மா, இந்தா என் ஈரப்புடவை; புதிசு எங்கே வைத்திருக்கிறாய்? கொடு இப்படி.”

தாயின் கையிலிருந்து புது வஸ்திரங்களை வாங்கி உடுத்துக்கொண்டாள் அலமு.

இமை இரண்டும் மூடிய வண்ணம் இருந்தன; அவைகளின் மேல் கட்டியிருந்த மறைப்புத் தட்டுக்களைத் தற்சமயம் விலக்கியிருந்தாள்.

என்ன அழகு! தாழை மடல்போல் மேனி; தலை நிறையக் கறுத்து அடர்ந்த மயிர்; அரையில் அணிந்திருந்த சிகப்புக் காசிப்பட்டுச் சேலையும் காதில் மின்னிய வைரக்கம்மலும் கண்கொள்ளாச் சேவைதான்.

மூடிய கண்களோடு, முகம் இவ்வளவு அழகுடன் விளங்கினால் தாமரை இதழ்களை ஒத்த அக்கண்கள் திறந்தால்? முகத்தின் வசீகரத்திற்கு, பிறகு ஓர் எல்லையும் உண்டோ?

“அலமு, இங்கே வா. தலையை உலர்த்திப் பின்னல் போடுகிறேன். மாவிளக்கு நானே ஏத்திவிடலாம்; ஆனால் நீ ஏத்தினால்......”

ராஜம்மாள் பெண்ணின் முகத்தைப் பார்த்தாள்; அதிக வாட்டமுற்றிருப்பது தெரிந்தது.

“இதனால் எல்லாம் என்ன அம்மா? நீ எதைச் செய்யச் சொன்னாலும் செய்கிறேன். ஆனால்... என் கண்கள் மீண்டும் பழைய நிலைமைக்கு வருமா? நீ என்ன நினைக்கிறாய்? அதைச் சொல்லு.”

“அலமு, நீ அதைரியப்படக்கூடாது. நான் பழையகாலத்து மனுஷி; ஆகையால் கொஞ்சம் தெய்வ நம்பிக்கை உண்டு. பூர்ண அனுகூலம் கிட்டுமென்றே நம்புகிறேன். நமது வாழ்க்கையில், கடவுள் இனியும் சோதிக்க மாட்டார் என்றே நீயும் நம்பவேண்டும்.”

சற்றுநேரம் இருவரும் பேசவில்லை.

“அம்மா நாளைக்காலை பம்பாய் எக்ஸ்பிரசில் அவர் வந்து விடுவாரோ? ஆபரேஷன் பகல் 12 மணிக்கு என்று டாக்டர் எழுதியிருக்கிறாரே?”

“போடி பைத்தியம். அவனும் சிறிசுதானே; வராவிட்டால் என்ன பிரமாதம்? நான் இல்லையா? வைத்தியம் முடிந்து கண் சௌக்யமான பிறகுதான் மாப்பிள்ளை வரட்டுமே...”

மறுபடியும் மௌனம். தாய், பெண்ணின் முகத்தைக்கூர்ந்து கவனித்தாள். தன் சக்திக்கு மீறிய ஏதோ ஒரு விஷயத்தைச் சிந்தித்து உள்ளம் கலங்குவதை, அக்குழந்தை முகம் தெளிவாகக் காட்டியது.

*　　　*　　　*

“புறப்பட முடியவில்லை. ஆபரேஷனை நிறுத்த வேண்டாம். ஒரு வாரத்தில் வருகிறேன். அன்பு. கண்ணன்”

இந்தத் தந்தியை ஓர் ஆள் கொண்டுவந்து ராஜம்மாவிடம் கொடுத்துவிட்டுச் சென்றான். கண் வைத்யசாலையின் ஓர் அறையில் அலமு படுத்திருக்கிறாள். பம்பாய் எக்ஸ்பிரஸ் வந்து சேரும் நேரத்தை ஆவலுடன் எதிர் நோக்கியிருந்த இவர்களுக்கு இந்தத் தந்தி எவ்வித மான குழப்பத்தை உண்டாக்கிற்று என்பது நம்மால் நினைக்கவும் முடியாது.

“அம்மா, ஆபரேஷனை ஒரு வாரம் ஒத்திப் போடுவோமா? என்ன சொல்கிறாய்?” அலமுவின் குரலில் இருந்த ஏக்கம் ராஜம்மாளைத் திடுக்கிடச்செய்தது. என்ன பதில் சொல்வது? ஒரு வாரம் ஒத்திப் போடுவதா? பிறகு?

அன்று காலையில், ஆபரேஷன் சம்பந்தமாகக் கண் வைத்தியரிடம் பேசிக்கொண்டிருக்கையில், அவர் சொன்ன சில வார்த்தைகள் நினைவிற்கு வந்தன.

“நல்ல காலத்திற்கு நீங்கள் இப்போழுதே வந்தீர்கள், அம்மா—இன்னும் ஒரு வாரம் கழித்து வந்திருந்தால் ஆபரேஷன் செய்தும் பலன் இருந்திராது. இப்பொழுது கூட......!”

"ஐயோ, அப்படியானால், பார்வை கிட்டுவது சந்தேகம்தானா?"

"அப்படி நான் சொல்லவில்லை. கண்ணைப் பரீக்ஷை செய்து தானே நிர்மானிக்கமுடியும்? ஆயினும் இது மிகவும் ஆபத்தான கேஸ் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை..."

இதற்குமேல் டாக்டர் சொன்னது ஒன்றும் ராஜம்மாவின் காதில் விழவில்லை. பித்துப் பிடித்த மாதிரி அவள் கேட்டுக்கொண்டு நின்றாள்.

அப்பொழுதுமுதல் தற்சமயம் வரை அவளுக்கு ஸதா ஒரே எண்ணம்தான். தன் கவலையைப் பகிர்ந்துகொண்டு, முழுப் பொறுப்பையும் ஏற்க மாப்பிள்ளை கண்ணன் வந்துவிட்டால் ஆகாதா என்று அவள் மனம் துடியாய்த் துடித்தது. ஆவலுடன் அவன் வரவை எதிர் பார்த்திருந்தாள்.

இந்தச் சமாதானமும் தனக்கு இப்பொழுது இல்லையென்பது தந்தியினால் நிச்சயமாயிற்று. ராஜம்மாளின் மனோவேதனை விவரிக்க முடியாத எல்லையை எட்டிப் பிடித்தது; அயர்ந்து போய் உட்கார்ந்தாள்.

* * *

மாப்பிள்ளை கண்ணன் ஆக்ட்யுவரி பரீக்ஷையில் முதன்மையாகத் தேறியவன்; சென்ற மாதம் பம்பாயில் உள்ள ஒரு பிரபல வியாபாரத்தலத்தில் வேலைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டான்.

அலமுவைக் கலியாணம் செய்துகொண்டு ஐந்து வருஷங்கள் கடந்தபோதிலும், விடுமுறைகளில் மட்டுமே ஊருக்குவந்து மனைவியைச் சந்தித்துப் போவான். அவளும் இன்டர்மீடியட் வரையில் படித்தால், அதற்குள் தன் படிப்பும் முடியும்; வேலை கிடைத்தவுடன் இருவரும் ஒன்றுசேர்ந்து வாழ்க்கை ஆரம்பிக்கலாம் என்பது அவனுடைய எண்ணம்.

அதேபோல, இதுவரை எல்லாம் சரியாகவே நடந்தது. அலமுவும் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறினாள். அவளுக்கென்னவோ படிப்பில் அவ்வளவாக நாட்டமிருக்கவில்லை. ஆனாலும், கண்ணனுடைய திருப்தியை உத்தேசித்து அதை ஒருவாறு முடித்துக்கொண்டாள்.

கண்ணன் நிரம்ப அதிர்ஷ்டசாலிதான். படிப்பின் இறுதியில், உயர்ந்தவேலை கிடைத்துவிட்டது. பம்பாய் நகரத்தில் வீடு அமர்த்தி, வேண்டிய சகல சௌகர்யங்களையும் அமைத்துக்கொண்டான். அவனுக்கு வாய்த்திருந்த மனைவியோ ஒப்பற்ற அழகி. அதொன்றிலேயே அவன் கொண்டிருந்த பெருமை சொல்லச் சாத்தியமில்லை.

ஆனால் இந்த விசேஷ பாக்யமெல்லாம் நீடித்து இருக்கவேணுமே என்று மட்டும் சில வேளையில் கவலைப்படுவான். இதெல்லாம் சிநேகிதர்கள் கண்டார்களா?

12-ஆம் வயதில் கைப்பிடித்த மனைவியை இப்படி ஐந்து வருஷ காலம் பிறந்த வீட்டில் விட்டு வைத்திருந்ததைக் கேலி செய்தார்கள்.

"அதனால் என்னடா? இதற்குள் எங்கள் நேசம் எவ்விதமான ஐக்கியத்தை அடைந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா? கடித மூலமாக நாங்கள் ஒருவர் மற்றவரிடம் எவ்வளவு ஈடுபட்டிருக்கிறோம்! நேரில் சந்திக்கும் பொழுதோ, மனத்தின் மூலையிலுள்ள சின்னஞ்சிறு விஷயமெல்லாம், முகத்தைப் பார்த்த அளவில், கண்ணாடியில் காண்பது போல் விளங்கிவிடும். பிறகு, பேசிப் புரிய வைப்பதற்கு என்ன இருக்கும்? அதையும், அரை வார்த்தைகளில் பேசிப் புரிந்து கொள்வோம்; அருகில் அமர்ந்திருப்பதே ஆனந்தம் என்று எண்ணுவோம்—இதையெல்லாம் நீங்கள் எவ்விதம் அறிவீர்கள்? போங்கடா." என்றிம் மாதிரி கோபிப்பான்.

பிரிவினால் இருவரும் மிகமிக வருந்திய போதிலும், ஒரு கட்டுப்பாட்டில் அதையும் தாங்கிச் சகித்தனர். அலமு தன் மனத்தைத் திறந்து, கடிதத்தில் கொட்டிக் கண்ணீர்சொரிவாள். கண்ணன் உள்ளத்தையே கரைத்து, தன் காதலைக் கடிதங்களில் பொழிவான்.

* * *

எவ்விதமோ அக்கொடிய காலமும் முடிவடைந்தது; இனி ஒன்று சேருவோம் என்று எண்ணி மகிழும் சமயமும் வந்தது.

ஆனால் கடவுளுக்கே பொறுக்கவில்லை போலும். இல்லாவிட்டால் இம்மாதிரியான சோதனையைத் தந்து அந்த மாசற்ற இளம் உள்ளங்களை வருத்திப் புண்படுத்தியதை என்னவென்று சொல்வது?

இந்நாளில் எட்டிய ஒரு செய்தி கண்ணனைக் கவலைக் கடலில் முழுக அடித்தது. அவன் மனைவி அலமுவைப் பற்றியதுதான் அந்தச் செய்தி.

சென்ற ஒரு மாத காலமாய் அலமுவுக்குக் கண்களில் ஒருவிதச் சிகப்பு, வீக்கம், வலி, கூச்சம் முதலிய தொந்தரவுகள் ஏற்பட்டுத் துன்பமளித்தன—அவள் பட்ட கஷ்டம் விவரிக்க முடியாது—

மதுரையில் உள்ள பெரிய கண் வைத்தியரிடமும் காண்பித்துப் பார்த்தாகி விட்டது. ஒரு வித அனுகூலமும் கிட்டவில்லை.

அலமுவின் அழகிய முகமும், செந்தாமரையை ஒத்த விரிந்த கண்களும், கண்ணனின் மனத்தில் தோன்றி அவனை வாட்டின. கடவுளுக்குக் கண்ணேயில்லையோ? ஏனிப்படித் தன்னைச் சோதிக்கவேண்டும் என்று ஏங்கினான்.

மேலும், ஒருவித ஸகாயமுமின்றி அலமுவின் தாய் ராஜம்மாள், பொறுக்கவேண்டி வந்த கஷ்டங்களை நினைத்தும், கண்ணன் வருந்தினான்.

பறந்துபோய்த் தன் கண்மணியைக் கண்டு வர மனம் துடித்தது. எவ்வாறு முடியும்? படிப்பு முடிவடைந்து வேலை ஏற்கும் தருணம். வேலையென்றால் சாமானிய வேலையா?

கடவுளே, இன்பதுன்பங்கள், இரவு பகலைப்போல மாறி மாறி வருமென்றல்லவா சொல்லுவார்கள்; ஏக காலத்தில் இரண்டும் ஒன்றாக நேருவதும் உண்டோ?

அலமுவுக்குத் தினமும் ஒரு கடிதமெழுதினான். அவளும் அதனால் உயிர்வைத்திருந்தாள் என்று சொன்னால் மிகையாகாது.

கண்ணனின் மனத்துள், எப்படியும் ஆபரேஷன் நடக்கும் தினத்தில் சென்னையில்போய்க் குதித்துவிடுமோமென்கிற நம்பிக்கை திடமாக இருந்தது. அதற்கேற்றவாறு லீவும் கிடைத்துவிட்டது. மறுநாள் புறப்படவேண்டியது தான்!

ஆனால் அன்று நிகழ்ந்ததை நினைத்தால் துர்ப்பாக்கியத்தின் எல்லையைக் கண்ணன் கண்டுவிட்டான் என்றே சொல்லலாம். கம்பெனியில், மேல் வேலையில் இருந்த துரை திடீரென்று மார்படைப்பினால் இன்றைக்கா உயிர்துறக்க வேண்டும்?

அவரைக் கவனிக்கும் அமளியில், ஆபீஸ் மானேஜர் கண்ணனுடைய லீவு உத்தரவை மாற்றியதல்லாமல், ஆபீசுப் பொறுப்பு முழுவதையும் அவன் கையிலா ஒப்புவிக்கவேண்டும்?

தன் மனைவியின் விஷயமான கவலையைத் தெரிவித்துக் கேட்டும், ஒரு பிரயோஜனமுமில்லை; ஒருவாரம் கழித்துப் போகலாமென்கிற உத்தரவும் கிடைத்தால், கண்ணன் எவ்வாறு கிளம்புவது?

என்ன செய்கிறோமென்கிற நினைவேயில்லாமல், மேலே சொன்ன பிரகாரம் தன் மனைவிக்குத் தந்திகொடுத்தான்.

* * *

அன்றுபொழுதை ஆபீசில் எவ்விதம் கழித்தானென்பது அவனுக்கே தெரியாது; பகல் சாப்பாட்டுக்கும் வீட்டுக்கு வரவில்லை.

எவ்வளவு கடிதங்களுக்குப் பதில் எழுதுவது? எவ்வளவுபேரைச் சந்திப்பது? டெலிபோனில் வரும் எத்தனை கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்லுவது? இதற்கு முடிவே கிடையாதா?





உங்கள் கூந்தலைக் காப்பாற்ற

மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது ஒரு பாட்டில்

## காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

## ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

எங்கும் கிடைக்கும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள் :

ஆங்கிலோ - இந்தியன்
டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்—2

சிந்தித்து அவன் மூளையே கொதித்துப் போயிற்று. ஒருவாறாக வேலை முடிந்து, அவன் வீட்டுக்குத் திரும்பும் சமயம், இரவு மணி பத்து.

களைப்பினால் படுக்கையில் சாய்ந்தான். அன்று நிகழ்ந்ததும், தான் செய்யவேண்டி வந்த காரியங்களும், அப்பொழுது நினைத்தால் மனத்திற்குக் கசப்பாக இருந்தன.

இப்படி என்ன உத்தியோகம் பார்ப்பது? மனிதன் தன் சொந்த விஷயத்திற்காகச் சிந்திக்கவும் அதிகாரம் பெறாத ஒரு இயந்திரமா? அடிமையா? வேலையை ராஜினாமா செய்து விட்டு, இரவு 11 மணி பாசஞ்சர் ரயிலில் புறப்பட்டாலென்ன? பிற்பகலில் ஆபரேஷன் முடிந்து போனாலும் மாலையிலாவது அவளருகில் போய்ச்சேரலாமல்லவா? இதென்ன உத்தியோகம், என்ன வாழ்வு? எதற்காக உழைத்துப் பணம் தேடவேண்டும்? எல்லாம் மனிதனின் சமாதானத்திற்கும் சுதந்திரத்திற்கும் தானே? அலமு, தான் வராததின் காரணம் என்னவென்று நினைப்பாள், பாவம்? இப்படி எண்ணும்பொழுது மனம் கொதித்தது.

சற்று நேரம் இவ்விதம் சிந்தனை சென்றாலும் உடனே வேறு மாதிரி மாறிற்று.

சீச்சி, ஏனிப்படி ஒன்றுமில்லாததற்கெல்லாம் வருந்தவேண்டும்? இதெல்லாம் நேருவது உலகில் சகஜம் தானே.

கண்ணில் நோய் வந்தால் என்ன? சிகிச்சை செய்ததும் குணமாகி விடுகிறது. தான் அருகில் இல்லாததால், செய்யப்படும் சிகிச்சை பலன் அளிக்காமலா போய்விடும்? என்ன பைத்தியம் இது?

இப்பொழுது இருக்கும் மூளைக் குழப்பத்தில் வேலையை ராஜினாமா கொடுத்துவிட்டால், பிறகு அலமுவே நம்மைத் திட்ட மாட்டாளா?

இதற்குப்பதிலாக இன்னும் ஒரு வாரத்தில் மதராஸுக்குப் போனால் அலமுவின் கண்ணும் குணமடைந்திருக்கும்; மறு ரயிலில் அவளைப் பம்பாய்க்கு அழைத்து வந்து இங்குள்ள பெரிய பெரிய வைத்தியரிடம் காட்டி அனுகூலம் பெறலாமே? இதை எண்ணும்பொழுது அவனுக்குச் சற்றுச் சாந்தி ஏற்பட்டது.

இவ்வாறாக நம்பிக்கையும் அவநம்பிக்கையும் மாறி மாறித் தோன்றி, மனத்துள் போரிட்டன. கட்டிலுக்கு நேரே சுவரில் மாட்டியிருந்த படத்தில், அலமுவின் முகம் தன்னை நோக்கி மன்றாடுவதுபோல் தோன்றிற்று. கண்ணன் மனம் சொல்லொணா வேதனையில் ஆழ்ந்தது.

* * *

ஐந்து வருஷத்திற்கு முன்பு கண்ணன் அலமுவைத் திருமணத்தில் கைபிடித்த தினம்-அன்று எவ்வளவு சிறு பெண்ணாக இருந்தாள்! தங்கப் பதுமையே போல—நாணத்தால் தலை குனிந்து மெதுவாக நடந்து வந்தவள், தன்னருகில் வந்து கையைப்பற்றியதும், தலையைச் சாய்த்துக் கடைக்கண்ணால் எப்படித் தன்னை நோக்கினாள்! இந்தக்குட்டிக்குத்தான் என்ன துணிச்சல்; அந்த விஷமப்பார்வையில் தன் உள்ளத்தையல்லவா ஒரேயடியாக உருக்கினாள்!

அவளது சிறிய விரல்கள் தன் கைக்குள் பதிந்தபொழுது எவ்வளவு மிருதுவாய், பட்டுப்போல் இருந்தன. அந்தப் பற்றுதலில் தான் என்ன நம்பிக்கை? அந்த க்ஷணத்தில் கண்ணன் தன் இரத்தமெல்லாம் துடித்ததில், மௌனமாக அவள் சொரிந்த காதலை உணர்ந்தான். அவள் முகம்? என்றைக்காவது கடுகடுப்பை அதில் கண்டதுண்டா? என்ன கம்பீரம்!

நீண்ட பெரிய கண்கள்—அந்தப் பார்வைக்கு மறைந்தது ஏதாவது இருக்க முடியுமா? தன் அந்தரங்க ஆத்மாவையே துருவி எடுத்து, அதன் ரகசியத்தை வெட்ட வெளிக்குக் கொண்டு வரும் சக்தியல்லவோ, அதன் அமைதியில் திகழ்ந்தது?

வெட்கத்தினால் சிவக்கும் அவள் முகத்தை நினைத்தவாறு கண்ணை மூடிக்கொண்டான். என்ன அழகி!

கண்ணே, எனக்கு அலமு என்கிற பெயர் சற்றும் பிடிக்கவில்லை. வேறெதாவது அழகிய பெயரால் உன்னை அழைக்க ஆசையாக இருக்கிறது. நீ என்ன சொல்கிறாய்!

"ஐயோ. அம்மா எதிரில் வேறு பெயர் சொல்லி எப்படி அழைப்பது? எனக்கு வெட்கமாக இருக்கும்."

"சரி. நாம் தனித்திருக்கும் சமயத்தில் கூடவா அழைக்கக் கூடாது? என்ன பெயர், சொல்லு! பார்க்கலாம்."

அலமு பதில் சொல்லவில்லை.

"தங்கம் என்று உன்னைக் கூப்பிடட்டுமா? சொல்லு. ஆம் நீ தங்கக்கட்டிபோல்தான் மின்னுகிறாய்; அதுதான் பொருத்தம்; நீ தங்கம்மாதான்; தங்கம்!

"எனக்குப் பிடிக்கவில்லை!"

"பின்னே, என்னடியம்மா உனக்குப் பிடிக்கும்? அதையாவது சொல்லேன், பார்க்கலாம்."

மறுபடி மௌனம். தலையைக் குனிந்து கொண்டாள்,

"சொல்லு, அலமு; என்ன வெட்கம்?" முகத்தைத் தன் கையினால் நிமிர்த்தினான். அப்பா, குங்குமத்தைப்போல் சிவந்திருந்தது! எவ்வளவு நேரம் கெஞ்ச வேண்டி வந்தது?

பிறகு மெதுவாக, "கண்ணம்மா" என்றாள்.

"அம்மாடி, இதற்காகவா இவ்வளவு பிர மாதப் படுத்தினாய்? ஆமாம்...இந்தப் பெயரை எங்கே கண்டுபிடித்தாய்? உனக்கு அவ்வளவு பிடித்திருப்பது எதனால்?

மறுபடியும் மௌனம்—

"ஓ! எனக்குத் தெரிந்து விட்டதடி அம்மா, இப்பொழுது. உன் கண்கள் மிக்க அழகுள் ளவை யென்று நான் அடிக்கடி சொல்வதால், கண்ணம்மா என்னும் பெயர் உனக்குப் பொருத்தமானது, என்று சொல்கிறாயாக்கும். தெரிந்துகொண்டேனடி அம்மா உன் கள்ளத் தனம். நீ ரொம்ப பொல்லாதவள்தான்.

"பாயுமொளி நீ யெனக்குப்
பார்க்கும் விழி நானுனக்கு."

இந்தப்பிரகாரம் கண்ணம்மா பாட்டைப் பாட ஆரம்பித்தான் கண்ணன்.

அலமு தலை நிமிர்ந்து அவனைப் பார்த்துச் சிரித்தாள். "ஐயோ போருமே அசடு. அந்தக் காரணம் இல்லை" என்றாள்.

"அடாடா பின்னே என்ன? சொல்லிவிட்டுச் சிரியேன்"

"அதா...... வந்து......... வந்து...... நீங்கள்? கண்ணன்......... நான்?— உங்கள்............ கண்ணம்மா!" என்று சொல்லித் தலை குனிந் தாள்.

"ஆமாமடி, என் கண்ணம்மா நீ மூளைக்காரி தான்" அன்புடன் அவளைச் சேர்த்து அணைத் துக்கொண்டான் கண்ணன். அவள் உள்ளம் உருகிவிட்டது.

ஃ ஃ ஃ

இதெல்லாம் என்றைக்கோ, ஏதோ ஓர் உலகில் நடந்தமாதிரி இருந்தது. மனதிற்கு அப்பொழுதெல்லாம் என்ன நிர் விசாரமான வாழ்க்கை; ஆனந்தம் பொங்கிப் பொழிந்தது அல்லவா?

ஒரே மாதத்தில் மூடுபனியைப்போல் எவ் வளவு வேதனை வந்து புகுந்துகொண்டது! இதெல்லாம் அந்தப் பனியைப்போலவே நீங்கிப் பழைய துன்பமற்ற நாட்கள் மீண்டும் வருமோ? கடவுள் அதற்கு அருள்புரிவாரோ?

ஒருவேளை ஆபரேஷனில் பலன் கிட்டாமல் அலமுவுக்குப் பார்வைபோய்விட்டால்.........? இதை எண்ணிக் கதிகலங்கினான்.

திரும்பத்திரும்ப அந்தப்பாட்டு—கண்ணம்மா பாட்டு...... அந்த இரண்டாவது வரியின் நான்கு வார்த்தைகள்.........

"பார்க்கும் விழி நானுனக்கு" ஏன் இப்படி இதே எண்ணம் மனதில் தோன்றிக் குழப் பத்தை உண்டாக்கவேண்டும்?

"கடவுளே, இம்மாதிரி ஆபத்து நேராமல் என் கண்ணம்மாவைக் காப்பாற்றவேண்டும். அந்த அதிர்ச்சியை என் கண்மணி தாங்கமாட் டாள்; நான்தான் அவளைப் பார்த்து எப்படிச் சகிப்பேன்; உயிர்வாழ்வேன்?"

குழப்பதுடன் கண்ணன் சற்றுக் கண் அயர்ந் தான்.

ஃ ஃ ஃ

மறுநாட் காலையில் இயந்திரம்போலக் காரி யாலயத்திற்குச் சென்றான். இன்று எப்படியும் விடுமுறைபெற்றுச் சென்னைக்குப் புறப்படு வது என்கிற தீர்மானத்துடன் கண்ணன் வந் திருந்தான். மாலையும் வந்தது.

"ஸார், உங்களுக்கு உடம்பு என்ன? முகத் தைப் பார்க்கவே முடியவில்லையே. காப்பி வாங்கி வரட்டுமா?" என்று கேட்ட வண்ணம் வேலைக்காரன் ஒரு தந்தியை மேஜைமீது வைத் தான். ஆபீசுத் தந்தியென்று நினைத்தான் போலும், அவன்!

"ஆபரேஷன் நடந்தது. உடனே புறப்பட வும்." இந்த இரண்டே வார்த்தைகள்தான்! கண்ணனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு க்ஷணம் மனதில் சற்று நிம்மதிகூட ஏற்பட் டது. அப்பாடா, ஒரு வழியாகப் இந்த ஆப ரேஷன் முடிந்துவிட்டது.

ஆனால்.........எப்படி முடிந்தது? "வெற்றி கரமானது" என்பதைத் தந்தி தெரிவிக்க வில்லையே?

மேலும், தன்னை எதற்காக உடனே புறப் படச் சொல்லியிருக்கிறது?

அலமுவின் உயிருக்கு ஆபத்து ஏதாவது நேர்ந்திருக்குமோ?. சீச்சி, அம்மாதிரி இருந் தால், தந்தியில் அதைத் தெரிவிக்கலாமே; ஏன் ஒளிக்கவேண்டும்?

ஒருவேளை, பயந்தபடியே பார்வைதான் போய்விட்டதோ? ஐயோ, எப்படி அதைச் சகிப்பது? சிகிச்சை நடக்குமுன்பு அலமு என்னவெல்லாம் நினைத்திருப்பாள்; தன் கண வனைப்போல ஏமாற்றும் பேர்வழி இனி ஒரு வரும் இருக்கமுடியாதென்று நிச்சயித்திருப்பா ளல்லவா? பாவம்.

"கண்ணே......அலமு...... அலமு ......என்று வாய் முணுமுணுத்தது; குரல் தழுதழுத்தது.

பித்துக்கொண்டவன்போல் எழுந்து தொப்பியைத் தலையில் மாட்டிக்கொண்டான்; மானேஜர் அறைக்குச்சென்று அவர்முன் தந்தியை வீசி எறிந்தவன், அதை அவர் படித்து முடிப்பதற்குக் காத்திருக்கவில்லை. வெளியில் வந்து விரைவாக ரயில்வே ஷ்டேஷனை அடைந்தான். வண்டியில் ஏறி அமர்ந்த பிறகும், அவன் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக்கொண்டது.

''வேலையைப் பார்க்கவில்லை, வேலை! எக்கேயாவது கெட்டுப் பாழாகட்டும். மனதிற்குச் சமாதானம் கிட்டாத வரையில் வேலை இருந்தென்ன பயன்?'' என்று உள்ளம் சொல்லிற்று.

* * *

கண் வைத்யசாலைத் தனி அறை ஒன்றில் அலமு படுத்திருக்கிறாள்.

கண்கள் கட்டப்பட்டிருந்தபோதிலும், முகம் சற்றும் கடுமையாக இல்லை. பழைய எழிலும், புன் சிரிப்பும் தவழ்ந்தன.

தந்தத்தில் கடைந்தெடுத்த விக்ரஹம்தான்; சோகத்தில், அவள் அழகு பன்மடங்கு விருத்தியடைந்துவிட்டதோ? அமைதியாகப் படுத்திருந்தாள்.

அறைக்கு வெளித் தாழ்வாரத்தில் சுவரில் சாய்ந்தபடி ராஜம்மா உட்கார்ந்திருந்தாள். அவள் முகம், என்றைக்கோ சோபை யிழந்து, ஒளி மங்கியிருக்கும். ஆனால் இன்றோ, அதில் வர்ணிக்கமுடியாத துயரம் பிரதிபலித்தது.

இனி உலகில் உயிர் வாழ்வதுதான் எதற்கு? வாழ்க்கையே பயனற்றதாக அல்லவோ போய்விட்டது? நிர்ஜீவனாக உட்கார்ந்திருந்தாள், அலமுவின் தாய்.

ஒரு 'கார்' விரைவாகத் தாழ்வாரத்தின் சமீபம் வந்து நின்றது. கண்ணன் இறங்கித் தயக்கத்துடன் உள்ளே வந்தான். ராஜம்மா தன் உதட்டில் விரலை வைத்துச் சத்தம் செய்யாமலிருக்கும்படி சமிக்ஞை செய்தாள்.

அவனைக் கூர்ந்து நோக்கியதும் கண்ணனின் முகத்தில் எழுந்த கேள்வியைப் புரிந்துகொண்டாள் ராஜம்மாள். பதிலுக்கு இரண்டு கையையும் விரித்துப் போய்விட்டது என்பதை, ஜாடையில் தெரிவித்தாள்.

அதற்குமேல் அவளால் துக்கத்தை அடக்க முடியவில்லை. முகத்தில் துணியைப்போட்டுக்கொண்டு கோவென்று கதறிவிட்டாள். பாவம், எவ்வளவைத்தான் சகிக்கும் உள்ளம்!

படுக்கையிலிருந்து அலமுவின் மெல்லிய குரல்! ''அம்மா, டாக்டர் வந்திருக்கிறாரா? மருந்துபோடவேணுமா? அழைத்துவாயேன்.''

சற்றுநேரம் மௌனம்—படுக்கையில் அசைவற்றிருந்த அலமுவின் கைகள் துடித்தன.

''ஏம்மா இப்படி அழறே? என் பார்வை இனிமேல் வரப்போகிறதா?.........கிட்ட வா அம்மா, நான் எப்படித் தைரியமாக இருக்கேன் பாரு.''

மிருதுவான குரலில் எழுந்த இச்சொற்கள், கண்ணனின் இருதயத்தில் ஈட்டியைப்போல் பாய்ந்து, துளைத்தன. சகிக்கமுடியாத வேதனையால் புழுவைப்போல் துடித்தான்.

உணர்ச்சியின் வேகத்தில், எவ்விதம் துள்ளிப்போய்க் கட்டிலண்டை நின்றான்; அலமுவை அள்ளி எடுத்து அணைத்துக்கொள்ளத் துடித்த கைகளை எவ்வாறு அடக்கிக்கொண்டான் என்பது நமக்குத் தெரியவில்லை. கண்ணீர் ஆறாகப் பெருகிற்று.........

பிறகும் மிருதுவான அந்தக்குரல்!

''டாக்டர், அம்மா ரொம்ப வருத்தப்படுகிறாள்......நீங்கதான்.........''

''ஐயோ, கண்ணம்மா......''

ஆம்! கண்ணன்தான் இவ்விதம் கத்திவிட்டான். துக்கத்தில் அவன் நெஞ்சு பிளந்துவிடும்போலிருந்தது. ஒரு விநாடி அலமு ஒன்றும் செய்யவில்லை!

அம்மம்மா—அந்தப் பரிதாபத்தை என்னவென்று சொல்லுவது? கண்களைக் கட்டியிருக்கும் துணியையும் மீறி ஊடுருவிப்பார்க்கச் சக்திபெற்றதுபோல அவள் முகம் கண்ணன் பக்கம் மெதுவாய்த் திரும்பியது.

ஒரே க்ஷணம்தான் அந்தச் சந்தேஹம்; துள்ளி எழுந்து கைகளைக் கண்ணனிடம் நீட்டிச் சென்று கூச்சலிட்டாள்.

உடலெல்லாம் நடுக்கத்தில் பதறியது. கண்ணன் அவளைத் தன் உடலுடன் சேர்த்து அணைத்துக் குழந்தையைப்போலத் தழுவித் தோளில் சாய்த்துக்கொண்டான். இரு உடலும் துக்கத்தில் விம்மித் துடித்தன; உள்ளமே உருகி வெள்ளமாகப் பெருகிற்று.

''அழாதே அழாதே கண்ணம்மா!'' அலமுவின் விசிப்புத் திடீரென்று நின்றது; ஆனால் அவன் தோளிலிருந்து தன் தலையை நிமிர்த்தவில்லை.

கைவிரலினால் தடவி அவள் இதழ்களை மூடினான். விசிப்பிற்கு நடுநடுவே அலமுவின் உள்ளத்தினின்று எழுந்த வார்த்தைகளை அவனால் கேட்டுச் சகிக்கமுடியவில்லை.

''இனி நான் கண்ணம்மா இல்லை, அப்படி...... கூப்பிட..........வேண்டாம். நீங்க.......... சொன்னது.........தான்......சரி. கண்ணம்மா ..............பாட்டு! ''பார்க்கும் விழி நானுனக்கு'' எவ்வளவு...... சரியாப்......போச்சு.''

மறுபடி விம்மிவிம்மித் துடித்தாள். விரல்கள் அன்பாக அவள் முகத்தைத் தடவின.

கண்ணன் என்னசெய்தான்? மௌனமாக அலமுவைத் தன் மார்புடன் இறுகச் சேர்த்துத் தழுவிக்கொண்டான். அவள் துயரத்தின் போக்கைத் தடுக்கவில்லை.

பதில் சொல்வதற்கு என்ன இருந்தது?

# அறிந்தவர் இரங்குவர்

*மாரார்*

பத்து வயதுப் பையன் ஒருவன் தெருவில் வீடு வீடாய்ப் பிச்சை கேட்டுக்கொண்டு வந்தான். சமீபத்தில் பெரிய வைசூரி பூட்டி, அவன் முகமுழுதும் அம்மையின் வடு நிறைந்து பொளிந்திருந்தது. சிற்சில வடுக்கள் இன்னும் முற்றிலும் காயக்கூடவில்லை. பையனுக்கு நடக்கப் போதுமான சக்தியும் இல்லை. வீட்டுக்காரர் ஒருவர் அம்மை வடுக்களைக் கண்டதும் தம் குழந்தைகளுக்கு அம்மை அப்பையனிடமிருந்து தொத்திக்கொள்ளுமோ என்று அஞ்சினார். உடனே சினங்கொண்டு, "ஏண்டா அதற்குள்ளே பிச்சைக்குக் கிளம்பினாய்? போடா, வந்த வழியைப் பார்த்துக்கொண்டு. உன்னைப்போல் அம்மை வடு காயுமுன் பிச்சைக்கு வீடுவீடாய் நுழைகிறவர்கள் தான் வியாதியை எங்கும் பரவச் செய்கிறார்கள். இதைத் தடுக்கிறவர்கள் ஒருவரையும் காணோம். போலீஸ்காரர், முனிஸிபல் மேஸ்திரிகள் இப்பேர்ப்பட்ட நோயாளிகளை விரட்டியடிக்க வேண்டாமோ?" என்று வெகு கடுமையாய்க் கூச்சலிட்டார். பிச்சைக்காரப் பையன் மெலிந்த குரலில், "ஐயா, வீட்டில் என் தாய்க்கும் தம்பிக்கும் அம்மை வார்த்திருக்கிறது. ரேஷன் அரிசி வாங்கக் காசு இல்லை. எங்கேயாவது போய்ப் பிச்சைவாங்கிக் கஞ்சிகாய்ச்சிக் கொடுக்கலாம் என்று வந்தேன்" என்று சொல்லிக்கொண்டு மெதுவாக அவ்விடம் விட்டு நகர்ந்தான். அதைக் கேட்டவுடன் வீட்டுக்காரர் வெட்கம் அடைந்தார். "ஐயோ பாவம். அவன் கஷ்ட துக்கங்களை அறியாமல் கண்டபடி திட்டிவிட்டேனே." என்று எண்ணிக்கொண்டு, உள்ளேபோய் அரைப்படி அரிசி கொண்டுவந்து, பையனைத் திருப்பி யழைத்து, அவன் துணியில் அரிசியைக் கொட்டியனுப்பினார். முன்னாலே பிரயோகித்த கொடுமையான வசைமொழிகளுக்குக் காரணம் அறியாமையேயாகும்.

கீழ்ஜாதியார், கீழ்மக்கள் என்று சொல்லப்படும், செம்படவர் குப்பங்களிலும் சேரிகளிலும் நாம் போகும்படி நேர்ந்தபோது, அங்கே ஆண்மக்களும் பெண்மக்களும் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொண்டு, ஆபாஸமான வசைமொழிகளைச் சரமாரியாகப் பொழிந்தும், அடிதடி செய்துகொண்டும், கூக்குரலிடுவதைக் கண்டிருக்கிறோம். முதலில் இவர்களும் மனிதப் பிறப்புத்தானா? மிருகங்களைப்போல் சண்டைபோடுகிறார்களே. மிருகங்கள் கெட்ட வார்த்தைகள் கூறாமலாவது சண்டைபோடுகின்றன. அவைகளுக்கும் கீழ்ப்பட்டுக் காணப்படுகிறார்களே" என்று சொல்லும்படி தோன்றும். பிற்பாடு சற்று யோசித்துப் பார்த்தால் "இவர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் ஒன்றும் இல்லை. மேல் வகுப்பினர் என்று பெருமையடித்துக்கொள்ளும் நமக்குள்ளேயும் கோபம், தாபம், பொறாமை, அசூயை முதலிய தீயகுணங்கள் இருக்கின்றன. ஆனால் தலைமுறை, தலைமுறையாகப் படித்தும், படித்தவர்களுடன் கலந்து பழகியும் வந்திருப்பதால், கெட்ட உணர்ச்சிகள் உள்ளே கொதிக்கும்போது, அவைகளை ஒருவாறு அடக்கிக்கொண்டு எதிரிகளென்றும் பகைவர் என்றும் எவரை எண்ணுகிறோமோ, அவர்கள் நெஞ்சில் குண்டூசி குத்தினதுபோல் சுறுக்கென ஒரு கொடிய வார்த்தையை நாசூகாகப் பிரயோகிக்கிறோம். இனிமையான குரலில் கடுமையான உணர்ச்சியைத் தெரிவிக்கிறோம். எவ்வளவோ தலைமுறையாகப் படிப்பு இல்லாமலும் வறுமையினால் அடிபட்டு அரை வயிற்றுச் சோற்றுக்குப்படாத பாடெல்லாம் பட்டு உழைத்து, மனம் நொந்து ஜீவிக்கும் கீழ் மக்களோ, மனத்தில் கிளம்பிய கோபத்தை உள்ளது உள்ளது போல் உரத்துச் சத்தமிட்டுத் தடியடியடிப்பவர்போல் காண்பித்துவிடுகிறார்கள். வேறு வேற்றுமை ஒன்றும் இல்லை.

அதுபோலவே கீழ் வகுப்பினர் என்று கூறப்படும் பலர் குளங்களிலும் குட்டைகளிலும் எருமை, பன்றி முதலிய மிருகங்கள் குழப்பின நீரைக் குடங்களில் வீட்டுக்குக் குடிக்கக் கொண்டுபோவதைப் பார்க்கும்போது நம் மனத்தில் ஒருவிதமான வெறுப்புத் தோன்றலாம். அவர்கள் உடுத்துக்கொள்ளும். ஆடையின் அழுக்கும் துர்க்கந்தமும் அவ்வெறுப்புக்கு மற்றும் ஒரு காரணமாகும். "ஏன் இவர்கள் மேல் வகுப்பினரைப் பார்த்து, அவர்கள் போல ஆறுகளிலோ தெளிவான நீர் நிரம்பிய குளங்களிலோ ஸ்நானஞ்செய்து ஆடைகளை அழுக்கில்லாமல் துவைத்து உடுத்திக்கொள்ளக்கூடாது என்று நினைக்கலாம். நாம் உயர்ந்தவர் என்ற அகந்தையை மறந்து நிதானமாகச் சற்று ஆலோசித்துப் பார்த்தால் நம் வெறுப்பு இரக்கமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. ஏழைகள் வசிக்கும் சேரிகளிலும் குப்பங்களிலும் கிணறுகள் பெரும்பாலும் இருப்பதில்லை. சர்க்கார் சிற்சிலவிடங்களில் சில வருடங்களாகக் கிணறுகளையும் குழாய்களையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வசதிகள் இல்லாதவிடங்களில் குட்டை நீரையே குடிக்கும்படி நேருகிறது. மேலும் அழுக்கு நீரை அருந்துவதால் நோய்க்கு இடம் கொடுக்கிறோம் என்ற அறிவு படிப்பு இல்லாத இம்மக்களுக்குக் கிடையாது. வறுமையில் அடிபட்டுக்கிடப்பவர்களுக்கு வருடத்துக்கு ஒரு துண்டோ சேலையோ வாங்கிக்கொள்வதே பிரயாசம்.

அதை ஒவ்வொரு நாளும் துவைத்துக் கட்டிக் கொள்வதென்றால் நாலு மாதத்திற்கு ஒரு தரம் வேறு உடை வாங்கவேண்டிவரும். அதற்கு வேண்டிய பணத்திற்கு எங்கே போவார்கள்? இவைகளைக் கவனிக்குங்கால் குற்றம் யாருடையது என்ற கேள்வி வராமல் இராது.

சுமார் இருநூறு வருஷங்களுக்குமுன் இங்கிலாந்தில் ஏழையொருவன் ரொட்டிக்கிடங்கிலிருந்து ஒரு ரொட்டியைத் திருடினதற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டான் என்று சரித்திரம் கூறுகிறது. திருட்டு மகாபாதகங்களில் ஒன்று என்ற அபிப்பிராயம் நம் நாட்டிலும் பண்டுதொட்டு வழங்கிவருகிறது. தற்காலத்தில் ஸோவியட் ருஷியாவில் திருட்டை ஒரு பெரிய குற்றமாகவே மதிப்பதில்லை. அதற்குச் சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கும்] தண்டனையும் வெகு இலேசானது. இவ் வேற்றுமைக்குக் காரணம் என்ன? இங்கிலாந்தில் இருநூறு வருடங்களுக்கு முன் சட்டங்கள் பார்லிமெண்டில் வறுமை இன்னதென்று அறியாத மேல் வகுப்பினரால் மாத்திரம் நிச்சயிக்கப்பட்டன. பணக்காரர்கள் தங்களுக்குத் திருடர்களால் வரும் கஷ்டங்களை அறிந்தார்களே ஒழிய, மனிதர்கள் திருடும்படி ஏன் நேருகிறது என்று அறிந்து கொள்ள விரும்பவில்லை. ஸோவியட் ருஷியாவிலோ, இப்போது வறுமையிலடிபட்டு வருந்திய தொழிலாளிகளால் அரசியல் முறைகள் நடத்தப்பட்டு வருவதால், திருட்டுக்குக்காரணத்தை நன்கு விசாரிக்கலாயினர். திருடவருபவன் பிறரால் திருடன் என்று எண்ணப்பட்டால் வெட்கமில்லாமல் இருப்பதில்லை. இரவில் வீட்டுக்குள் கன்னக்கோல் வைத்து நுழையும்போது கண்டுகொண்டால், கட்டியடித்துச் சிறைச்சாலையில் தள்ளப்படுவோம் என்றும் அறிவான். அப்படியிருக்க, ஏன் திருடுகிறான் என்று ஸோவியட் ஸர்க்கார் ஆலோசனை செய்து, பிழைப்புக்கு ஸர்க்கார் வேறு வழி காட்டாமல் இருந்ததே முதற்காரணம் என்று அறிந்தார்கள். "வீட்டில் பெண்டாட்டி, குழந்தை குஞ்சுகள், பசியினாலும் நோயினாலும் வருந்துவதைச் சகிக்க முடியவில்லை. நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் அவரவர்க்குத் தக்க வேலையைக் கொடுத்து, அதற்காகக் குடும்பத்துக்குப் போதுமான உணவு, உடை, கல்வி, வைத்தியம் முதலிய செலவுகளைக் கணக்குப்போட்டுக் கூலி கொடுக்க வேண்டியது ஸர்க்காரின் முக்கிய கடமை. ஒரு சிலர் கோடீசுவரர்களாய், பட்டாடைகள், தங்கம், வைரம் இவைகளால் செய்யப்பட்ட ஆபரணங்கள், விசாலமான பங்களாக்கள், தோட்டங்கள், மோட்டார்கார் முதலிய சுக சாதனங்கள், எவ்வளவு வேண்டுமோ அதற்கு மிஞ்சி ஆயிரம் மடங்கு


மேதாஸ்

# மஸ்தானா மாத்திரைகள்

**சிறந்த டானிக்**

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை
இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

**பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு,
தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல்,
காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்**

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்
இன்றே ஆரம்பியுங்கள்

கிடைக்குமிடம்:—

**K. S. மேதா & கோ.,**
மருந்து வியாபாரிகள்,
**250, சைனா பஜார் (மாடி), சென்னை**

வாங்கியனுபவிக்கக் கூடிய ஐசுவரியம் படைத்திருக்கிறார்கள். பக்கத்திலேயே பலர் ஒரு வேளைச்சோற்றுக்கு வழியில்லாமல், கந்தையை உடுத்திக்கொண்டு குளிரில் வருந்தித் தெருவில் சாக்கடை யருகில் சமையல் செய்து வசிக்கிறார்கள். இவ்வித்தியாசங்கள் ஸமூகத்தில் இருக்கும் வரை திருட்டு நடந்தே தீரும். அதை ஒரு பெரிய குற்றமாக எண்ணிக் கடுந்தண்டனையிடுவது சர்க்காரின் அறியாமை'' என்ற அபிப்பிராயம் ருஷியாவில் பரவியிருப்பதால்தான் சட்டத்தை மாற்றிக்கொண்டார்கள்.

முற்காலத்தில் பாலஸ்தீன் என்னும் நாட்சல் வசித்து வந்த யூதர்களின் தர்மசாஸ்திரத்தில் ஒரு ஸ்திரீ அன்னிய புருஷனுடன் விபசாரம் செய்யும்போது கண்டுபிடிக்கப்பட்டால் அவளைக் கல்லால் அடித்துக் கொல்லக்கடவது என்ற ஒரு சட்டம் இருந்தது, இயேசு கிறிஸ்து பாலஸ்தீனில் பல இடங்களுக்குப் போய் ''அன்பே தருமம். அன்பே முக்கிய கடமை'' என்று உபதேசம் செய்துவந்தார். பிறருக்கு அன்புகாட்டுவதே கடவுளைவழிபடும் முறை என்றார். இவ்வுபதேசத்தை அந்நாட்டுச் சாஸ்திரிகள் ஒப்பவில்லை. ஒருநாள் அவர்கள் வியபிசாரம் செய்த ஒரு ஸ்திரீயை அவர்முன் நிறுத்தினார்கள். இயேசுநாதரைப் பார்த்து, "ஸ்வாமி இவள் குற்றஞ்செய்தவள்; நம் சாஸ்திரங்களில் இவள் குற்றத்திற்குக் கல்லெறிந்து கொல்வதைத் தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கிறதே, தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்கள். சாஸ்திரத்துக்கு விரோதமாக ஏதேனும் அவர் கூறினால் அந்தப் பழியை அவர்மேல் சுமத்தலாம் என்று அவர்கள் எண்ணம். சற்று நேரம் சாஸ்திரிகள் சொன்னது காதில் விழாததுபோல் இருந்தார் கிறிஸ்து. மறுபடியும் அவர்கள் வற்புறுத்திக்கேட்கவும், இயேசுநாதர், ''கல் எறிய வேண்டுமென்று சாஸ்திரம் சொல்லுலுகிறது என்பது உண்மைதான். உங்களுக்குள் பாவம் செய்யாதவர் யாராவது இருந்தால் அவரே முதல் கல்லை எறியட்டும்'' என்றார். உடனே சாஸ்திரிமார் ஒவ்வொருவராய் அவ்விடம் விட்டு நழுவ ஆரம்பித்தார்கள். சிறிது நேரத்தில் அந்த ஸ்திரீயைத்தவிர வேறொருவரும் அங்குகாணப்படவில்லை. இயேசுநாதர் அவளைப்பார்த்து, ''நீ போகலாம், அம்மா; இனி நீ இப்பேர்ப்பட்ட பாவம் செய்யாதே'' என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

நம் புராணங்களில் விசுவாமித்திர முனிவர் கதை வெகு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவர் ஒரு மகாராஜா. நாலுவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்து நான்கு கலைகள் எல்லாவற்றையும் கற்றறிந்தவர். தவத்தின் மகிமையால் எல்லோரையும் பிரமிக்கச்செய்தவர். காயத்திரி மந்திரத்தை வெளியிட்டவர். எனினும் மேனகை அவர் முன்னே வந்ததும் தவத்தையும் ஞானத்தையும் மறந்து, ''பாமரனைப் போல் நானும் ஒரு மனிதனே. எனக்குள்ளும் இயற்கையாயுள்ள காமம், குரோதம் முதலிய வைரிகள் இருக்கின்றனர். அவர்களை வெல்வது எனக்கும் அசாத்தியம்'' என்று சொல்பவர்போல் மேனகையின் வலையில் அகப்பட்டுக் கொண்டார்.

இவ்விரு கதைகளின் கருத்தை ஆலோசித்துப்பார்க்கும் திறமையுள்ளவர்கள், ஸமூகத்தில் ஆண் மக்களோ, பெண் மக்களோ, ஏதோ விதி வசத்தால் இயற்கைக்கு இடங்கொடுத்துத் தவறுதல் செய்துவிட்டால், அவர்களை உடனே எரிகிற சுண்ணாம்புக்காளவாயில் போடவேண்டும் என்று கத்தமாட்டார்கள்.

தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பவர் சிற்சில நாட்களில் ''ஒரு ஸ்திரீ குழந்தையைப் பெற்று, உயிரோடு இருக்கும் குழந்தையைத் தெருவில் கிடத்திவிட்டு மறைந்துவிட்டாள்'' என்ற செய்தியைப் படித்திருப்பார்கள். அகப்பட்டுக்கொண்டால் அவளுக்குக் கடுந்தண்டனை என்பது எல்லோரும் அறிவர். தாய்க்குக் குழந்தையிடம் உள்ள அன்புக்கு அளவு ஒன்று கூறமுடியுமோ? தன் உயிரையும் நீத்துத் தன் குழந்தையின் உயிரைக்காக்கச் சித்தமாயிருப்பாள். அப்படி யிருக்க இந்த ஸ்தரீ சிசுஹத்தி செய்யத் துணிந்ததேன்? முதலில் மனதில் தோன்றும் பதில் ''அவள் ஒரு மகா பாதகி, ராக்ஷஸி, ஈவிரக்கமற்ற கல் நெஞ்சத்தாள்'' என்பது. பிறகு விஷயத்தை விசாரித்துப் பார்த்தால், ''இவள் இளம்பெண்ணா யிருக்கும்போதே புருஷனை இழந்திருப்பாள். தன்னைவிடப் புத்தியிலும் படிப்பிலும் சரிதையிலும் பதினாயிரம் மடங்கு உயர்ந்தவரான விசுவாமித்திரமுனிவர்போலத் தவறி நடந்துவிட்டாள். அந்த வினையின்பயன் நேர்ந்துவிட்டது. விசுவாமித்திரரும் மேனகையும் குழந்தையைக் காட்டில் எறிந்துவிட்டுச்செல்லவில்லையா? இவள் குழந்தையைத் தெருவில் கிடத்திவிடாமல் தைரியமாய் வளர்த்துவருவேன் என்று நிச்சயித்து அப்படியே செய்தால் சமூகம் அதைச் சகிக்குமா? மானியான ஸ்திரீக்கு இந்த அவமானமும் வெட்கமும் பொறுக்கமுடியாததால் குரூரமான செயலைச் செய்தாகிலும் அவமானத்தை அகலச்செய்ய முயன்றாள்'' என்று விளங்கும்.

திருட்டு, கற்பழிவு, சிசுஹத்தி, கொலை முதலிய தீய வினைகளைத் தோஷமற்றவை என்று இங்கு சொல்லவரவில்லை. பாவம், தோஷம் என்பவை சமூகத்துக்கும் ஆத்மாவுக்கும் கேடு விளைவிக்கின்றன. அவைகளை விஷமென விலக்கவேண்டும் என்று யார்தான் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்? ஆனால் தவறிப் பிழை செய்தவர்களைக் காணுமிடத்து ''நாமும் மனித சுபாவமுள்ளவர்களே, நாமும் பாவங்களையும் குற்றங்களையும் தவறிச்செய்திருக்கிறோம். நம்முள்ளிருக்கும் பகைவரின் பலம் நம்மை வென்று விடுவது சகஜம்'' என்று நம்முள்ளத்தை நன்கு ஆராய்ந்து அதன் காரணமாக, ''குற்றஞ்செய்த பிறரைச் சுண்ணாம்புக்காளவாயில் போடவேண்டாம். செங்கற்காளவாயில் போட்டால் போதும்'' என்றுவது சொல்லி, இரக்கம் என்ற உத்தம குணத்தைக் காண்பிக்கவேண்டும் என்று விண்ணப்பம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.




வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்றோர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது 'பெரீஸ் பிஸ்கட்ஸ்

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுதும் வாங்குவது

# பெரீஸ்

## பிஸ்கட்ஸ்

PERRY & CO., USILAMPATTI. (Estd. 1917)

# மோதி

வேங்கடலக்ஷ்மி

நீலவானின் உச்சியில் சிவந்து தகித்த நெருப்புக்கோளமென மின்னிக்கொண்டிருந்தான் கதிரவன். கீழே கண்ணுக்கெட்டிய தூரம் பரவிக்கிடந்த வறண்ட பாலைவனத்தின் மணல், அவ்வொளிப்பிழம்பில், நெருப்புப்பொறிகளென ஜ்வாலை வீசியது. அம்மணற்காட்டில் எப்பக்கம் நோக்கினும் ஒரு துளி தண்ணீரோ, அன்றி, கண்ணுக்குக் குளிர்ச்சிதரும் பசுமை நிறமோ தென்படவில்லை. எங்கும் ஒரே மணல், குவியல் குவியலாகவும் திட்டுத் திட்டாகவும் காணப்பட்டது. இடையிடையே அக்கினி ஜ்வாலையென வீசிய நெருப்புக்காற்று அம்மணலை வாரி நாற்புறமும் சுழற்றியதானது, இரக்கமற்ற பேயொன்று களிமிகுந்து விளையாடிக் குதூகலிப்பதுபோன்றிருந்தது.

நல்ல நடுப்பகல்—பயங்கரமான அப்பாலைவனத்தில் குதிரைப்படையொன்று மேகமண்டலம் வரையிலும் புழுதியைக் கிளப்பிக்கொண்டு வந்துகொண்டிருந்தது. குதிரைகளின்மீது உட்கார்ந்திருந்த படைவீரர்களின் பட்டாக்கத்திகளும் கவசங்களும் அவ்வெயிலில் பளபளவென மின்னிக் கண் பறித்தன. துவண்டு சோர்ந்து கிடந்தார்கள் அவ்வீரர்கள். அவர்கள் குடி தண்ணீரையோ, ஆகாரத்தையோ, கண்ணால் கண்டு மூன்று தினங்களாகிவிட்டன. பஞ்சடைந்த அவர்களுடைய விழிகள் மகா பயங்கரமான அம்மணற்காட்டில் எங்காகிலும், வறண்டு கிடந்த நெஞ்சை நனைத்துக்கொள்ள ஒரு துளி தண்ணீர் கிடைக்குமாவெனத் தேடியலைந்தன. ஆனால் எங்கு நோக்கினும் பரந்து, விரிந்து கிடந்த மணலைத் தவிர வேறொன்றையும் காணவில்லை.

அலாவுதீன் கில்ஜியின் உத்தரவின்பேரில் அப்படைவீரர் ராஜபுதனப் பாலைவனத்தில் ஒரு சிறு நகரமான மங்கள்ப்பூரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். படைத்தலைவன் மகாவீரனும் அலாவுதீனின் வலது கைபோன்றவனுமான மாலிக்காபூர்.

திடீரென்று உரத்த குரலில்,"–நில்லுங்கள்!" என்று உத்தரவிட்டான் அவன்.

இடியோசைபோன்ற அக்குரலில் த்வனித்த கம்பீரமும் அதிகாரமும் அவ்வீரர்களை நடுங்கச்செய்தன.

ஒரே வினாடியில் குதிரைகள் யாவும் நிறுத்தப்பட்டன.

தன் கையைத் தூக்கி ஒரு புறமாக மறைத்துக்கொண்டு தூரத்தே தெரிந்த எதையோ ஆவலுடன் நோக்கினான் மாலிக்காபூர்.

வீரர்களும் தங்கள் பார்வையை அப்பக்கம் செலுத்தினர்.

அவர்கள் நோக்கிய திக்கில் சிறிய பச்சைத் திடலொன்றும்—மேலே ஆகாயத்தை நோக்கி மெல்லிய சுருளாகச் சென்றுகொண்டிருந்த புகைப்படலமும் காணப்பட்டன. அவர்கள் மனதில் ஒரு புதிய நம்பிக்கையும் உற்சாகமுமுண்டாயின. பஞ்சடைந்த அவர்கள் கண்களில் ஒளிதோன்றியது.

மீண்டும் குதிரைகள் வாயுவேகமாய்ச் செல்லலாயின. புழுதிப்படலம் ஆகாயத்தையளாவியது.

* * *

பாலைவனத்தில் சற்று நீர்வளமிருந்த பச்சைத் திடலில், உயர்ந்து வளர்ந்திருந்த பேரீச்ச மரங்களின் நிழலில் சிறு குடிசையொன்றில் வசித்துவந்தான் கிழவன் வீரசிங். மங்கள்ப்பூர் பட்டாளத்தில் நெடுநாள் வேலைசெய்து விலகியவன் அவன். அவனுடைய அழகியமகள் மோதி. அரசி நந்தினியின் அந்தரங்கத்தாதி. அவள் பகலெல்லாம் அரண்மனையிலிருந்துவிட்டு, விளக்கு வைக்கும் தறுவாயில் வீட்டுக்கு வருவாள்.

குடிசைக்குப் பின்னால் சின்னஞ்சிறு குளமொன்று. அதன் கரையில் அரண்மனையிலிருந்து இரண்டொரு மலர்ச்செடிகளைக் கொண்டுவந்து வைத்துப் பயிராக்கியிருந்தாள் மோதி. உலர்ந்து, வறண்டு, நீரின் அடையாளமேயில்லாதிருந்த அப் பாலைவனத்தில், அக்குளமும், பசுமை வாய்ந்த அந்நிலப் பரப்பும் ஒரு சிறு சுவர்க்கம்போன்றிருந்தன.

மோதிக்கு நன்றாகக் குதிரைச் சவாரிசெய்யத்தெரியும். அவளிடம் அரசி பரிசாகவளித்த ரஞ்சித் என்னும் உயர்தரப் புரவியொன்றிருந்தது.

அந்தி மயங்கும் வேளை. மோதி அப்பொழுதுதான் அரண்மனையிலிருந்து வந்தாள். குதிரையைக் குடிசை வாயிலில் கட்டிவிட்டு அதற்குப் புல்லும் தண்ணீரும் வைத்தாள்.

வீரஸிங்கு ஒரு கயிற்றுக் கட்டிலில் மீதுட்கார்ந்து சுருட்டுக் குடித்துக்கொண்டிருந்தான்.

மோதி இரவு வேண்டிய உணவைத் தயார் செய்வதற்காகக் குடிசைக்குள் நுழைந்தாள்.

"மோதி! மோதி! வீட்டில் குடிதண்ணீரே யில்லையம்மா! இருட்டுவதற்கு முன்னால் குளத்துக்குப்போய் ஜலமெடுத்து வந்துவிடு!" என்று வெளியிலிருந்தபடியே உரத்துக் கூவினான் வீரஸிங்கு.

மோதி சமையலறைக்குள் நுழைந்து ஒரு மண் குடத்தை யெடுத்துக்கொண்டு வெளியே வந்தவள் குடிசையைச் சுற்றிக்கொண்டு குளக் கரையை நோக்கிச்சென்றாள்.

மோதியின் உருவம் வெகு நேர்த்தியானது; பச்சைப் பசுங்கொடிபோன்ற தளதளப்பும் செழுமையும் பொருந்தியது; அன்றலர்ந்த புதுக்குமுதம் போன்ற குளிர்ச்சியும் அழகும் பொருந்திய அரவிந்த முகம்; அஞ்சனம் தீட்டிய பளபளத்த கருவிழிகளின் நோக்கில் ஒரு அரசிக்குரிய கம்பீரம் விளங்கியது. அவளுடைய ஒவ்வொர் அங்கத்திலும் இளமைக்குரிய லாவண்யமும் ஒய்யாரமும் பொலிந்தன.

வீரஸிங்கு, மங்கள்ப்பூர் சமஸ்தானத்தில் நெடுங்காலம் வேலைசெய்து, வயது காரணமாக விலகினவன். அனேக யுத்தங்களிலீடுபட்டுச் சரீர முழுதும் காய வடுக்கள் பெற்றிருந்தான். அவனுடைய வீரச் செயல்களைக்குறித்து அப்பொழுதுகூட யாவரும் சிறப்பாய்ப் பேசிக்கொண்டனர். சமஸ்தானத்திலிருந்து உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு தன் மகள் மோதியுடன் நிம்மதியாயிருந்துவந்தான்.

மோதி மிகச் சிறுவயதிலேயே தன் தாயைப் பறிகொடுத்துவிட்டாள். மனைவி இறந்துவிட்ட பின்பு வீரஸிங்கு ஊருக்குள் வசிக்கப் பிரியப்படாமல், தான் அதுகாறும் நடத்திவந்த படாடோபமான வாழ்க்கையைத் துறந்துவிட்டு, ஊருக்கு வெளியேயிருந்த சிறு மைதான வெளியில் ஒரு குடிசை யமைத்துக்கொண்டு தன்னுடைய கண்ணின் கருமணியான செல்வப் பெண்ணுடன் வசிக்கலானான்; மோதிக்குத் தாயாகவும் தந்தையாகவுமிருந்து அவளை வெகு அருமையாக வளர்த்து வந்தான். கட்டழகி மோதியின் உடலில் அவள் ரஜபுதனத்தின் அழியாப் பழம் பெருமை மிக்க வீரப் பெண்மணிகளின் இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. ஆண்மக்களைப்போன்ற அஞ்சா நெஞ்சமும் தைரியமும் படைத்தவள் அவள்.

வீரஸிங்கு தன் மகளைவிட்டு ஒரு கணமும் பிரிந்திருக்கமாட்டான். ஆகவே மோதி பகல் முழுதும் அரண்மனையிலேயே இருந்துவிடுவது அவனுக்கு வெகு சிரமமாயிருந்தது. ஆயின் மங்கள்ப்பூர் அரசியான நந்தினிதேவியின் உத்தரவை மீறமுடியாமல் மோதி அரண்மனையின் வேலைக்குச்செல்லச் சம்மதித்திருந்தான்.

மங்கள்ப்பூர் அரசன் பூப்ஸிங்கு பரம்பரையான ரஜபுத்ர வம்சத்திலுதித்தவன்; மகா


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷங்காலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவிதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

வீரன். அவனுடைய படைவீரர்களும் அவனைப்போலவே அஞ்சாநெஞ்சம் படைத்தவர்கள். பிரஜைகளும் அப்படியே. ரஜபுதனத்திலிருந்த பலசமஸ்தானங்களில் மங்கள்ப்பூர் சிறந்த செல்வாக்கும் செழிப்பும் பொருந்தியதாயிருந்தது. ஆகவே அலாவுதீன் கில்ஜிக்கு அதன்பேரில் ஒரு கண் விழுந்தது அதிசயமில்லை. கொஞ்சம் கொஞ்சமாக வட இந்தியாவிலுள்ள பல சிற்றூர்களையும் சமஸ்தானங்களையும் சூறையாடியும் முற்றுகையிட்டும் முகம்மதிய ஆளுகைக்குட்படுத்திக்கொண்டிருந்தான் அவன்.

2

குடத்துடன் ஜலமெடுக்கவந்த மோதி குளக்கரையையடைந்ததும் அதைக் கீழேயிறக்கி வைத்துவிட்டு வானத்தை நிமிர்ந்துபார்த்தாள். வானம் நிர்மலமாயிருந்தது. மாலை வெயில் பேரீச்சமரங்களின் உயர்ந்த கிளைகளில் பட்டு அவற்றைப் பளபளப்பாகச் செய்தது. மேற்றிசையின் அடிவானத்தில் மெல்ல மங்கி மறைந்துகொண்டிருந்தது பரிதியின் தீக்கோளம்.

பாலிகையின் திருஷ்டி அவள் பிரியமாய் வளர்த்து வந்த மல்லிகைச்செடியின்மேல் விழுந்தது. அதில் கொத்துக்கொத்தாய் மலர்ந்து பரிமளித்த புஷ்பங்கள் அவள் கவனத்தைக் கவர்ந்தன. கைக்கெட்டிய மலர்க்கொத்தொன்றைப் பறித்து முகர்ந்தபடியே ஏதோ சிந்தனையிலாழ்ந்தாள். அன்று பகலிலிருந்து அவளுடைய மனம் ஒரு வகையான கலவரமுற்றிருந்தது. காரணம்?

அரசன் பூப்ஸிங்கு சுமார் ஒரு மாத காலமாகக் காயலுற்றுப் படுத்திருந்தான். அரசி நந்தினிதேவி ஆறுமாத கர்ப்பிணி. இந்நிலையில் அலாவுதீனின் பெரும்படைகள் மாலிக்காபூரின் தலைமையில் மங்கள்ப்பூரை நோக்கி வந்துகொண்டிருப்பதாக வதந்தியொன்று அன்று காலையிலிருந்து அரண்மனையில் உலாவலாயிற்று.

அரசனின் தேகநிலை மிகுந்த கவலைக்கிடமாயிருக்கும்பொழுது இதுவும் சேரவே, அரண்மனையிலுள்ளோர் யாவரும் பெருங்கிலியும் கலவரமுமடைந்தனர்.

முகம்மதியப் படைகள் நகரை முற்றுகையிடுமென எதிர்பார்த்து அதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் செய்யும்படி உத்தரவிட்டாள் அரசி நந்தினி. மோதிக்கும் எல்லாவிதமான அறிக்கைகளும் கொடுக்கப்பட்டன. அரசியின் அந்தரங்கங்களெல்லாம் அவளுக்குத்தெரியும். அரசன் நோயுற்றுக் கிடந்தமையால் மங்கள்ப்பூரின் சேனையை அரசிதான் தலைமை வகித்துப் போர் முனைக்குக் கொண்டுசெல்லும்படியிருக்குமென்று அவள் எதிர்பார்த்தாள். கர்ப்பிணியாயிருக்கும் தன் தலைவியை இவ்வாபத்திலிருந்து எவ்வாறு தப்புவிப்பதென்று யோசிப்பதில் அவள் மனம் தீவிரமாக ஈடுபட்டிருந்தது.

*   *   *

கையிலிருந்த புஷ்பக்கொத்துடன் சற்று நேரம் வெறுவெளியைப் பார்த்தபடியே ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய அழகிய நெற்றியில் கவலையின் சின்னமான கீற்றுக்கள் விழுந்திருந்தன. கன்னங்கருவிழிகளின் கம்பீரத்தில் சோகத்தின் தேக்கமும் காணப்பட்டது.

நெடுநேரமாகவே, குடத்தையெடுத்து ஜலம் நிரப்பினாள். அந்திமயங்கி இருள் சூழ்வதைக் கண்டு துரிதமாக வீட்டை நோக்கி வந்தாள்.

மோதி, குடிசை வாயிலையடைந்தபொழுது. வீரஸிங்கு கட்டிலை விட்டெழுந்து, எதிரே கண்ணுக்கெட்டிய தூரம் விரிந்து கிடந்த பாலைவெளியில், எதையோ கூர்ந்து நோக்கியபடி நிற்பதைக்கண்டாள். அவன் குடித்துக்கொண்டிருந்த சுருட்டைக் கீழே எறிந்துவிட்டிருந்தான்.

பாலிகைக்கு மனதில் பெருங் கலவரமுண்டாயது. சட்டென்று குடத்தை இறக்கி அங்கேயே வைத்துவிட்டு அவனருகிற் சென்றாள்.

வீரஸிங்கு மெல்லத் திரும்பினான்.

"குழந்தாய்!—அதோ பார்த்தாயா?"

அவன் சுட்டிக்காட்டிய திக்கில் தன்விழிகளைத் திருப்பிய பாவை ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றாள். ஆகாயத்தை மறைத்த புழுதிப்படலம் பின்னால் என்ன வருகிறதென்பதை அறிவித்தது. வீரஸிங்கு அவளைக் கூர்ந்து நோக்கினான்.

"மோதி!—முகம்மதியப்படைகள் வருகின்றனவென்று நிச்சயமாய்த் தெரிகிறது!" என்றான். பாலிகையின் விழிகள் அத்திக்கை மீண்டும் நோக்கின.

ஒரு கணம் அவன் காதில் என்னவோ சொன்னாள்.

வீரஸிங்கின் கண்கள் மின்னின.

தன் செல்வ மகளை அடக்கொணா ஆவலுடனும் பெருமையுடனும் நோக்கினான்.

மோதி பரபரவென்று தன்னுடைய குதிரை இருக்குமிடத்துக்கு வந்து அதை அவிழ்த்து நடத்திக்கொண்டுபோய் வீட்டுக்குப் பின்புறம் கட்டினாள். பின்பு அதனுடைய சேணம்





முதலியவைகளை எடுத்து மாட்டினாள். கவிந்து வரும் இருளில், அவள் வீட்டின் முன்புறம் வந்தபொழுது வீரஸிங்கு கயிற்றுக் கட்டிலின் மேலுட்கார்ந்து நிச்சிந்தையாய்ச் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்தான்.

மோதியைக் கண்டதும் சமீபித்து வந்து கொண்டிருந்த புழுதிப்படலத்தைச் சுட்டிக் காண்பித்தான். பாலிகை மௌனமாய்த் தலையசைத்துவிட்டு உள்ளே சென்றாள். சற்று நேரத்துக்கெல்லாம் தலைவாரி முடித்து வேறு உடையணிந்துகொண்டாள். பிறகு தீபமேற்றிவிட்டு அடுப்பண்டை சென்று சமையல் செய்ய ஆரம்பித்தாள்.

டக் டக்கென்று குதிரைக் குளம்புகளின் ஓசை சமீபித்தது.

ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் மாலிக்காபூரின் படைகள் வீரஸிங்கின் குடிசையைச் சமீபித்துவிட்டன.

ஜலத்தைக்கண்ட அவ்வீரர்களின் குதூகலம் கட்டிலடங்காமல் போயிற்று. அள்ளியள்ளிக் குடித்துத் தங்கள் தாகத்தைத் தணித்துக் கொண்டார்கள்.

மோதி அருமையாக வைத்து வளர்த்து வந்திருந்த புஷ்பச் செடிகளெல்லாம் குதிரைகளின் குளம்புகளில் மிதிபட்டு நாசமாயின. படைவீரர்களின் சிரிப்பும் கும்மாளமும் குடிசைக்குள் வேலையாயிருந்த மோதியின் செவிகளில் விழுந்தன. பொங்கியெழுந்த தனது ஆத்திரத்தைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள். ஆனால் அவளுடைய மூளைமட்டும் வெகு தீவிரமான யோசனையிலீடுபட்டிருந்தது.

மீண்டும் சிறிதுநேரம் சென்றது. நல்ல கருக்கிருள் சூழ்ந்துவிட்டது. குடிசைக்கு வெளியே வீரஸிங்கு யாருடனோ பேசிக்கொண்டிருந்தான். பாலிகை உள்ளிருந்தபடியே தன் தந்தையிடம் பேசுவது யாரெனக்கவனித்தாள்.

உயர்ந்து ஆஜானுபாகுவான வீரனொருவன் நெடுகக் கவசமணிந்தவனாய் நின்றிருந்தான். அவன் கேட்ட கேள்விகளுக்கு வீரஸிங்கு அலட்சியமாய்ப் பதில் கூறிக்கொண்டிருந்தான்.

"மோதி! மோதி!" என்றழைத்தான் வீரஸிங்கு.

பாலிகை துரிதமாய் வெளியே வந்தாள்.

மாலிக்காபூர் அவளை நோக்கினான். மலர்ந்த அரவிந்தம்போன்ற அவள் கட்டழகு அவனை வியப்புறச்செய்தது. வறண்டு உலர்ந்து ஈரப்பசையற்ற அப்பாலையின் நடுவே இருந்த அவ்வழகிய பொற்கொடியின் லாவண்யம் அவனை அதிசயக்கச் செய்தது. விரிந்த கண்களுடன் அவளையே நோக்கிக்கொண்டு நின்றான்.

தன் மகளை நோக்கி,"—மோதி!...... இவர்களுக்கெல்லாம் தாகசாந்திக்கு ஏதாவது கொடுக்க முடியுமா?......பாவம்;........கடும் வெயிலில் நெடுந்தூரம் பிரயாணம் செய்து அலுத்திருக்கிறார்கள்,"—என்றான் வீரலிங்கு.

இவ்வார்த்தைகளைக்கேட்ட பாவை தனதழகிய சிரத்தைத் திருப்பி ஒரு அரசிக்குரிய கம்பீரத்துடன் மாலிக்காபூரை நோக்கினாள்.

அக்கருவிழிகளின் நோக்கில் சிக்குண்டு குழப்பமடைந்த வீரன் தரையை நோக்கினான்.

வீரலிங்கு உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

அவனை நோக்கித் தலையசைத்த மோதி வீட்டுக்குள் சென்றாள். சற்றுநேரத்துக்கெல்லாம் அவள் கையாலேயே தயார்செய்யப்பட்ட மணமிகுந்த ஷர்பத் மாலிக்காபூருக்கும் அவனுடைய வீரர்களுக்கும் கொடுக்கப்பட்டது. யாவரும் வேண்டியமட்டும் குடித்தார்கள்.

மின்னல் தோன்றி மறைவதுபோல், மோதி அவ்வீரர்களுக்கு நடுவே போவதும் வருவதுமாயிருந்தாள்.

அர்த்தராத்திரி வரையில் பாவிகை அவர்களுக்கு ஷர்பத் கொடுத்துக்கொண்டேயிருந்தாள். அவர்களுடைய தலைகள் மெல்ல மெல்ல உட்கார்ந்த இடத்திலேயே சாய்வதைக்கண்டதும் அவளுக்குச் சிரிப்புப் பொங்கி வந்தது.

வீரலிங்குக்குப் பக்கத்திலுட்கார்ந்து சூநட்டுப்பிடித்துக்கொண்டிருந்தான் மாலிக்காபூர். ஆனால் அவனுடைய கண்கள் மட்டும் மோதியின் அழகிய உருவையே நோக்கிக்கொண்டிருந்தன—சற்று நேரத்துக்கெல்லாம் அவனுடைய தலையும் சாய ஆரம்பித்தது. தன்னையும் மீறிக்கொண்டு தூக்கம் வருவதை உணர்ந்தான்.

— 3 —

இரவு நடுநிசிக்கு மேலாய்விட்டது. நல்ல கருக்கிருள் சூழ்ந்திருந்தது. நீலவானில் கண்ணைப்பறிக்கும் வைரப்பொட்டுக்களென நட்சத்திரங்கள் மின்வெட்டின. பேரீச்ச மரங்களின் கிளைகளை அசைத்துச் சிறு சப்தமுண்டாக்கியது காற்று. தாரகைகளின் சிறு வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சம் காணப்படவில்லை. மகா பயங்கரமான கருக்கிருட்டு எங்கும் சூழ்ந்திருந்தது.

இவ்வச்சமுண்டாக்கும் அவ்வேளையில் பாலைவனத்தில் வாயுவேகமாய்ச் சென்றுகொண்டிருந்தது ரஞ்சித், மோதியின் உன்னதப்புரவி.

அதன்மீது உட்கார்ந்திருந்த பாவை நெடுகக் கவசமணிந்து மங்கள்ப்பூர் செல்லும் வழியில் அஞ்சா நெஞ்சுடன் குதிரையைச் செலுத்திக் கொண்டிருந்தாள்,

அவளுடைய நெஞ்சிலிருந்த துணிகரமான யோசனை, மாலிக்காபூரும் அவனுடைய வீரர்களும் ஷர்பத்தின் மயக்கம் தெளிந்து மங்கள்ப்பூர் வந்தடைவதற்குள் தான் அங்குச்சென்று கோட்டைக் கதவுகளை மூடச் செய்துவிட்டு, படைகளையும் யுத்தத்துக்குத் தயாராக்கிவிடவேண்டும்; பிறகு நோயாளியான அரசனையும் கர்ப்பிணியாயிருக்கும் அரசியையும் நகரைவிட்டு இரகசியமாய் வெளியேற்றிவிடவேண்டுமென்பதே. இதெல்லாம் எவ்வாறு நிறைவேறுமென்பதைக் குறித்து அவள் யோசிக்கவேயில்லை. தான் வழிபட்டுவரும் அன்னை துர்க்கையின்பேரில் பாரத்தைப்போட்டவளாய்த் துரிதமாய்ச் சென்றுகொண்டிருந்தாள். அவள் மனதில் அளவற்ற துணிகரம் நிரம்பியிருந்தது.

*　　*　　*

உதயமாவதற்குச் சற்று நேரத்துக்கு முன்னே அரண்மனையையடைந்தாள். குதிரையின் வாயில் நுரைதள்ளிக்கொண்டிருந்தது. வாயிலில் பாராக்கொடுத்துக்கொண்டிருந்த வீரனிடம் குதிரையையொப்புவித்துத் துரிதமாய் உள்ளே நுழைந்தாள். அவள் அந்தப்புரத்தையடைவதற்குள் விஷயம் அரண்மனை முழுதும் பரவிவிட்டது.

மோதி, அரசியின் சயன க்ருகத்துக்குள் நுழைந்தாள். பூப்லிங்கு கண்களையிறுக மூடிப் படுக்கையிற்கிடந்தான். அவன் பக்கத்தில் கவலையுடன் உட்கார்ந்திருந்தாள் அரசி. தூக்கமில்லாமையினாலும் கவலையினாலும் அவள் முகமும் உடலும் சோர்ந்து போயிருந்தாள்.

"தேவி!—" என்றழைத்தாள் மோதி.

திடுக்கிட்டெழுந்த அரசி துரிதமாய் அவளருகே வந்தாள்.

அரசனை எழுப்பவேண்டாமென்னும் எண்ணத்துடன் பாவிகை அவளை அடுத்த விடுதிக்கு அழைத்துச்சென்றாள்.

சற்றுநேரத்துக்குள் அரசிக்கு எல்லா விஷயங்களையும் தெரிவித்தாள் மோதி.

மாலிக்காபூரும் அவன் படையினரும் மயக்கம்தரும் ஷர்பத்தை அருந்திவிட்டுத் தன்னுடைய குடிசையில் உறங்கிவிட்டதைக் கூறும்பொழுது அவளுடைய முகத்தில் சிரிப்புத் தோன்றியது.

அரசியும் புன்னகைகொண்டாள்.

மோதியை அன்புடன் நோக்கி "மோதி!...... இனிமேல் காலதாமதம் செய்யக்கூடாது!...... வா!...... போவோம்" என்றாள்.

இருவரும் அரசன் படுத்திருந்த விடுதிக்குள் நுழைந்தார்கள்.

*　　*　　*

அன்று விடியற்காலம் இருட்டுப் பிரியும் சமயம். அரண்மனையின் பின் வாசலிலிருந்து ஒரு சிவிகை புறப்பட்டுச்சென்றது. உள்ளிருந்தவர் அரசியும் நோயாளியான அரசனும்.

சிவிகையைச்சுற்றி ஆயுதபாணிகளான முப்பது ரஜபுத்ரர்களும் சென்றார்கள். அரசி சிவிகையிலேறுமுன்பு மோதியைக் கண்ணீருடன் கட்டியணைத்து விடைபெற்றுக்கொண்டாள்.

"தேவி!......... வருந்தவேண்டாம். நல்ல காலம் பிறக்கும்பொழுது மீண்டும் சந்திப்போம். என் தந்தை தங்களை வழியில் சந்திப்பார். அவர் தங்களுக்காக வேண்டிய வசதிகளெல்லாம் செய்திருக்கிறார். அவருடன் அவர் போகுமிடத்துக்குச் செல்லுங்கள்" என்றாள் அவ்வீரப்பெண்.

சிவிகை சந்தடியில்லாமல் புறப்பட்டுச் சென்றது. அதன் திரைகளை விலக்கி மோதியின் உருவத்தைக் கண்ணீர் நிறைந்த விழிகளுடன் கண்ணுக்கு மறையுமட்டும் பார்த்துக்கொண்டே சென்றாள் அரசி நந்தினி.

அருணோதயமாய்விட்டது. கோட்டைக்கு வெளியே ஹோவென்ற பேரிரைச்சலும் முகம்மதியப் படையினரின் ஆரவாரமும் கேட்டன.

மங்கள்ப்பூரின் ரஜபுத்ரவீரர்கள் நகரையும் கோட்டையையும் காப்பாற்றுவதற்குச் சித்தமாகக் கவசமணிந்து அணிவகுத்துத் தயாராக நின்றனர். அவர்களில் ஒவ்வொருவனும் தன் அரசனுக்காகவும் தேசத்துக்காகவும் போர் முனையில் உயிரிழக்கச் சித்தமாக உற்சாகத்துடனிருந்தான்.

வீரப்பெண்ணான மோதி தன்னுடைய குதிரையின் மீதேறி அவர்களைப் பலவாறு உற்சாகப்படுத்தியபடி இருந்தாள். அரண்மனைப் பெண்களில் பலரும் அவளுடன் கவசம் பூண்டு போர்முனைக்குச்செல்ல ஆயத்தமாயிருந்தனர். பகல்போய் மாலை வரையில் இவ்வாறு சென்றது.

முகம்மதியர்கள் கோட்டைக் கதவுகளைத் தகர்க்க ஆரம்பித்துவிட்டனர். இரவு ஆவதற்குள் கோட்டை அவர்கள் வசமாய்விடுமென்று





Madras Stockists:- M/s. RAJAN DRUG STORES
155, Nyniappa Naick Street, MADRAS.

யாவருக்கும் தெரிந்துவிட்டது. எங்கும் ஹோ வென்ற பேரிரைச்சல்—ரஜபுத்திரர்கள் வெகு துணிகரமாய் எதிர்த்து நின்றனர்.

* * *

மறுதினம் விடியற்காலம். கோட்டையின் கதவுகள் தகர்த்தெறியப்பட்டன. முகம்மதியர்கள் மாலிக்காபூரின் தலைமையில் கட்டுக்கடங்காக் குதூகலத்துடன் நகருக்குள் நுழைந்தனர். ஆனல் அவர்களுக்குக் கிடைத்தது பிணக்குவியல் நிறையப்பட்டிருந்த மங்கள்ப்பூரே. ஒரு ரஜபுத்திரனுகிலும் உயிருடன் இல்லை. எல்லாரும் போர்முனையில் இறந்து பட்டார்கள். ஸ்திரிகள் யாவரும் நெருப்பு மூட்டித் திக்குளித்துவிட்டார்கள்.

மோதி? "——அவளெங்கே?"

மாலிக்காபூர் அப்பிணக்காட்டில் அவளுடைலத் தேடியலைந்தான்.

ஆனல் அவளோ?——

தன்னுடைய வீட்டுக்குப் பின்னேயிருந்த குளக்கரையில் பசும்புற்றரையின்மேல் குப்புறப்படுத்து நெஞ்சுவிரியும் துயரத்துடன் அழுதுகொண்டிருந்தாள்.——

4

அடுத்த பௌர்ணமிதினம். மோதிக்குப்பிரியமான நவமல்லிகைச்செடிபூத்துச் சொரிந்து கிடந்தது. முழுமதியின் தனிக்கிரணங்களில் மணற்காடான பாலை வெளிகூட அழகும் பொலிவும் பெற்றுவிளங்கியது. பேரீச்சமரங்களின் உயர்ந்த பசுமையான கிளைகளினூடே வெள்ளிய நிலவொளி ரேகைகள் படிந்து பளபளவென மின்னின. மெல்லிய காற்று, குளத்தின்மீது சிறு அலைகளையெழுப்பியது.

அரும்புவெடித்து மணம் கமழ்ந்த மல்லிகைச் செடியருகில் குப்புறப்படுத்துக்கொண்டிருந்தாள் பொற்கொடி மோதி. அவளுடைய உடலும் மனமும் சோர்ந்துகிடந்தன. அரசியையும் அரசனையும் நகரைவிட்டு வெளியேற்றியவுடன் தன் கடமைதீர்ந்துவிட்டது என்றெண்ணினள்.

இப்பொழுது தன்னுடைய ஹிருதயத்தை அழுத்திய துயரத்தின் பாரத்தைத் தன்னுடைய கண்ணீர் வெள்ளத்தினல் தீர்த்துக்கொள்ளமுயன்ருள்.——

உயர்ந்து, ஆஜானுபாகுவாய் வீரஒளி வீசிய கண்களுடன் தன்னை நோக்கிய மாலிக்காபூரின் நேர்த்தியான கவசமணிந்த உருவம் அவள் அகக்கண்ணெதிரே நின்றது. விம்மித் தணிந்தது அவள் நெஞ்சம்.

"சீ!... அவன் ஒரு முகம்மதியன்! நான் ஒரு ரஜபுத்ர ஸ்திரீயல்லவா!..............இதென்ன பேதைமை?" என்று தன் மனதைக் கண்டித்துக்கொண்டாள்.

நெடுநேரம் கழித்து வறண்ட கண்களுடன் வானத்தை நோக்கினள். சந்திரன் உச்சி வானத்தை அடைந்துவிட்டான்.

வெம்பிவாடிய அவள் மனதில் பலபல சிந்தனைகள்.

* * *

விடியற் காலமாய்விட்டது. இருள்பிரியும் தருணம். டக்டக்கென்று குதிரைக்குளம்புகளின் ஓசை பாலைவெளியின் நிசப்தத்தைக் கலைத்தது.

பேரீச்ச மரங்களருகில் வாயில் தள்ளிய நுரையுடன் வாயுவேகமாய் வந்து நின்றது உயர்தரப்புரவியொன்று. அதன்மேலிருந்து கீழே குதித்தான் வீரனெருவன். உதயகாலத்தின் மங்கிய வெளிச்சத்தில் அவனுடைய கண்கள் எதையோ ஆவலுடன் தேடியலைந்தன.

"மோதி!......மோதி"......

ஒரே பாய்ச்சலில் அவள் பக்கத்தையடைந்தான்.

சுற்றிலும் தோய்ந்து கிடந்த குருதிவெள்ளத்தில் நினைவற்றுக் கிடந்தாள் பாலிகை.

"மோதி!".........அவன் குரல் அங்குப் பயங்கரமாய் எதிரொலி செய்தது.

அவள் விழிகள் திறந்தன. அவற்றில் ஓர் ஒளி.

"மாலிக்!......என்னை மன்னித்துவிடு......... உன்னை வஞ்சித்துவிட்டேன்!"

வாயில் தள்ளிய நுரையுடன் அவன் பக்கத்தில் நின்ற ரஞ்சித் அவளுடைய கண்களில் பட்டது. சொல்லமுடியாத வேதனையினல் அவள் உடல் நடுங்கியது. தன் கைகளை நீட்டினள்.

"என் கடமையைச் செய்தேன்,......ஆனல் உன்னை ஏமாற்றிவிட்டேன்!"......ஆவலுடன் அவள் கரத்தைப் பற்றிக்கொண்டான் மாலிக்காபூர்.

அவளைத் தூக்கித் தன் மார்பின் மீது சார்த்திக்கொண்டான். அவன் கரங்கள் அவளையணைத்தன. கண்ணீர் நிறைந்த அவன் விழிகள் அவள் முகத்தை நோக்கின.

"மோதி!"...........

"நான் போகிறேன்,......என்னை மன்னி"...

நீர் வற்றிய கண்களுடன் சற்று நேரத்துக்கெல்லாம் குதிரை மீதேறிக் கொண்டான். மோதியின் உயிரற்ற தேகம் அவன் கரங்களில் இருந்தது.

எழும்பிவரும் உதயத்தின் ஒளியில், ரஞ்சித், தான் சுமந்து சென்ற வீரனையும் உயிரற்ற வீரப்பெண்ணின் உடலையும் கொண்டு அப்பாலைவனத்தில் மறைந்தது.

# ஐரோப்பாவில் பதிப் பஞ்சம்

*ஜயலக்ஷ்மி நரஸிம்மன்*

இப்பஞ்சமானது இந்தியப்பெண்மணிகளை அதிகம் பாதிக்காது. இருந்தபோதிலும் அதன் எதிரொலி இந்தியாவிலும் கேட்கும். ஆதலால் அதைப்பற்றித் தெரிந்து கொள்ளுவது நலம். இந்தியாவில் உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் இந்திய சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு மிகவும் நன்றாகத் தெரிந்திருக்கிறது! ஐரோப்பியப் பெண்மணிகள் இந்திய சர்க்காரிடம் உபதேசம்பெற்றால் இப்பதிப் பஞ்சத்தை நன்கு சமாளிக்கலாம்! நிலைமை முதலில் எப்படி இருக்கும், பிறகு எப்படிச் சமாளிப்பார்கள் என்பதைப்பற்றி இனி ஆராய்வோம்.

இப்பொழுது எரிந்துகொண்டிருக்கும் யுத்த அக்னியானது ஒரு நாள் அணைந்து விடும். உலகில் சமாதானம் உதிக்கும். அதற்குள் ஐரோப்பாவில் பெரும்பாலான ஆண் மக்கள் யுத்தத்தில் இறந்திருப்பார்கள். ஆதலால் ஆண் ஜனத்தொகை மிகவும் குறைந்துவிடும். பெண்கள் வியாபாரங்களிலும், ஆண்களின் யதேச்சாதிகாரமாக இருந்த இதர வேலைகளிலும் புகுவார்கள். ஆனால் ஒரே ஒரு வேலைமட்டும் அவர்களை எதிர்க்கும்—அதாவது கணவர்களுடைய வேலை. பதிப்பஞ்சத்தைத் தீர்ப்பதே ஐரோப்பியப் பெண்மணிகளின் முக்கிய லக்ஷ்யமாக இருக்கும்.

பெண் விக்ஞானிகளும், பெண் டாக்டர்களும், பெண் ராஜதந்திரிகளும், பெண் வக்கீல்களும் வரப்போகிற பதிப்பஞ்சத்தை எப்படித் தீர்ப்பது என்று வீணாக மண்டையை உடைத்துக்கொள்வார்கள். காலா காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளாவிடின், வங்காள உணவுப் பஞ்சத்தை விட மிகவும் மனத்தைக் கலக்கக் கூடிய விபத்து ஐரோப்பியப் பெண்களுக்கு உண்டாகும்.

கணவர் பஞ்சத்தின் அறிகுறிகள் தென்பட்டவுடன் ஐரோப்பியப் பெண்களில் புத்திசாலியானவர்கள் கணவர்களை அடைவதற்கு வழி கண்டுபிடித்துக் கொள்வார்கள். ஆண்களே தங்களைத் தேடிவரவேண்டுமென்று காத்திருக்கமாட்டார்கள், மற்றவர்கள் சீக்கிரத்திலேயே தமது தவற்றை உணர்ந்து வெட்கம், மானம் ஒன்றுமில்லாமல் கணவர் வேட்டையில் இறங்குவார்கள்.

முதலில் ஆண்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். அழகுள்ளவர்களும், படித்தவர்களும், மரியாதை தெரிந்தவர்களுமான பெண்கள் தங்கள் கண்களாலும், மனோஹரப் புன்முறுவலாலும் ஆண்களை இழுக்கப்பார்க்கும் பொழுது, அவர்களுக்கு மிகவும் கஷ்டமாகிவிடும். ஆண்கள் யாரைத் தேர்ந்தெடுப்பது, எப்படி நடந்துகொள்வது, என்ன சொல்வது என்று தெரியாமல் விழிப்பார்கள். மேலெழும்பிக் கொண்டிருக்கிற பெண்களின் அலைகளினால் அவர்களுக்கு ஒழிவே கிடைக்காது. பெண்களின் தொந்தரவிலிருந்து தப்புவதற்காக ஆண்கள் தங்கள் வீடுகளின் எதிரில் 'வெளியேபோயிருக்கிறார்', 'வீட்டில் இல்லை', 'ஒருதரம் பார்ப்பதற்கு ரூ. 10' என்று பலகைகளைத் தொங்கவிடுவார்கள்.

ஒன்று வேண்டுமென்று தோன்றிவிட்டால் மானத்திற்கும், அவமானத்திற்கும் இடமேது? பெண்கள் கணவர் வேட்டையில் எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்வதற்குத் தயாராயிருப்பார்கள். கணவர்களின் விலை 100 பவுன், 500 பவுன்; 1000 பவுன் என்று வெகுவேகமாக ஏறிக்கொண்டேபோகும்.

கெட்டிக்கார வியாபாரப் பெண்கள் இச்சமயத்தைக் கைவிடமாட்டார்கள். ஆயுதங்களாகிய பாங்கு நோட்டுகளை எடுத்துக் கொண்டு அவர்களுடைய ஏஜண்டுகள் வீடு வீடாகச் சென்று அப்பொழுது இருக்கும் விலையைவிட இரண்டு மடங்கு கொடுத்து ஆண்களை வாங்குவார்க்ள்.

## விலைவாசிகளின் ஏற்றம்:—

தேசத்திலிருந்து திடீரென்று ஆண்கள் மறைந்துவிடுவார்கள். ஆதலால் அவர்களுடைய விலைகள் அதிகரிக்கும். சாதாரணமான கணவன் 5000 பவுனுக்குக் கிடைத்தால் அப்பெண் தன்னை அதிர்ஷ்டசாலி என்று நினைப்பாள். முதல்தரமான கணவன் 10,000-க்கு குறைந்து கிடைக்கமாட்டான். ஒரு கண் பொட்டை, செவிடு அல்லது நொண்டி வேண்டுமானால் இரண்டாயிரம், மூவாயிரத்துக்குக் கிடைக்கலாம். பணக்காரர்களான சிலரைத் தவிர, மற்றவர்களுக்கு ஏதோ ஒரு கணவன் இருக்கிறானென்று சொல்லிக்கொள்வதற்குக் கூட முடியாது.

இப்படியான விஷயங்கள் சமூகத்தை பெரிய மாறுதலுக்கருகில் கொண்டு வந்துவிடும். பொது உடைமைக்கட்சியைச் சேர்ந்த பெண்கள் கடவுள் ஆண்களை எல்லோருடைய நன்மைக்காகவுந்தான் அந்நாள் சிருஷ்டித்திருக்கிறார், பணக்கார ஸ்திரீகளுக்கு மட்டுமல்ல என்று சொல்லுவார்கள். கிடைக்கும்

கணவன்மார்களை எல்லோருக்கும் சமமாகப் பிரித்துத் தரவேண்டுமென்று பெரிய கலகம் செய்வார்கள். பணக்கார மாதர்கள், தங்கள் தனத்தால் இக்கலகத்தை அடக்க முயற்சிசெய்வார்கள்.

இதற்குள் நாட்டில் அதிசயத்திருட்டுக்கள் நடக்கும். பெரிய வீட்டுப் பெண்களின் கணவர்கள் இரவில் திருட்டுப் போய்விடுவார்கள்; தோட்டங்களுக்கும், பார்க்குகளுக்கும், பொது ஜன ரஸ்தாக்களுக்கும் தங்கள் மனைவிமார்களால் காற்றுவாங்க அழைத்துக் கொண்டு போகப்பட்டபொழுது ஆயுதம் தரித்த பெண்களின் கூட்டங்கள் அவர்களைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் விடுவார்கள்.

சர்க்கார் (பெண்களின் சர்க்கார் என்று ஞாபகம் இருக்கட்டும்) தகுந்த நடவடிக்கைகளெடுத்தாலொழிய அமைதி ஒரேயடியாக மறைந்துவிடுமென அறிந்து கடைசியில் விழித்துக்கொள்வார்கள்.

## கட்டுப்பாடு

சர்க்கார் முதலில் விலைக்கட்டுப்பாடு சட்டத்தைக்கொண்டு வருவார்கள், முதல்தர கணவர்களின் விலை 500 பவுன் என்றும் இரண்டாம் ரகம் 300 என்றும், மூன்றும் ரகம் 100 என்றும் விலை நிர்ணயம் செய்வார்கள்.

வியாபார ஸ்திரீகள் இச்சட்டத்தை எதிர்ப்பார்கள். சாதாரண ஜனங்கள் இது போதாதென்று பழிப்பார்கள். இதற்குள் சர்க்கார் தங்களிடம் ஜனங்களுக்கு நம்பிக்கை உண்டாவதற்கும், தங்கள் உத்ஸாகத்தைக் காண்பிப்பதற்காகவும் பெரிய வீட்டுப் பெண்களைக் கணவர்களைச் சேமித்துவைத்து அதனால் லாபமடைந்த குற்றத்திற்காகத் தண்டிப்பார்கள். இது பெரிய கிளர்ச்சியைக் கிளப்பி வியாபார உலகத்தில் திகிலை உண்டாக்கும். அவர்கள் எல்லாக் கணவன்மார்களையும் ரகசிய இடங்களிலும், சுரங்கங்களிலும் ஒளித்துவைப்பார்கள். கணவர்கள் கிடைப்பது பத்துமடங்கு அரிதாகிவிடும். பணக்காரப் பெண்கள் சர்க்காரின் புத்தியில்லாச் செய்கைகள்தான் இவ்வாபத்தான நிலைமைக்குக் காரணமென்று அதைச் சபிப்பார்கள்.

சர்க்கார் நிலைமையைச் சமாளிக்க மிகவும் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்து, பலாத்காரமாகப் பதினாறுவயதிற்குமேற்பட்டு அறுபது வயதிற்குட்பட்ட எல்லா ஆண்களையும் தேடிக் கட்டுப்பாட்டு விலையின்படி வாங்குவார்கள். இதற்குப் புதிய இலாகா ஏற்படுத்தப்படும். இந்த இலாகாவின் உத்தியோகஸ்தர்கள் மந்திரத்தினால் போல் வெகு சீக்கிரம் பணக்காரர்களாகிவிடுவார்கள். அவர்களிடம் நிறையக் கணவன்மார்கள் இருப்பார்கள். ஆனால் தேசத்தில் பதிப்பஞ்சம் இன்னு



மதிகமாகும்! இப்படி இருந்தபோதிலும் சர்க்கார் சில லக்ஷக்கணவர்களைச் சேகரித்து, தேசத்தின் பல பாகங்களிலும் சேமித்து வைப்பார்கள்,

கணக்கெடுத்துப் பார்த்தால் கிடைத்திருக்கும் ஆண்களின் தொகை வேண்டிய அளவுக்குக் கால்பாகத்திற்குக்கூட வரவில்லை என்று தெரியவரும். எல்லாக் கலாசாலைகளும், ஆராய்ச்சிச் சாலைகளும் நிறைய ஆண்குழந்தை உண்டாக்குவதற்கான ஆராய்ச்சியில்ஈடுபடும்.

சர்க்கார் மூலமாயும் அதிக ஆண் குழந்தைகளை உண்டாக்குவதற்குப்பலவிதங்கள் கையாளப்படும். உபயோகமில்லாத கிழவர்களை உபயோகமுள்ள கணவர்களாகச் செய்வதற்கும்,பையன்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும், வழிகள் தேடப்படும். இந் நீண்டநாள் திட்டங்களைத் தவிர, உடனே நிலைமையைச் சமாளிப்பதற்காகப் பிறநாடுகளிலிருந்து கணவன்மார்கள் இறக்குமதி செய்யப்படுவார்கள்.

தோழர் ஸ்டாலின் தம் நாட்டிலும் பஞ்சம் குறைவாகவில்லை. ஆதலால் ஆண்களைக் கொடுக்கமுடியாது என்று கையை விரித்து விடுவார்.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தலைக்குப் பத்தாயிரம் டாலர்வீதம் இரண்டு மில்லியன் (இருபது லக்ஷம்) ஆண்களைக் கொடுக்கத் தயார் என்பார். கனம் சர்ச்சில் வெள்ளைக் கணவர்களைக் கொடுக்கமுடியாது என்பார். ஆனால் பத்து லக்ஷம் இந்தியர்களையும், பத்து லக்ஷம் ஆப்ரிகர்களையும் குறைச்சல் விலையான 500 பவுனுக்குக் கொடுப்பதற்கு ஒத்துக்கொள்வார்.

பஞ்சம் உலவும் நாட்டில் எத்தரமான கணவன்மார்களையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும். பிறகு ஆண்களைப் பங்கு பிரித்துக் கொடுக்கும் பிரச்னையை எடுத்துக்கொள்வார்கள்.

## பங்கு போடுதல்

பலவித யோசனைகள் செய்யப்பட்டுத் தள்ளப்படும். சர்க்கார் இந்தியா தேசத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்ள ஆரம்பிப்பார்கள். திருவாங்கூரில் சர். ஸி. பி. செய்ததையே செய்வார்கள். முதலில் நகரங்களில கட்டுப்பாடு ஆரம்பித்து, தேசம் முழுதும் பரவும்.

ஆனால் கணவர்கள் அரிசியிலிருந்தும் கோதுமையிலிருந்தும் வித்தியாசப்படுகிறார்கள். இவர்களைப் பங்குபோட முடியாது. முழுசாகவே கொடுக்கவேண்டும். பன்னிரண்டு பெண்கள் கொண்டது ஒரு யூனிட் (சங்கம்) என்பார்கள். ஒவ்வொரு பெண் சங்கத்திற்கும், ஓர் ஆண் சங்கம் கொடுக்கப்படும். மூன்று வெள்ளையர்களையும், ஓர் இந்தியனையும், ஓர் ஆப்ரிக்கனையும் கொண்டது ஓர் ஆண் யூனிட்.

பெண்கள் விரைவில் வெள்ளையர்களை வாங்கிக்கொள்வார்கள். கறுப்பு மனிதர்களை வெறித்துப் பார்ப்பார்கள். சிலர் வர்ணம் ஒட்டிக்கொள்ளுகிறதா என்று அவர்களை நக நுனியால் தொட்டுப் பார்ப்பார்கள்! மற்றும் சிலர் எவ்வித வாசனை வருகிறது என்று முகர்ந்து பார்ப்பார்கள். சிலர் பேசுவதற்கு முயல்வார்கள். மீதியுள்ளோர் கடைக்கண்ணால் நோக்கி, புன் முறுவல் பூத்து, கறுப்பு நிற மனிதர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பார்கள்.

**கதம்பம்:—**

பணக்காரர்களுக்கு மூன்று வெள்ளையர்களும் கிடைப்பார்கள். ஏழைப்பெண்கள் வேறு வழியின்றி, கறுப்புக் நிற மனிதர்களை வாங்குவார்கள். ரகசியமாய் வெள்ளையர்களைப் பணத்திற்கு மாற்றிக்கொள்வார்கள்.

இறக்குமதி 'செய்யப்பட்ட கறுப்பு நிற மனிதர்களில் முக்கால் வாசிப்பேர் சர்க்காரிடம் விற்பனையாகாமல் நின்றுவிடுவார்கள். உடனே சர்க்கார் ஒரு சட்டமேற்படுத்துவார்கள்—கணவர் சங்கத்தைப் பிரிக்கமுடியாது. எந்தப் பெண்சங்கம் கறுப்பு மனிதர்களையும் வாங்கிக்கொள்ளுகிறதோ, அதற்குத்தான் வெள்ளையர்களும் கொடுக்கப்படும்—என்று. (அரிசி, கோதுமை மாதிரி)

கறுப்பு நிறக்கணவர்களைப் பிரசித்தப்படுத்துவதற்குப் பிரசார யுத்தம் ஆரம்பிக்கப்படும். பத்திரிகை, பேச்சு, துண்டுப் பிரசுரங்கள், ரேடியோ மூலமும் 40 சத விகிதக் கறுப்பு நிறக்கணவர்கள் தேக, தேச ஆரோக்கியத்திற்கு நல்லது என்பார்கள். கறுப்பு நிறத்தவர்களை எப்படி நடத்துவதென்பதை ஒலி பரப்புவார்கள. நம் ஜனங்களுக்கு, அரிசிக்குப் பதில் கம்பு, சோளம், கோதுமை சாப்பிடுவதற்கு எப்படிப் பழக்கமாகிவிட்டதோ, அப்படியே ஐரோப்பியப் பெண்மணிகளுக்கும் கறுப்புநிறக் கணவர்கள் பழக்கமாகிவிடுவார்கள்.

சீக்கிரத்திலேயே கணவர் கட்டுப்பாடு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியது என்று தெரியவரும். சோளமும், கம்பும் வயிற்றுக் கடுப்பைக் கொடுத்தாலும், வேறு ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் கணவர்கள் மிகவும் கஷ்டப்படுத்துவார்கள். அவர்களுடைய பார்வைகள், ஹிருதயங்கள், செய்கைகள் அளவை மீறிப்போகும். சங்கத்திற்குள்ளேயே ஒருத்தியைப் பார்த்துப் புன்சிரிப்புச்செய்து, இன்னொருத்தியைப்பார்த்துக் கண்ணடித்து, மூன்றாமவளை முறைத்துப்பார்த்து, பொறாமையையும் சண்டையையும் உண்டாக்குவார்கள். அமைதியை நிலைநாட்ட இத் துஷ்டத்தனங்களைப் போக்குவதற்குத் தனி சிகிச்சை கொடுக்கப்படும். இவ்விதம் கணவர்களை ஒரே நிலைக்கு (Standardisation) கொண்டுவருவார்கள். இது கட்டுப்பாட்டிற்கு அத்தியாவசியமானது.

## இந்தியாவில் எதிரொலி

ஐரோப்பியப்பஞ்சம் இந்தியாவிலும்உணரப்படும். கணவர்களின் விலை ஏறும். இந்திய சர்க்கார் அதிகச்சம்பளமும் அதிகப்படியும் கொடுக்கிறோம் என்று ஆசைகாட்டிக் கணவர்களைச் சேர்ப்பார்கள். சில கணவர்கள் சொல்லிக்கொள்ளாமல் தங்கள் மனைவிகளை விட்டுப் போய்விடுவார்கள். மற்றவர்கள் தங்களுடைய 'காதலால்' தான் தாங்கள் கஷ்டமான ஆனால் லாபமுள்ள இவ்வேலையை ஒத்துக்கொண்டோம் என்று தங்கள் மனைவிகளைச்சமாதானம் செய்வார்கள்.

அந்தோ! பெண்களைப் பெற்ற தகப்பன்மார்களின் பாடு மிகவும் பரிதாபகரமானதாகிவிடும். யுத்தம் நடக்கும்பொழுதே கறுப்பு மார்க்கெட்டிலாவது அதிகப் பணம் கொடுத்து மாப்பிள்ளைகளை வாங்கியிருக்கக் கூடாதா என்று வருத்தப்படுவார்கள். அப்பொழுது பணப் புழக்கம் அதிகமிருந்தது. இப்பொழுது கையில் காசுமில்லை, கடன் கொடுப்பார் யாருமில்லை என்று பிரலாபிப்பார்கள்.

இதற்குள் அகில இந்திய மனைவிகள் சங்கம் இந்தியக் கணவர்களை அழைத்துப்போவது அநீதி என்று ஒரு கண்டனத்தீர்மானம் நிறைவேற்றுவார்கள். இதை நிறுத்தச்சொல்லிக் கலியாணமாகாதவரைச் சேர்க்கும்படி வைஸ்ராயைக் கேட்டுக்கொள்ளுவார்கள்.

அகில இந்தியக் கன்னிப்பெண்களின் மகாநாடு அகில இந்திய மனைவிகள் சங்கத்தின் வேண்டுகோளை எதிர்க்கும். கலியாணமாகாதவர்களை அனுப்புவதை நிறுத்தாவிட்டால் கலியாண சுகமென்பது என்னவென்றறியாமலேயே நாங்கள் கிழவிகளாகிவிடுவோம். கொஞ்சம் அனுபவித்தவர்களை அழைத்துப் போவதுதான் சரி என்று ஸத்தியாக்கிரஹம் செய்ய ஆரம்பிப்பார்கள்.

அதிருப்தியும் அமைதியின்மையும் தேச முழுதும் பரவும். நிலைமை முற்றிப்போகுமுன் பெரிய பெரிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். எல்லா ஆண்களும் ஒரு மத்திய ஸ்திரீ சங்கத்தின்கீழே கொண்டுவரப்படவேண்டும். எல்லாக் கணவர்களும் தங்கள் தங்கள் மனைவிமார்களின் கடூர கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

# சிற்பியின் சபதம்

**விஜயஸ்ரீ**

விஷ்ணு குப்தனுக்கு உவகை பொங்கியது. ஆம், இருபது ஆண்டுகளாக எதற்காக உழைத்தானோ அதன் பலன் கைமேல்கிடைத்துவிட்டது இன்று. பெரிய பெரிய சிற்பிகளின் கைத்திறனைக் கண்டு அவன் அதிசயப்பட்ட நாள் உண்டு. கீர்த்திக்காகத் தவங்கிடந்ததும் உண்டு. ஆனால் இன்றுதான் அவனுடைய மனோகரமான மனக்கோட்டைகள் பூர்த்தியாயின. கீர்த்தியின் உச்சாணிக் கொம்புக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டது அவனுடைய சிருஷ்டியான அச்சிலை. அவன் நல்ல சிற்பி. தன் கைத்திறன் யாவற்றையும் ஒருங்கு சேர்த்து அச்சிலையைச் செய்து முடித்திருந்தான்.

சிலையின் அருகே நின்று கூர்ந்து பார்ப்பான். சற்றுத்தூரம் சென்று சிலையின் எழிலைப் பருகுவான். மறுபடியும் அருகில்வந்து குற்றங்குறை இருக்கிறதாவென்று கூர்ந்து கவனிப்பான். ஒவ்வோர் அங்கத்தின் பூரணப் பொலிவையுங் கண்டு மோகித்து, மயிர்க்கூச்செறிய நிற்பான். "என் தங்கமே" என்று சொல்லிச் சிலையை அணைவான். தன் அறியாமையை நோக்கித் தனக்குள்ளேயே சிரித்துக்கொள்வான்.

விஷ்ணுகுப்தன் ஒரு அப்ஸரஸைச் சிருஷ்டித்துவிட்டான். என்ன லாவண்யமான முகம்! அடுத்த நிமிஷம் பேச ஆரம்பித்துவிடும்போல் தோன்றும்—அவ்வளவு ஜீவகளை மதிவதனத்தில். கண் சிமிட்டிப் பரிகாசம் செய்கிறதா நம்மை என்ற சந்தேகம் உதித்துவிடும்—அவ்வளவு விஷமம் கயல்மீன் போன்ற லோசனங்களில். உருண்டு திரண்டு இளமையின் அழகுடன் கூடிய அங்கங்களின் பொலிவை நம்மால் வருணிக்க இயலாது.

வேலை பூர்த்தியானவுடன் தன் நண்பன் ரவிவன்மனைக் கூப்பிட்டுக் காண்பித்தான் விஷ்ணுகுப்தன். ரவிவன்மன் பல்லவ ராஜ்யத்திலேயே சிறந்த சிற்பி என்று பெயர் வாங்கியவன். அவனே சிலை வைத்திருக்கும் அறையில் நுழைந்தவுடன், பிளந்த வாயுடன் கல்லெனச் சமைந்துவிட்டான்.

"யார் அவள்?" என்று கேட்டான் அவன் சிலையைச் சுட்டிக்காட்டி.

விஷ்ணு குப்தனுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. கலகலவென்று நகைத்துவிட்டான். "அது பெண்ணல்ல, சிலையே" என்றான் சிரிப்பை அடக்கிக்கொண்டு.

ரவிவன்மனின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. சிலையின் அருகில் சென்று அதைத் தொட்டுப் பார்த்தான். ஆச்சரியத்தால் அவனுடைய கண்கள் மலர்ந்தன.

"நண்பா! இது யாருடைய சிருஷ்டி?" என்று அவனால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"என்னுடையது" என்று கம்பீரமாக மொழிந்தான் விஷ்ணுகுப்தன். அவனுக்குப் பெருமை தாங்கமுடியவில்லை.

"வாணியின் வரப்பிரஸாதம் பெற்றவர்களாலும் செய்யமுடியாத ஒன்றை நீ செய்து முடித்துவிட்டாய்" என்று முணுமுணுத்துக் கொண்டே மேலும் கீழும் நடந்தான் ரவிவன்மன். அவனுடைய மனதில் சந்தோஷமும், மரியாதையும் நிரம்பியிருந்தன. திடீரென ஏதோ தீர்மானத்திற்கு வந்தவன்போல் நின்றான்.

"நண்பா! உனக்குச் சன்மானம் வேண்டுமா?...... அச்சிலையை எனக்குக் கொடுக்கிறாயா? பதினாயிரம் பொன் தருகிறேன்" என்று கேட்டான் அவன், சிலையின்மேல் வைத்த கண்ணை எடுக்காமல்.

"முடியாது" என்று பதிலளித்தான் விஷ்ணு குப்தன். அவனுடைய குரலில் கோபமும் தீர்மானமும் தொனித்தன.

மறுபடியும் மேலும்கீழும் நடக்க ஆரம்பித்தான் ரவிவன்மன். மனதிலோ பெரும் போராட்டம், வெளியிலோ சாந்தமான முகத்தோற்றம், கண்களோ சிலையின்மேல்.

"மூன்று வீடுகளுடன் பதினாயிரம் பொன் தருகிறேன். சரிதானே?" என்று கேட்டான். "முடியாது" என்று திரும்பவும் அதே பதில்.

ரவிவன்மனுக்குக் கோபம் வந்துவிட்டது. "பின், எவ்வளவு ரொக்கம் கொடுத்தால் சிலையைத் தருவாய்?" என்று மறுபடியும் கேட்டான்.

ரவிவன்மனின்மேல் பதித்திருந்த கண்களைச் சிலையினிடம் திருப்பினான் விஷ்ணுகுப்தன். இதழ்க்கடையில் புன்முறுவலின் சாயல். அவன் பேச ஆரம்பித்தான். குரலில் உணர்ச்சி வேகம் ததும்பியது.

"ரவிவன்மா! கேவலம் பதரென நிரூபித்துக் கொண்டுவிட்டனை உன்னை. கலையின் நிருப்புத்

தெரிந்த நீயே இவ்வற்பப் பேச்சைப் பேசுகின்றாயே! சிலையைச் சிருஷ்டித்தவன் யார்? நான். அதனால் ஏற்படப்போகும் கீர்த்தியையோ அபகீர்த்தியையோ அனுபவிக்கவேண்டியவன் நானே. நீ பணத்திற்கு இச்சிலையை வாங்கி, கீர்த்தி அடைய எண்ணுகிறாய். அப்படியே உனக்கு இச் சிலையை நான் விற்றுவிட்டாலும், அதனால் வரும் புகழ் உன்னதல்லவே? ஆகவே அவ்வெண்ணத்தை விட்டொழி. இன்னொருவனுடைய சாமர்த்தியத்தினால் நீ கீர்த்திபெறுவது ஆண்மைக்கழகோ? நான் இச்சிலையை விற்கமுடியாது; ஆம் நிச்சயமாகமுடியாதுதான். இதனால் வரும் கீர்த்தியும் புகழ்மாலையும்—என்னுடையவையே. எனக்குப் பணம் பெரிதல்ல, கீர்த்தியே-புகழ்மாலையே-பெரிது"

இச்சிறு உணர்ச்சி வெள்ளத்தைக் கண்ட ரவிவன்மன் ஸ்தம்பித்துப் போய்விட்டான். "சே, என்ன காரியம் செய்தோம்" என்றாகிவிட்டது அவனுக்கு. இருந்தாலும் அச்சிலையின் மேலிருந்த மோகம் போகவில்லை; அவனுடைய பார்வையைக் காந்தமென ஆகர்ஷித்தது சிலை.

கடைசி முறையாக அதன் அழகைப் பருக எண்ணங்கொண்டு, அப்பெண் கொடியைக் கூர்ந்து கவனித்தான். நெற்றி, கண்கள், மூக்கு, வாய், முகவாய்க்கட்டை, கழுத்து இவைகளைப் பார்த்துக்கொண்டுவந்த கண்கள் கழுத்துப்பாகத்தில் லயித்து நின்றன. ரவிவன்மனின் மனதில் உவகை தோன்றியது.

சேலத்தில்
கல்யாணப்பட்டு ஜவுளி ரகங்கள்
வாங்கச் சிறந்த இடம்

ராம விலாஸ்

396, கடைவீதி சேலம்.

★

Proprietors:
S. N. Ramaswamy Chetty & Bros.

என்ன நினைத்தானோ என்னவோ, விஷ்ணுகுப்தனிடம் திரும்பி, "விஷ்ணுகுப்தா, என்னை மன்னித்துவிடு. உன் சிலையினால் வரும் புகழ் உன்னுடையதே......... நாளை அரசர் தர்பாரில் வீற்றிருக்கும்போது சிலையுடன் அரண்மனைக்கு வந்துசேர். நாளைக்கலைத்தெய்வத்துக்குரிய நாள் அல்லவா? ஆகவே அரசன் உனக்குத் தகுந்த பரிசளிப்பார். மேலும் புகழும் கிட்டும்" என்று சொல்லிவிட்டுப் பதிலை எதிர்பாராமல் வெளியே சென்றுவிட்டான்.

அன்றிரவு அவனுக்கு நித்திரையே வரவில்லை. அப்புறமும் இப்புறமும் புரண்டு புரண்டு படுத்தான். கண்ணை மூடவேண்டியதுதான் தாமதம், விஷ்ணுகுப்தனின் சிலை மனக்கண்முன் தோற்றம் அளிக்கும். "நான் புகழுக்காகவும் கீர்த்திக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டேன்!" என்று சிலை முணுகுவதுபோல் தோன்றும் அவனுக்கு. விஷ்ணுகுப்தனின் வார்த்தைகள் ரவிவன்மனின் காதில் ஒலித்துக்கொண்டேயிருந்தன. "எனக்குப் பணம் பெரிதல்ல. கீர்த்தியே பெரிது, புகழ்மாலையே பெரிது" என்ற அச்சொற்கள் அவனுடைய மனத் திரையிலே துள்ளிக்குதித்து, ஆர்ப்பரித்து, நடனமாடின.

ரவிவன்மன் தன்னை வெறுத்துக்கொண்டான். காரணமென்னவென்று அவனுக்கே புரியவில்லை. திடீரென்று சிலையின் கழுத்துப் பாகம் நினைவு வரும் அவனுக்கு. உடனே பழைய குதூகலமும், சந்தோஷமும் திரும்பி வந்துவிடும்.

நினைவுப் பாதையிலே அச்சிலையுடன் கைகோத்த வண்ணம் மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண்டிருந்தான் ரவிவன்மன். நித்திரா தேவியும் அவனை ஆலிங்கனம் செய்துகொண்டாள்.

— 2 —

மஹேந்திர பல்லவனின் அரண்மனை. கொலுமண்டபம் வெகு அழகாகச் சித்திரிக்கப்பட்டிருந்தது. கெட்டித் தங்கத்தினால் செய்த சிங்காதனத்தில் தன் தேவியுடன் மன்மதன் போன்று வீற்றிருந்தான் புவனேசுவரன். தாதியர் மிக்க விநயத்துடன் சாமரை வீசினார்கள். அரசியும் தன் காதலனான மன்னனைக் கடைக்கண்ணால் கண்டு களித்து, ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்து கிடந்தாள். தந்தத்தாலும், கருங்காலியினாலும் செய்யப்பட்ட ஆசனங்களில் மந்திரிகள், பிரபுக்கள், நகரப்பெருமாந்தர், ரிஷிகள் முதலியோர் அமர்ந்திருந்தனர். அரண்மனை வாயிலிலே முரசு ஒலித்துக்கொண்டிருந்தது. நறுமணத்துடன் தவழ்ந்து வந்தது இன்னிசை.

நடன மாதர்கள் சதங்கைகள் ஜில்ஜில்லென்று சப்திக்க வெகு சாமர்த்தியமாக நர்த்தனம் செய்தனர். அரசனுடைய "சபாஷ்,

பலே" இவற்றிற்குக் காத்துக் கிடந்தனர் யாழ்பயிலும் மங்கையர். தம் உருண்டு திரண்டு பருத்த புஜங்கள் அரசனின் கண்ணைக் கவர்கின்றனவா என்று நோக்கினர் பிரபுகுமாரர்கள்.

தன் தேவியுடன் சிறுசம்பாஷணையில் ஈடுபட்டிருந்த சக்கரவர்த்தி தன்பேச்சை நிறுத்தி, அரண்மனை வாயிற்படியை நோக்கினான். யாவரும் அத்திக்கை ஆவலுடன் பார்த்தார்கள்.

பல்லவ ராஜ்யத்திலே நிகரற்ற சிற்பியென்று பெயர்பெற்ற ரவிவன்மன் தன் பரிஜனங்கள் புடைசூழக் கொலு மண்டபம் அடைந்து அரசன்முன் பணிந்து நின்றான். அரசன் தன் ஆதனத்தினின்று எழுந்திருந்து, "ரவிவன்மா! நமஸ்கரிக்கின்றோம்" என்று கூறிச் சிற்பியை நமஸ்கரித்தான்.

"அரச! உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் ஸர்வ மங்களமும் உண்டாவதாக" என்று எதிர்மொழி கூறி அரசனுடன் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தான் ரவிவன்மன்.

"இன்று கலைத்தெய்வத்தின் திருநாளாயிற்றே; அதற்குத் தக்க ஏற்பாடு செய்தாகிவிட்டதா அரசே?"

"வெகு ஆடம்பரமான தோரணையில் ஏற்பாடுகள் செய்தாகிவிட்டன கலாவல்லபரே"

அரசனுடன் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு ரவிவன்மன் சபையோரை நோக்கினான். அவனுடைய கண்கள் அன்று பரிசு பெறும் எண்ணத்துடன் வந்திருந்த சிற்பிகள் கூட்டத்தில் அலைந்தன. கடைசியில் விஷ்ணுகுப்தனின் முகத்திலே நின்றன. அகம்பாவம் நிறைந்த அப்பார்வைக்குச் சற்றும் அஞ்சாமல் கர்வமாக ரவிவன்மனைப் பார்த்தான் விஷ்ணுகுப்தன். அவனுடைய அருகில் அவன் செய்திருந்த சிலையிருந்தது. கண்பட்டு விக்னம் நேராதிருக்க அதனைத் துணியால் மறைத்திருந்தான். அச்சிலையையே பார்த்துக்கொண்டிருந்தான் ரவிவன்மன். அக்கொடிய பார்வையினின்று தன் சிலையைக் காப்பாற்றுவதேபோல் தன் வலக்கரத்தால் அதைத் தழுவிக்கொண்டான் விஷ்ணுகுப்தன். அவனுடைய மனதில் சஞ்சலமற்ற சாந்தி. ரவிவன்மன் உள்ளத்திலோ ஊளையிடும் ஊதைக்காற்று.

சக்கரவர்த்தி சற்றுநேரம் ரவிவன்மனுடன் மறுபடியும் பேசினான். ரவிவன்மன் எழுந்திருந்து, "இச்சபையோரில் கலாதெய்வத்துக்குரிய இந் நன்னாளில் பரிசு பெறும் எண்ணத்துடன் வந்திருக்கும் புமான்கள் தயவு செய்து தம் கலைச் செல்வங்களுடன் ஓவிய மண்டபத்திற்குஎழுந்தருளவேண்டுகின்றோம்" என்று கம்பீரமாகச்சொன்னான்.

சபை கலைந்தது. யாவரும் ஓவிய மண்டபத்துள் நுழைந்தனர்.

பல்லவராஜன் பரிசளிப்பதிலே கர்ணன் என்று பெயர் பெற்றவன். ஆகவே அன்று ஒரே கூட்டம். வடநாட்டிலிருந்தும், சீனதேசத்திலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும், ரோமாபுரியிலிருந்தும் சைத்ரிகர்கள், சிற்பிகள் வந்து குழுமியிருந்தனர் ஓவிய மண்டபத்தில். அரசன் ஒவ்வொரு சைத்ரிகனிடமும் நின்று, அவனுடைய கலைப்பொருளை எடுத்து, தன்னருகில் வரும் ரவிவன்மனிடம் காண்பிப்பான். கலைஞர்களுக்கென்ற தனிப் பார்வையை அதன்மேல் வீசுவான் ரவிவன்மன். குற்றங்குறைகளிருப்பின் கூறுவான். இல்லையெனில் மௌனம் சாதிப்பான்.

பலருடைய ஓவியங்களையும், சிலைகளையும் அரசன் பார்த்தாகிவிட்டது. இருப்பினும் அவனுக்குத் திருப்தியேயில்லை. அவைகள் மிக அழகாக இருப்பினும், விசேஷ குணமொன்றும் காணாமல் பெருமூச்சுவிட்டான் மன்னவன்.

விஷ்ணுகுப்தனின் சிலைக்கருகில் வந்தான் பல்லவன். உடனே விஷ்ணுகுப்தன் அதை மறைத்திருந்த சீலையை அகற்றிவிட்டான். அரசன் சிலையைக் கண்கொட்டாமல் பார்த்தான். பிறகு தொட்டுப்பார்த்தான். புன்சிரிப்புக் கொண்டான். அவன் மனதைச் சிலை கவர்ந்துவிட்டது. அரசனுடைய மனத்தைக் கவர்ந்தவிதமே அது மற்றவர்களுடைய உள்ளங்களையும் கொள்ளைகொண்டுவிட்டது. பலர் விஷ்ணுகுப்தனுடைய கையை வாத்ஸல்யத்துடன் அழுத்தினர். சிலர் ஆனந்தக் கண்ணீரால் அவனுடைய பாதத்தை நனைத்தனர். அவனோ அரசனையும் சிலையையும் மாறிமாறிப் பார்த்தான். போரில் ஜயங்கொண்ட சேனைத்தலைவன்கூட அவ்வளவு இறுமாப்பும் இன்பமும் அடைந்திருக்க முடியாது!

புவனேசுவரன் விஷ்ணு குப்தனை நோக்கி, "உம் பெயரென்ன?" என்று கேட்டான். அதற்கு அவன் பணிவுடன் பதில் கூறினான். அரசன் சிற்பியைத் தழுவிக்கொண்டு, "களங்கமற்ற இச்சிலையைச் செய்த உம்மை மெச்சுகின்றோம்" என்று உணர்ச்சி மிகக் கூறினான்.

அப்பொழுது ரவிவன்மன், "அரசே! சற்றுப் பொறுங்கள். சிலை களங்கமற்றதல்ல. களங்கமுள்ளதே" என்று ஆணித்தரமாகக் கூறியதைக் கேட்ட யாவரும் கல்லாய்ச் சமைந்து நின்றனர். விஷ்ணுகுப்தனுக்குத் தலையில் பேரிடி விழுந்ததைப்போல் ஆகிவிட்டது. அவனுடைய கைகள் நடுங்கின. கண்களில் கண்ணீர் துளித்தது.

சிலையைத் தூக்கி யாவரும் காணும்படியானவொரு இடத்தில் வைத்து, சிலையின் கழுத்துப் பாகத்தைச் சுட்டிக் காண்பித்தான் ரவிவன்மன். கழுத்து, தோளுடன் சேரும் இடத்தில் ஒரு சிறு பிளவு இருந்தது. அதைக் கண்டு யாவரும் மூக்கின்மேல் விரலைவைத்தனர்.

வெற்றி தோன்றச் சிறுநகை செய்து ரவிவன்மன் "இப்பொழுதாகிலும் ஒப்புக்கொள்ளுங்கள் சிலை களங்கமற்றதல்ல" என்று மொழிந்தான். யாவரும் மௌனம் சாதித்தனர்.

திடீரென விஷ்ணுகுப்தன் ஆரம்பித்தான்—"பிளவு நான் செய்ததே. குற்றங் குறையின்றிச் சிலை செய்தால் உலகத்திற்குக் கெடுதல் என்பது ஐதிகம். எனவே ஒரு சிறு களங்கம் உண்டாக்கினேன்" என்றான். யாவரும் "ஆம்" என்று சொல்வதுபோல் தலையசைத்தனர்.

ஆனால் ரவிவன்மன் மட்டும் ஒன்றையும் கேட்டதாகத் தெரியவில்லை. "குற்றமுள்ள சிலையாக விருப்பினும் இன்றுபார்த்த கலைச் செல்வங்களுக்குள் மிகச் சிறந்தது உன் சிலையே. ஆகவே உனக்குப் பரிசுண்டு. ஆனால் புகழ் கிடையாது. ஏனெனில் களங்கமில்லாச் சிலைக்கே புகழ்" என்று விஷ்ணுகுப்தனை நோக்கி மொழிந்தான்.

விஷ்ணுகுப்தன், "உலகத்தில் எவராலேயும் ஒரு சிறு களங்கங்கூட இல்லாத பொருளொன்றைச் சிருஷ்டிக்கமுடியாது" என்று கடுமையாகக் கூறினான்.

ரவிவன்மன் ஏளனந்தோன்ற நகைத்து, "களங்கமில்லாக் கலைச்செல்வத்தைச்சிருஷ்டிக்கும் சக்தி என்னிடம் இருக்கிறது" என்றுகூறி அரசனை நோக்கினான். பிறகு "இன்னும் ஆறு மாத காலத்திற்குள் ஒரு சிறு களங்கமுமற்ற சிலையைச் செய்து முடிக்கிறேன்" என்று சபதங்கூறினான்.

விஷ்ணுகுப்தன் பரிசுடன் வீடடைந்தான். மனதில் ஆழம் காணமுடியாத துயரப்பெருங் கடல்.

3

ரோமாபுரியிலிருந்து உயர்ந்த சலவைக்கல் கொண்டுவரப்பட்டது. தன் கிருகத்தில் ஓவிய மண்டபத்திலமர்ந்தவண்ணம் ஒரு சிலையைச் செய்துகொண்டிருந்தான் ரவிவன்மன். அவனுடைய மனம் முழுவதும் சிலையிலேயே இருந்தது. தன் சபதத்தை நிறைவேற்றவேண்டுமென்பதே அவனுடைய கருத்தாக இருந்தது. சிற்றுளியால் சலவைக்கல்லைப் பெயர்த்துப் பெயர்த்துச் சிலையமைப்பதில் ஈடுபட்டிருந்தான் அவன். உணவு கொள்வதில்லை, உறக்கங்கொள்வதில்லை, எப்பொழுது பார்த்




# வின்ஸென்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.

வின்ஸென்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி, குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய், பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்றாய் அடைந்திருக்கும் **வின்ஸென்ட் கம்பெனியாரால்** தயார் செய்யப்பட்டவை. மேலும் டீ·சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழாக் காலங்களிலும் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

தானும் சிலை, சிலை, சிலை! எந்நேரத்திலும் ஓவியமண்டபத்தில், உள்ளே போவதற்கு யாருக்கும் அனுமதிகிடையாது—ஆம். அவனுடைய மனைவி மக்கள் உட்படத்தான்!

நடராஜ மூர்த்தியைச் சிலையாகச்செய்துகொண்டிருந்தான் ரவிவன்மன். சில வேளைகளில் விஷ்ணுகுப்தனின் சிலை அவனுடைய மனக்கண்ணில் உதிக்கும்.

“புகழாம் புகழ்! களங்கமுள்ள ஒரு சிலையைச் செய்துவிட்டுப் புகழுக்காக அலைகிறான் பிச்சைக்காரப்பயல். ஒரு குற்றமும் இல்லாத, களங்கமற்ற சிலையைச் சிருஷ்டிப்பவனுக்கல்லவா புகழ்.........? இச்சிலையைக் களங்கமற்றதாகச்செய்து புகழ்மாலை அடைவேன். கீர்த்தி, அமரத்வம்......அப்பொழுது விஷ்ணு துப்தன் பொறாமைப்படட்டும்” என்று சொல்லிவிட்டு ஆனந்தக்களிப்பால் கூத்தாடுவான் சிலவேளைகளில்.

சில சமயங்களில் அவனுக்குத் தன்னிடமேயே வெறுப்பு உண்டாகிவிடும். “ஏன் இவ்வாறு செய்கிறோம்? வீண் பைத்தியக்காரத்தனம்” என்று தோன்றும். ஒரு சமயம் இவ்வாறு யோசனையிலாழ்ந்திருந்தவன், “சனியன் பிடித்த இந்தச் சிலையால்தானே மனக்கவலை அதிகரிக்கிறது” என்று சொல்லி அருகில் பாதி முடிந்தும் பாதி முடியாததுமாய் இருந்த சிலையைக் கீழே தள்ளி உடைத்துவிட்டான். பிறகு, தான் செய்த பிழை தெரியவந்தது. திருமபவும் சிலையைச் செய்ய ஆரம்பித்தான்.

தன் சபதத்தின் நினைவு வந்துவிடும் அவனுக்குத் திடீரென்று. உடனே சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பிப்பான்.

சிற்சில சந்தர்ப்பங்களில் உளியைச் சற்று வேகமாக அடித்துவிடுவான். அவ்வுளி தயவு தாட்சண்யமின்றி நடராஜரின் மூக்கைப் பிய்த்துவிடும். உடனே ரவிவன்மனுக்குக் கோபம் வந்துவிடும். சிலையைப்போட்டு உடைப்பான். பிறகு சிறு குழந்தை மாதிரி அழுவான். தன் பிழைக்காக உளியைத் தலையில் குத்திக்கொள்வான். ரத்தம் வழியும். அலறுவான். யாரும் உத்தரவின்றி உள்ளே வரக்கூடாதே? ஆகவே காரியத்தைச் சரிப்படுத்துவார் கிடையாது. ரணங்களுடன் திரும்பவும் சிலையைத் துவக்குவான். சக்தியின்மையினால் மூர்ச்சித்து விழுவதும் உண்டு. திரும்பவும் எழுந்து சிலையின் வேலையைக் கவனிப்பான்.

சலவைக் கல் ஏராளமாகச் செலவழிந்தது. நான்கு மாதங்களாகிவிட்டன. சிலை முடிந்தபாடில்லை. அது எப்படி முடியும்? ஒரு களங்கமுமல்லவா இருக்கக்கூடாது? அதுவுமன்றி, சிலையைச் செய்வதும் உடைப்பதுமாயிருந்தால் என்றுதான் வேலை முடியும்? சிலை ஆரம்பமாகக்கூட இல்லை. இக்கால தாமதம் ரவிவன்மனுக்குத் தெரியாமல் இல்லை. ஆயினும் அவன் என்செய்வான்? களங்கமில்லாத சிலையைச் செய்யவே முடியாது என்றெண்ணி அங்கலாய்ப்பான். திடீரெனப் புது வேகத்துடன் சிலையைச் செய்வான்............

ஐந்து மாதங்களும் கரைந்துவிட்டன. சிலை மெதுவாக உருவாகிக்கொண்டிருந்தது. நடராஜர் ஒற்றைக் காலைத் தூக்கி ஆடும் பாவனையில் ரவிவன்மன் உளியால் செதுக்கினான். மாய வித்தை செய்தான். இந்திர ஜாலம் மகேந்திர ஜாலம் காட்டினான்; ஒரே நோக்கத்துடன் வேலை செய்தான். சிறிதுநேரம் தான் செய்யும் சிலையின் அழகைப் பருகிக்கொண்டு நிற்பான். ரவிவன்மன் சபதம் முடிய இரண்டே நாட்கள்!

மிக்க தீவிரத்துடன் சிலையைப் பூர்த்திசெய்வதில் முனைந்திருந்தான் சிற்பி. எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. இடதுகால் கட்டைவிரலை மாத்திரம் நன்றாகச் செதுக்கினானால் புகழ் கிட்டுவது நிச்சயம். இவ்வெண்ணம் அவன் மனதில் எழும்போது உணர்ச்சியால் கைவிரல்கள் நடுங்கின. அன்று அதற்குமேல் சிலையின்மேல் கையை வைத்தால் ஆபத்து என்று ரவிவன்மனுக்குத் தெரிந்துவிட்டது. தன் உளியை உறையில் போட்டான். “வெற்றி நிச்சயம்” என்று முணுமுணுத்துக்கொண்டான். படுக்கச் சென்றான். இரண்டு நாட்கள் கழித்து உலகமே தன்னைப் புகழ்வதாக இன்பக்கனவு கண்டான்.

இன்னும் ஒரே ஒரு நாள்!!

ரவிவன்மன் மிகுந்த பிரயாசையுடன் சிலைக்கு யாதொரு விக்னமும் வராதபடி வேலைசெய்துகொண்டிருந்தான். அவனுடைய கை நடுங்கியது. உளியைக் கீழே வைத்துவிட்டுக் கைவிரல்களின். பரபரப்பைக் கவனித்தான். தன்னைச் சாந்தப்படுத்திக்கொண்டான். மறுபடியும் கைவிரல்கள் நடுங்கின. பொறுமையிழக்கத் தருணம் அல்ல என்று கண்டு நிதானித்தான்.

கட்டைவிரலைச் செதுக்கியாகிவிட்டது! சிலையில் யாதொரு களங்கமுமில்லை!!

மகிழ்ச்சியால் கூத்தாடினான் ரவிவன்மன். சற்றுத் தூரம் சென்று சிலையை நோக்கினான்.

நடராஜர் ஜகஜ்ஜோதியாய் நர்த்தனமாடிக்கொண்டிருந்தார். மறு நிமிடம் அந்த ஜோதியைவிடப் பன்மடங்கு சிறந்த ஜோதி ஒன்று ஓவிய மண்டபத்துள் இறங்கியது. கலைத் தெய்வம்!

கைகூப்பி, தரையில் விழுந்து, சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் சிற்பி.

"எழுந்திரு" என்று கடுமையாக மொழிந்தாள் வாணி. ரவிவன்மன் எழுந்திருந்தான். அவனால் பேசமுடியவில்லை. தன் வெற்றிக்கு அறிகுறியான சிலையைக் காட்டினான்.

"உலகத்தில் களங்கமற்ற வஸ்து ஒன்றும் கிடையாது. இனிமேல் இருக்கப்போவதும் கிடையாது" என்று இடியோசைபோல் கழறினாள் கலைத்தெய்வம்.

ரவிவன்மன் பேசவில்லை. மறுபடியும் சிலையைச் சுட்டிக்காண்பித்தான்.

"ஆம், அது ஒன்றுதான் களங்கமற்றது. ஆகவே அது களங்கமுற்றதாகவேண்டும்"

ரவிவன்மன் நடுநடுங்கினான். திடீரென்று அவனுக்குத் தைரியம் பிறந்துவிட்டது.

"அ... களங்கமுற்றதாக ஆகாது" என்று கத்தினான்.

"ரவிவன்மா! நீ என்ன செய்கிறாய் தெரியுமா? கலைத்தெய்வத்தின் ஆணையை மீறுகிறாய். நீ இச்சிலையின் பொருட்டு மிக்க கஷ்டப்பட்டாய் என்று எனக்குத் தெரியும். ஆயினும் கலைத்தெய்வம் தயைதாட்சண்யம் அற்றவள். உலகில் களங்கமற்றது ஒன்றும் கிடையாது. ஆகவே களங்கமற்ற இச்சிலை உலகத்திலிருக்கலாகாது. உலகத்திலிருக்கவேண்டுமானால், இது களங்கமுள்ளதாகவே இருக்கவேண்டும். நீயே சிலையின் விரலொன்றைச் சற்றே சேதுக்கிவிடு"

"முடியாது"

"நீ அவ்விதம் செய்யவில்லை என்றால் உன் உற்றார் உறவினர் மடிந்துபோவார்கள்"

"போகட்டுமே. உற்றார் உறவினரைவிட இச்சிலையே எனக்குப் பெரிது. களங்கமற்ற கலைச்செல்வமான இச்சிலையைக் கண்டுகளிக்க உலக மக்கள் இருக்கிறார்களல்லவா? நான் கட்டாயம் புகழுடம்பு பெறுவேன்"

"உலகத்தாரும் மடிவார்கள்"

"மடியட்டுமே! பிரளயத்துக்குப்பின் மறுபடியும் உலகத்தில் உயிர்கள் தோன்றுமல்லவா? அவ்வுயிர்கள் இச்சிலையின் பெருமையைக் கொண்டாடுவார்கள். எனக்குப் புகழ்மாலையும் கிட்டும்"

"அப்படியாயின் நீ மடிவாய்"

"பரவாயில்லை. என் சிலையொன்று இவ்வுலகத்திலிருந்தாலேயே போதும்."

"சிலையைப் பஸ்மம் செய்துவிடுவேன்"

தாய் தன் மகவு கோரமரணம் அடைவதைப் பார்க்கச் சகிப்பாளா? ரவிவன்மன் அனலிடைப்பட்ட புழுவெனத் துடித்தான்.

"வாணி! வேண்டாம், வேண்டாம். என் உயிரைக்கொள். வேறு ஏதாகினும் கேள். என் சிலையைமட்டும் அழிக்காதே."

"உன் சிலையை நான் அழிக்கவில்லை. அதைச் சற்றுக் களங்கமுள்ளதாகச் செய்துவிடு. உலகத்திற்கே அதனை விட்டுச் செல்கிறேன். இல்லையெனில் நிச்சயம் சிலையை அழிப்பேன்."

பார்த்தான் ரவிவன்மன்' பஸ்மமாவதைக் காட்டிலும் ஒரு சிறு களங்கத்துடன் அக்கலைச் செல்வம் உலகத்திலிருப்பது மேல் என்று அவனுக்குப்பட்டது.

தன் உளியை எடுத்தான் சிற்பி. நடராஜரின் இடது கால் சிறு விரலுக்கருகில் ஒரு சிறு கீறல் கீறினான். கலைத்தெய்வத்தின் முகத்தில் ஒரு புன் முறுவல்.

ஓவிய மண்டபத்திலிருந்து மறைந்தாள் அப்பூங்கொடி. அத்துடன் மறைந்தது சிற்பியின் கனவும்.

—



டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின்

டானிக்

# ஆனைக்குக் குதிரை வைக்கை

பார்த்தஸாரதி

யானை நடையும் குதிரை ஓட்டமும்-என்று சொல்வதுண்டு. யானை சில ஸமயத்தில் வெகு வேகமாய் வருவதைக்கண்டு இப்படிச் சொல்வது வழக்கம். கம்பீரமாயும் மெதுவாயுமே நடக்கிற யானை ஏதோ ஒரு ஸமயத்தில் பாகனுடைய அவஸரத்தினாலோ உத்ஸாஹத்தினாலோ தூண்டப்பட்டு வேகமாய் நடக்கும். மலையத்தனை பெரிய பிராணி பருத்த உடம்பைத் தூக்கிக்கொண்டு கனவேகமாய் வருவதைப் பார்த்து, ஆச்சரியத்தினால் யானை நடைக்குக் குதிரை ஓட்டம்கூட தோற்றுவிடும் என்று பிரமித்து, இப்படிப் பழமொழி பிறந்துவிட்டது. இது உண்மையாயிராதென்று அடிக்கடி நினைப்பேன். இதைப் பரீக்ஷித்துப் பார்க்கும் ஸந்தர்ப்பமும் ஸௌகர்யமும் நேரவில்லை.

குதிரையும் யானையும் எல்லா ஊர்களிலுமிருந்தாலும் அவைகளை வைத்துப் பந்தயம் நடத்தும்படியாக இரண்டும் ஒருவனிடம் இருப்பதில்லை. யானைக்கு யஜமானனாயுள்ள கோயிலதிகாரி இப்படியொரு பந்தயம் நடத்த நேரிடாது. ராஜாங்கத்தார் குதிரைப் பந்தயம் நடத்துகிறார்களேயன்றி யானைக்கும் குதிரைக்கும் பந்தயம் நடத்துகிறதில்லை. ஸர்க்காரிலும் இவைகளுக்குப் பந்தயம் நடக்காது.

இப்படிப் பந்தயம் நடந்து பார்க்காமற்போனாலும் யானை நடை குதிரை ஓட்டத்துக்கு ஸமமாயிராதென்று நம்முடைய புத்தியினாலேயே நிச்சயிக்கலாம். யானைக்கு ஓட்டமென்பதே இராது. வேகமான நடைதான் அதற்குண்டு. வேகமான நடைகூட நெடுந்தூரமாவது நெடுநேரமாவது இருப்பதரிது. காளைமாடு தவிர— பசு, எருமை, கழுதை—முதலிய சின்ன மிருகங்கள் கொஞ்ச நேரம் கொஞ்ச தூரம்தான் ஓடவல்லன. அவ்வளவுகூட ஓடமுடியாது யானை. அதனுடைய பருமனே அதை ஓடமுடியாமல் செய்யும். ஆகையால் குதிரை நடையும் யானை ஓட்டமும் என்றுகூட மாற்றிச்சொல்லலாம். இது நம்முடைய ஊஹத்தினால் உண்டான தீர்மானமே.

— 2 —

இந்த ஸந்தேகம் தீராமலே கிடக்கையில் யானைக்குக் குதிரை வைக்கை— என்றொரு பழமொழி கிடைத்தது. ஆழ்வார்களின் பாடல்களான நாலாயிர திவ்யப்ரபந்தத்தின் பல வியாக்கியானங்களையும் தான்தோன்றியாய் மேலெழுந்த வாரியாக அங்கங்கே போது போக்காகப் பார்த்துக்கொண்டிருக்கையில் பல்லாயிரம் பழைய தமிழ் வார்த்தைகள் அகப்பட்டன. அவைகளுக்கு அர்த்தமே தெரியவில்லை. சுருக்கமாயுள்ள பாட்டின் அர்த்தத்தை விளக்க வந்த பெரிய பெரிய வியாக்கியானங்களில் அர்த்தமாகாத பதங்களை விளக்குவதற்காக அரும்பதமென்று வியாக்கியானத்துக்கொரு வியாக்கியானம் முன்னோர்களால் எழுதப்பட்டது. அதுவும் வியாக்கியானத்தின் கீழேயே அச்சிட்டிருக்கிறது. அரும்பத விளக்கத்தினால்கூட அநேகம் வியாக்கியான வார்த்தைகள் அர்த்தமாகவில்லை. பலவிடங்களில் வரும் ஒரே வார்த்தைக்குப் பலவிதமாக அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. கடைசியாக 4000 பாட்டு, 40 வால்யூம் வியாக்கியானங்கள், அவற்றுக்குள்ள அரும்பதங்கள், மற்றைய ரஹஸ்ய நூல்கள், எல்லாவற்றிலுமுள்ள எல்லாச் சொற்களையும் ஒன்றுவிடாமல் கணக்கெடுத்துப் பெரிய அகராதியாக்கி எல்லா அர்த்தங்களையும் ஓரிடத்திலேயே சேர்த்து நிச்சயிக்க நேரிட்டது. இப்படிப் பொறுக்கியெடுத்து வரிசைப்படுத்தின வார்த்தைகளில் ஒன்று— ஆனைக்குக் குதிரை வைக்கை என்னுஞ் சொற்றொடர். இத்தொடர் வந்த இடங்கள் பின்வருமாறு:—

1. ப்ரணய தாரையில் அவளுக்கும் ஆனைக்குக் குதிரை வைக்கவல்ல ஜ்ஞாநாதிக்யத்தையுடையவன்.

36/3227/3 அல்லலின்பம் 3-10.8

அரு. ஆனைக்குக் குதிரை சரியாகாதாப்போலே அவளுடைய ஜ்ஞாநத்திலும் விஞ்சினவன். வியாக்கியானத்தினாலாவது அரும்பதத்தினாலாவது ஆனைக்குக் குதிரை வைக்கை என்பது விளங்கவேயில்லை. இப்படி விளங்காமலொரு வார்த்தை எழுத நேர்ந்த பாட்டின் ஸந்தர்ப்பத்தையாவது கவனிப்போம்.

அல்லலின்பமளவிறந்தெங்குமழகமர்குமொளியன்
அல்லிமலர்மகள் போகமயக்குக்காளாகியும் நிற்குமம்மான்
எல்லையில் ஞானத்தன் ஞானம: தேகொண்டெல்லாக் கருமங்களும் செய்
எல்லையில் மாயனைக் கண்ணனைத்தாள்பற்றி யானோர் துக்கமிலனே

ஈசுவரன் பிராட்டியினுடைய போக மயக்குக்களுக்கு வசப்பட்டவனாயிருந்தும் எல்லையில் ஞானத்தன் என்ற விஷயத்துக்காக ஏற்பட்டது ப்ரணயதாரையில்.........என்ற வாக்கியம். இப்படிப் பாட்டின் ஸந்தர்ப்பத்தையிட்டுப்பார்த்தாலும் ஆனைக்குக் குதிரை

வைக்கை—என்பதின் உண்மை விளங்கவில்லே. இத்தை விளக்கவந்த அரும்பதத்தாலும் வைக்கை என்ற பதத்தின் கருத்துத் தெரிய வில்லே. இன்னுமோர் இடம் பார்ப்போம்.

2. கண்ணுக்குத் தோன்ருநிற்கச் செய்தே ஆனைக்குக் குதிரை வைக்கையா யிராநின்றது.

36/3392/4 கையுள்ளன் முகம் வைக்கும் 5—5—8.

அரு……பிடிகொடுக்குமாபோலே யிருந்து பிடிகொடாதிருந்ததென்றபடி.

கையுள்நன் முகம்வைக்கும் நையுமென் றன்னேயரும் முனிதிர்
மைகொள் மாடத்திருக்குறுங்குடி நம்பியை நான்கண்டபின்
செய்ய தாமரைக் கண்ணுமல்குலும் சிற்றிடையும் வடிவும்
மொய்ய நீள்குழல் தாழ்ந்த தோள்களும் பாவியேன் முன்னிற்குமே

ஸர்வேசுவரன் தன்னுடைய அவயவ ஸௌந்தர்யங்களைக் காட்டிக்கொண்டு முன்னலே நிற்கையில் இவளும் அதைப்பார்த்துக்கொண்டிருக்கையில் தன்னைப் பாவியேன்-என்கிருள். அவனுடைய முன்னிலேயில் தன்னை வெறுப்பதை விளக்கவந்த வியாக்கியானத்திலுள்ள ஆனைக்கு என்னும் த்ருஷ்டாந்தம் விளக்கமான வார்த்தைகள் இல்லாமலிருக்கிறது. இதை விவரிக்கும் அரும்பத வாக்கியத்திஞல், ஸர்வேசுவரன் முன்னே நின்று பிடிகொடுக்குமா போலேயிருந்து பிடிக்கப்புக்கால் பிடிகொடாமல் போகிருன்—என்று தெரிகிறது. இந்த ஸந்தர்ப்பத்திஞல் யானைக்கும் குதிரை பிடிகொடுக்குமா போலேயிருக்கும், ஆனல் பிடிபடாதென்று ஏற்படுகிறது. இங்கே அரும்பதத்தால் ஆனைக்குக் குதிரை வைக்கை என்பது கொஞ்சம் புரிகிறது. மற்றுமோரிடம் பார்ப்போம்.

3. ப்ரணயதாரையில் வந்தால் அவள் பாரித்த பாரிப்புக்கெல்லாம் யானைக்குக் குதிரை வைக்கைக் கீடான நெஞ்சில் அக்லமுடையவன்.

—36/3660/1 இன்பம் பயக்க 7-10-1

அரு, ஆ……கையாவது—பிடிகொடுக்குமா போலேயிருந்து பிடிகொடா தொழிகை.

இன்பம் பயக்கவெழில் மலர்மாதரும் தானும் இவ்வேழுலகை
இன்பம் பயக்க வினிதுடன் வீற்றிருந்தாள்கின்ற வெங்கள்பிரான்
அன்புற்றமர்ந்துறைகின்ற வணிபொழில் சூழ்ந்திரு வாறன்விளை
அன்புற்றமர்ந்து வலம்செய்து கைதொழும்நாள்களு மாகுங் கொலோ

இங்கேயும் அரும்பதம் தான் தெளிவாயிருக்கிறது. வியாக்கியானத்திலுள்ள த்ருஷ்டாந்த வாக்கியமான ஆனைக்கு—என்பது விவரண வார்த்தையில்லாமல் அபூர்ணமாயிருக்கிறது. பிடிகொடுக்குமா போலேயிருந்து பிடிகொடா தென்னும் அரும்பதத்திஞல் மலர் மாதரும் தானும் இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற ஸர்வேசுவரன் அவளுடைய பாரிப்புக்கெல்லாம் இடம் கொடுக்கும்படியான ஸாமர்த்தியத்தை யுடையவனே யன்றி அவளுக்குத் தோற்பவனல்ல என்று வியாக்கியானகாரரின் கருத்துத் தெளிவாயிற்று. ஆனைக்குக் குதிரை வைக்கை என்ற விளையாட்டின் விவரம் தெளியவேயில்லே.

4. பதினருயிரம் பெண்களோடு ஆனைக்குக் குதிரை வைத்துப் பரிமாறின பரமரஸிகன் துவாரபதி யெம்பெருமான்.

அரு. ஆனைக்குக் குதிரை வைக்கையாவது ஆனை பெருத்திருந்தாலும் குதிரையைக் கிட்டித் தொடமாட்டாதாப்போலே அவர்கள் அநேகரும் தானுமொருவனுமாயிருந்தாலும் பெருமான்—என்கையாலே அவர்கள் எல்லார்க்கும் அவ்வருகாய் ப்ரணயதாரையில் விஞ்சியிருக்குமென்றபடி.

காலேயெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள் என்னுமிப் பாட்டில்—(594. நாச். தி. 9·8) பெரியவாச்சான் பிள்ளேயின் வியாக்யானத்துக்கேற்ற பதமில்லே. பாட்டில் ஸந்தர்ப்பமில்


மனித சமுகத்திற்கென நூதன ஆராய்ச்சி

# மேதாவின்
# ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனுக இப்புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலேப் படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணிவிட்டது.

**கே. எஸ். மேதா & கோ.,**
**மதராஸ்.**

லாமலே அவர் தம்முடைய உத்ஸாகத்தால் ஓர் அர்த்தத்தை வருவித்து வியாக்யானித்தார்.

இங்கேயுள்ள அரும்பதம் யானைக்குக்குதிரை வைக்கையை ஒருவாறு நன்ருக விளக்குகிறது. எப்படியெனில்-யானை பெரிது, குதிரை சிறிது; ஆகிலும், யானை குதிரையைப் பிடிக்க முடிகிறதில்லை. பதினுருயிரம் பெண்களினிடையில் கிருஷ்ணன் கிரீடிக்கிருன். அவன் ஒருவனுக்கே எல்லாப்பெண்களும் களைத்துக் கிடந்தார்களே யன்றி, அவன் அத்தனை பெண்களாலும் சளைத்தபாடில்லை. கிராம்யமான செயலுக்கும் பொருந்தும்படியாக அரும்பதக்காரருடைய ப்ரண்யதாரை என்னும் பதம் அமைந்திருக்கிறது. அதெப்படியெனில், ஸ்திரீகளுக்கு ப்ரணயதாரை. கிருஷ்ணனுக்கு அஸ்கலித ப்ரஹ்மசர்யம். பல்லாயிரம் பெண் கலவியிலும் அஸ்கலிதபிரஹ்மசர்யம்பெற்றவன் தான் அஸ்கலிதனுயே இருந்து ப்ரண்யதாரையான காமவெள்ளம் பெண்களிடமிருந்தே மடைதிறந்து பாயும்படி பண்ண வல்லவன் என்னும் அர்த்தம் அரும்பதத்தால் கிடைக்கிறது. இவ்வளவாலும் த்ருஷ்டாந்தமாயுள்ள ஆனைக்குக் குதிரை வைக்கை என்பது தெளிவாகவில்லை.

5. இந்த த்ருஷ்டாந்தம் தெளிவாகத்தெரிவது ஓரிடத்தில்தான். அதுவும் வியாக்யானத்திலல்ல; அரும்பதத்திலேயே. அதாவது நம்மாழ்வார் திருவாய்மொழி முதல் பாட்டில்—அயர்வறுமமரர்களதிபதி—என்று ஸர்வேசுவரனுக்குக் கொடுத்த விசேஷணத்தை வியாக்யானிக்கும் நம்பிள்ளை,

"தொட்டுக்கொள் தொட்டுக்கொள் என்ன வேண்டும்படி ஆனைக்குக் குதிரை வைத்தவ் வருகாயிருக்கும்" என்கிருர். இது ஒரு புதிராயிருக்கிறது. இந்த த்ருஷ்டாந்தத்தால் ஸர்வேசுவரன் நித்யஸூரிகளுக்குமெட்டாதவன்—என்றுமட்டும் தெரிகிறதேயன்றி த்ருஷ்டாந்தமான ஆனைக்குக் குதிரை வைக்கை கொஞ்சமேனும் விளங்கவில்லை. நம்பிள்ளையின் ஈடு வியாக்யானத்துக்கு ஏற்பட்ட அடைய வளைந்தான் அரும்பதம், சீயர் அரும்பதம்—இரண்டிலும் இந்த த்ருஷ்டாந்தம் தெளிவாகிறது.

அ. அரு. ஆனைக்குக் குதிரை வைத்து நடத்தும் ந்யாயத்தாலே யென்றபடி. அதாவது கஜத்தினுடைய வேக பரீக்ஷார்த்தமாகக் குதிரையை முன்னே நடத்தி யானையைப் பின்னே நடத்துவார்கள். ஆனையும் துதிக்கையாலே குதிரையைத்தொடும்படி கிட்டக்கிட்டச் சென்று பின்னையும் தொடமாட்டாதொழியும்.

சீ. அரு. ஆனைக்குக் குதிரைவைத்தென்றது பிடிகொடுக்குமாபோலேயிருந்து பிடிகொடாமையைப்பற்ற. ஆனைக்குக் குதிரை வைக்கையாவது—ஆனையினுடைய வேகபரீக்ஷார்த்தமாகக் குதிரையை முன்நடத்தி ஆனையைப் பின் நடத்துவார்கள். ஆனையும் துதிக்கையாலே குதிரையைத் தொடும்படி கிட்டக் கிட்டச்சென்று பின்னையும் தொடமாட்டாதொழியும்.

இந்த இரண்டு அரும்பதங்களாலும் ஆனைக்குக் குதிரை வைக்கை என்பது ஒரு பந்தயம் என்று தெரிகிறது. இந்தப் பந்தயம் நம் நாட்டில் முன் காலத்தில் நடந்ததுபோலும்! இப்போதுள்ள குதிரைப் பந்தயம்போலத் தனித்தனியாக ஓடவிட்டுப்பார்க்கும் பந்தயமன்று. யானை குதிரையைப் பிடிக்கமுடியுமா என்று பரீக்ஷை பார்க்கும் பந்தயம் இது. குதிரை யானையைப் பிடிக்குமா என்ற ஸந்தேஹமே உண்டாக வழியில்லை. குதிரைக்குத்தான் வேகம் அதிகமென்பது நிச்சயம். யானையை முந்தியும் குதிரையைப் பிந்தியுமாக ஓடவிட்டால் குதிரை யானையைமீறி அப்பால் போகவல்லதேயன்றி யானையைப் பிடிக்காது. பிடிப்பதற்கு ஸாதனமாயுள்ள கை குதிரைக்கு இல்லை. கையுள்ளது யானைக்கே ஆகையாலும் அந்தக் கையும் வெகு தூரம் வீசவல்ல நீளமுள்ளதாகையாலும் ஓடிப்பிடிக்கமுடியாமற்போனலும் வீசி வளைத்துப் பிடிக்குமா என்று பார்ப்பதற்காக முன்காலத்தில் இப்படிப் பந்தயம் நடந்திருக்கிறதென்று தெரிகிறது. இந்தப் பந்தயத்தை அனுஸரித்து இப்படி ஒரு பழமொழியும் ஏற்பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் ராஜ்யத்தில் படிப்பு, எழுத்து, பேர், பேச்சு, வேஷம், வேடிக்கை, ஆட்டம், கூத்து எல்லாம் இங்கிலீஷ் மயமாய்விட்டன. வயிற்றுப்பிழைப்புக்கு அவசியமான படிப்பு எழுத்துக்கள்தான் விபரீதமாயிற்றென்ருல்நம்முடைய பழைய விளையாட்டுக்களுக்குக்கூட விபரீதம் ஏற்பட்டுவிட்டது. வெளியூர்க்காரன் நம்மூரில் வெகு வருஷமாக வேரூன்றி, தன்னூர் விளையாட்டைக்கூட நம் நாட்டில் விதைத்து நம்மைக் கெடுத்துவிட்டான். நாமும் அசலூர்க்காரனிடம் மயங்கி, நம்முடைய பழைய வழக்கங்களை மறந்துவிட்டோம். ஜாதி, மதம் வேதம், சாஸ்திரம், கோயில். தர்மம் முதலியவை நம்மை நாசமாக்கினதால் அடியோடு ஒழிக்கவேண்டியிருக்கிறது. நம்முடைய பழைய விளையாட்டுக்களையும்கூட நாம் கைவிட்டு முன்னேற்றமடைந்து வருவதாக நினைக்கிறோம். ஷஷ்டிபூர்த்தி கொண்டாட்டம் போய், கோல்டன் ஜுபிளி யென்னும் அர்த்தமில்லாத வார்த்தையில் மயங்கி, அல்பாயுஸ்ஸுக்குக்கடைசி எல்லையான 50ஆம் வயஸுக்கொரு கொண்டாட்டமும் கிளம்பிவிட்டது. இனி அல்பாயுஸ்ஸுக்கு முதலெல்லையான 25-ஆம் வயஸுக்கொரு ஸில்வர் ஜுபிலிக் கொண்டாட்டமும் கிளம்பும். சிறந்ததொரு காரியத்துக்காக ஏற்பட்ட ஜுபிலிக்கொண்டாட்டத்தை மனுஷனுடைய வயஸுக்காக நம்மவர்கள் அனுஷ்டிப்பதை ஜுபிலியை உண்டாக்கின வெள்ளையரே பரிகசிக்கக்கூடும்

# நாகரிகப் பண்ணை

யோகி சுத்தானந்த பாரதியார்

நாகரிகம் பச்சோந்தியா, மகேந்திர ஜாலமா? அது எப்படி மாறுகிறது! இன்னொரு வகை; நாளை அதற்குப் பகை! உடையில் எத்தனை வக்கிரம்! கத்திரிக்கோலுக்கு எவ்வளவு வேலை! வண்ணானுக்கு எவ்வளவு சுமை! நடையில் எவ்வளவு குலுக்கு! முகத்தில் எவ்வளவு சாயப்பட்டை! மீசையும் சிகையும் என்ன பாடுபடுகின்றன! கண்ணாடிப்பார்வையில் எத்தனை தினுசு; கண்ணாடிப்பார்வையில் எத்தனை கோணல்! முகக்ஷவரம், நியூஸ்பேபர் சந்தியோபாசனை, காப்பி டீ ஆசமன்யம், அரட்டை சுவாத்யாயம், பிரம்ம பத்திராக்னி ஓமம்—இப்படி நவநாகரிகத்தில் பஞ்சயக்ஞங்கள் நடக்கின்றன! விடிய நான்கு மணிக்கு எழுந்து, தேக சுத்தி செய்து, குளித்து, சித்த சுத்திக்காக ஜபதபம் தியானம் செய்து, பாராயணம் பண்ணி, பாடுபட்டுழைத்து, பசிக்குச் சுசிருசியாகச் சாப்பிட்டு ஆசாரமாக, வாழ்ந்த காலம் அகாலமாய்விட்டது! பூர்வாசாரங்களெல்லாம் அபூர்வமாயின. கலிமுற்றிக் காதல் மணத்தில் வந்து திருவிளையாடுகிறது!

யுகதர்மத்தை அனுசரிக்க வேண்டியதுதான்; காலத்திற்கேற்ற கல்வி நடையுடைகள் வேண்டும்; என்றால் உடம்பையும் மனசையும் கெடுக்கும் அனாசாரங்களை நாகரிகக் கணக்கில் சேர்ப்பானேன்?

"சுருட்டு பொல்லாதுடா!" என்கிறார் அப்பா; "அது பொல்லாதென்றுதானே அப்பா சுட்டுப் பொசுக்கி வஞ்சந்தீர்க்கிறேன்" என்று புகைவிடுகிறான் பிள்ளை. பிள்ளையாண்டான் மட்டுமா? பெண்களும் இப்போது புது நாகரிக மேடையில் தங்கள் சுதந்தரத்தை நடிக்கக் கிளம்பியிருக்கிறார்கள்.

சாரதா பில்வந்தாலும் வந்தது, பெண்களெல்லாம் அம்மாமிகளாய்த்தான் மணையில் உட்காருகிறார்கள். இல்லை; மணையாவது கிணையாவது, நாற்காலியில் உட்கார்ந்து மாலையோ மோதிரமோ மாற்றிக்கொண்டு "மை லௌலி" என்று ஒரு புன்னகை புரிந்தால் போதுமே. ஒரு டின்னர் வைத்து இரண்டு நண்பர் கலியாணப் பிரசங்கம் செய்துவிட்டாலும் போதும். வேறு ஓமப்புகையும் தர்ப்பக் கட்டையும் தாலியும் கூறையும் எதற்கு? தாலிகூட அடிமையின் சின்னம். பெண்ணுரிமைக்குப் பகை. மனு, பராசரர், வள்ளுவர் கிள்ளுவர் தர்மங்களெல்லாம் பழங்குப்பை. டாக்டர் டிக்பி ஸ்மித், ஸ்கின்னர் உட், ப்ரௌட், ஜெல்லி ஷுடர் இவர்கள் அழகாக ஆங்கிலத்தில் சுதந்தரக் காதல் (Free Love) என்ற நூல் எழுதியிருக்கிறார்கள். இந்தக் காலத்திற்கு இவர்களே ஸ்ம்ருதிகர்த்தாக்கள். மனு பராசரர் என்றால் தீக்குச்சி கிழிக்கிறார்கள்! இவையெல்லாம் என் அபிப்பிராயம் என்று காவேரி வாசகர்கள் பல்லைக் கடிக்காதீர்கள். சிவகடாக்ஷம் சாஸ்திரிகள் இப்படிப் புலம்புகிறார். அவர் பிள்ளை நமது டாக்டர் ஸாண்டர்ஸன் (சுந்தரேசன்) மேற்கேயிருந்து இறக்குமதிசெய்த நாகரிகக் குறிப்புகளே தகப்பனார் கலக்கத்திற்குக் காரணம். இந்தக் குறிப்புகளை அப்படியே மனப்பாடம் செய்துகொண்டு நடப்பவள் சுந்தரேசன் தங்கை, லைலா (லீலா Lila).

டாக்டர் தகப்பனார் சிவகடாக்ஷம் சாஸ்திரிகள் ஆங்கிலம் படித்த வைதீகர். அவர் முடிந்தமட்டும் பஞ்சயக்ஞங்களை அனுஷ்டித்துக்கொண்டே ஹைகோர்ட்டிலும் குறுக்கெழுத்து வேலை பார்த்துவந்தார். ஜஸ்டிஸ் மணி ஐயரே அவருக்கு வேலை பண்ணிவைத்தவர். T. V. கிருஷ்ணசுவாமி ஐயருக்கு அவரிடம் பெருமதிப்புண்டு. சிவகடாக்ஷம் திருவல்லிக்கேணியிலிருந்து கடற்கரை வழியாகவே ஹைகோர்ட்டிற்குப் போய்வருவார். அப்போது அவர் கையில் ஜபமாலையிருக்கும். அதில் பஞ்சாக்ஷரிசெய்துகொண்டே நடப்பார். அவர் நடையே ஓம் நம: சிவாய ஓம் என்று தாளம் போட்டுத் தாவுவதுபோலிருக்கும். சாயங்காலம் வந்ததும், குளித்து சந்திஜபமானதும், ஸமிதாக்னி வளர்த்து, அந்த அக்னிஜ்வாலையே சிவம் என்று அவர் உபாசித்துவந்தார். இதனால் அவருக்கு நல்ல சித்தசுத்தியும் தெளிந்த அறிவும் தேஜஸும் பெருகின. உடம்பிற்கும் பலமுண்டானது. அவர் தலைநோய் காய்ச்சல் என்று மருந்து சாப்பிட்டதே கிடையாது.

* * *

இப்படிப்பட்ட சாதுவுக்கு, சுந்தரேசனும் லீலாவதியும் வந்து பிறந்தனர். சாஸ்திரிகளின் மனைவி ஒரு வக்கீலின் பெண். அவள் உறவினரெல்லாம் நவநாகரிகப் புலிகள். கரண்டி முதல் காயிதம் வரையில் நாகரிகம் பரிபூரணமாயிருக்கும். அவர்கள் வீடுகளில் 'டுஷ்புஷ்' என்று ஆங்கிலமே முழங்கும். தமிழராகப் பிறந்த பாவத்திற்கு இடையிடையே இரண்டொரு தமிழ் வார்த்தையும் வரும். அதுவும் அம்மா மம்மா, அப்பா பப்பா வாய்விடும். சமுஸ்கிரதம் செத்த பாஷை என்பது அவர்கள் தீர்மானம்:

* * *

சாஸ்திரிகளின் மைத்துனன் M. K. பாலி M. D.(மஹாதேவ சாஸ்திரி பிள்ளை ம. கபாலீசுவரன்) எடின்பரோவில் படித்து டாக்டர் பட்டம் பெற்றவன். சிவகடாக்ஷத்தின் விபூதி ஜபமாலை ஔபாசன மெல்லாம் பழைய காட்டுமிராண்டிச் சின்னம் என்பவன். அவன் புது வாழ்வு (New life) என்ெறாரு நூல் ஆங்கிலத்தில் எழுதிவைத்திருக்கிறான். நல்ல வேளையாக அதை யாரும் இன்னும் வெளியிடவில்லை. அதில் சந்திஜபம் முதல் தமிழ் சமஸ்கிரதம் வரையில் (அப்பன் திவசம் உள்பட) நமது பழக்க வழக்கங்களை யெல்லாம் சீமைக் கண்ணாடியால் அலசிப்பார்த்து, எல்லாம் கண்மூடித்தனங்கள், இவற்றை அனுஷ்டிக்கும் ஜாதி இந்த இருபத்தொன்றே காலே அரைக் காலாம் நூற்றாண்டில் உருப்பட வழியில்லை; எல்லாரும் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அடியோடு மாறினாலே உருப்படலாம் என்று எழுதி வைத்திருக்கிறான். தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு மருந்துடன், தனது புதிய நாகரிகமும் இரண்டு டோஸ் கலந்தே தருவான்.

*     *     *

இந்த மஹானுபாவனிடமே சுந்தரேசனும் லீலாவதியும் வளர நேர்ந்தது. காரணம் இருவர் தாயும் பிரசவத்தில் இறந்துபோனது தான். தாய் காவேரி இறந்தற்குக்கூட பாலி விரோதமான காரணங்களைக் கற்பித்தான்—புடவை கட்டுவதால் காற்று உடம்பில் படுவதில்லை—இலைபோட்டுக் கையால் சாப்பிடுவதால் நகங்களில் உள்ள விஷம் உடம்பிற் கலந்துவிடுகிறது; ஒருவனிடமே அடைபட்டுக் கிடப்பதால் மனோல்லாச சுதந்தரம் (Psychological free-pleasure) இல்லாதது—இன்னும் பல. சிவகடாக்ஷம் சிறுவயதில் குழந்தைகளுக்கு நல்ல பாட்டும் பழக்கமும் சொல்லிவைத்தார். அவர் மனைவி இறந்தபிறகு, தெய்வபக்தி செய்வதும், தாமே கவனம்செய்து கீர்த்தனாஞ்சலி செய்வதுமானார். டாக்டர் பாலியிடம் போகும்போது சுந்தரேசனுக்கு வயது பன்னிரண்டு—லீலா வயது ஏழு. டாக்டர் பாலி தன் மனப்படியே குழந்தைகளைப் புதிய வாழ்வுக்குத் தயாராக்கினான். அவன் மனைவி காமாக்ஷி மஞ்சள்--குங்கும நாகரிகத்தை இன்னும் விடவில்லை. கணவன் குங்குவப்பரணியை ஒளித்தும் உடைத்தும்—எப்படியோ அவள் சத்தியாக்கிரகம் செய்து, பத்தினிக் கடமையைக் காப்பாற்றி வந்தாள். காமாக்ஷியைப் பாலி "Fish—eye"] என்றழைத்து பிழை என்று இப்போது கூப்பிடுகிறான். இருவருக்கும் குழந்தைகளில்லை. ஆதலால் சுந்தரேசனும் லீலாவதியும் அந்த வீட்டில் போட்டியில்லாமல் செல்லமாகவே வளர்ந்தனர்.

*     *     *


# இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **"இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"**

**வடக்கு பீச் ரோடு :: மதராஸ்**

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட்   திருவல்லிக்கேணி   மயிலாப்பூர்
தியாகராயநகர்   புரசவாக்கம்   மவுண்டுரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ... | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் .... ... | ரூ. 33,55,946 |
| ரிஸர்வ் நிதி ... ... ... | ரூ. 33,00,000 |
| டிபாஸிட்டுகள் ... ... | ரூ. 10,5000000-க்குமேல் |

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N.P.B.   N. கோபால அய்யர், செக்ரடரி

டாக்டர் பாலி சென்னையில் Fashion club (நாகரிகப்பண்ணை) ஒன்று நாட்டினன். அதில் சீமைப் பண்புள்ள (Western culture) நாகரிகச் சீமான்களும் சீமாட்டிகளுமே அங்கம் வகித்தனர். சீமான் என்றாலே சீமை ஆள் என்பது அவன் நினைப்பு. ஆண்பெண் வேற்றுமைகளைத் தகர்த்தெறிதல், கோயில் சாமி சமயம் அனுஷ்டானாதிகளை நையாண்டிசெய்து பொழுதுபோக்கல், சாகெலெட் முதல் ஷாம்பைன் வரையில் ஸ்வேதாசாரங்களைக் காப்பி அடித்தல், வேதம்முதல் அருட்பாவரையில் உள்ள எல்லா அருள் நூல்களையும் அடிமை நூல்கள் என்று ஒதுக்கித்தள்ளுதல்—சுருக்கமாக இலண்டனைச் சென்னைக்குக் கொண்டு வருதல்—சென்னையைக் கடலில் தள்ளிவிடுதல்; இவையே நாகரிகப்பண்ணையின் சங்கற்பம். இப் பண்ணையில் சேர்ந்தவர்களுக்கு முதல் தீக்ஷை கிராப்பு வைத்துக்கொள்வதும், முகக்ஷவரம் செய்து, சாயம் அடிப்பதுமே. இரண்டாவது தீக்ஷை கால்சராய் தொப்பி! மூன்றாவது ஸ்பூன்—சாப்பாடு. இப்படி ஐம்பது படிகளுண்டு; கடைசிப்படி இருபாலாரும் கைகோத்து ஆனந்தநடனம் புரிவதுதான். நாகரிகப்பண்ணையில் ஐம்பது படியும் ஏறியவர்களுக்கு M. F. (Muff—மப் என்று படித்து விடாதீர்கள்) Master of Fashion என்ற பட்டம் உண்டு. இப்பட்டம் பெற்ற நாகரிகத் தலைவிகள் (Mistress of Fashion) ஆண்களைப் போலவே தோன்றுவார்கள்—இழவு மீசை மட்டும் முளைத்தால் ஆண்களைத் தோற்கடித்து விடலாம். அரைக்கால் சட்டை, பூட்ச், ஷர்ட், டை, காலர் கோட்டு, தொப்பி, சுருட்டு, கண்ணாடிப்பார்வை (போலி மீசையும் உண்டு) எல்லாம் அப்படித்தான். மார்பு முன்னே துருத்தி மோசம்பண்ணாமல் இறுக்கிக்கட்டி விடுவார்கள். நாகரிகம் முதிர முதிர மார்பு கூட இவர்களிடம் பயந்து உள்ளடங்கிச் சுருங்கிப் போகிறது. பால் தரவேண்டிய அவசியமும் இல்லை—தாய்ச்சி வேலை அது! பெண்களே ஆண்களாகின்றனர். ஆண்கள் இன்னும் புடவையோ பாவாடையோ கட்டவில்லை.

*　　　*　　　*

இப்படிப்பட்ட நாகரிகப் பண்ணையில் சுந்தரேசனும் லீலாவும் வளர்ந்தனர். சுந்தரேசன் பி. ஏ. தேறியதும் கப்பலேறிச் சென்று கேம்ப்ரிட்ஜில் படித்து பெரிய டாக்டர் பட்டம்பெற்று வந்தான். வந்ததுமே இங்கே நாகரிகத்தலைவன் (M. F.) ஆய்விட்டான். ஐம்பதுபடியும் தாண்டி, நாகரிகத்தின் உச்சியில் ஏறிவிட்டான்; சீமையில் ஆங்கிலத் தல் த இல்லை. ஆதலால் சுந்தரேசன் சுண்டரேசன் ஆய், ஸௌண்டர்ஸன் அல்லது ஸாண்டர்ஸன் ஆய்விட்டான். அதுதான் இனிமையாயிருக்கிறது என்று பாலி நாமகரணம் செய்தான்.

இப்போது நாகரிகப் பண்ணையின் காரியதரிசி ஸௌண்டர்ஸன். ஒரு மாதமாக அவனுக்குத் துணைசெய்வது அதோ நிமிர் நடையும் திமிர்-கண்ணுங்கொண்டு உலகையே மதிக்காது திரியும் ஸ்வீடி (சாவித்திரியின் விகாரம்) ஸ்விடியை நீங்கள் கண்டால் "ஐயா" என்றே அழைப்பீர்கள். அவர் உதட்டில் சில நாள் மீசையும் காணும். அவர் ஐயாவா அம்மாவா, அவளா, அவனா என்பது எளிதில் கண்டு பிடிக்கமுடியாது.

டாக்டர் ஸௌண்டரே மூக்கிப்போனான் என்றால் நீங்கள் எந்தமட்டுக்கு! டாக்டரிடம் வைத்தியம் என்று வந்தவர் மேற்படியாரையே பைத்தியமாக்கிவிட்டார்!

*　　　*　　　*

ஸ்வீடிடைக்கண்டு மிகமிக மயங்கிப்போனவள் லீலா (லைலா). லீலா நாகரிகப் பண்ணையில் ஊறினவளே; ஆனாலும் காமாக்ஷியின் நேசத்தால் இன்னும் பட்டுப்புடவை கட்டுகிறாள்; நாகரிகப்படிகளில் முக்கால்வாசி ஏறியிருக்கிறாள். அவள் இண்டர் தேறி இப்போது வைத்தியக்கல்லூரியில் படிக்கிறாள். வயது இருபத்துமூன்று. அதற்குரிய ஆசாபாசங்கள் முகத்தில் புள்ளிபோட்டுக் காட்டுகின்றன. டாக்டர் பாலியும் ஸௌண்டரும் அவளுக்கு எல்லாச் சுதந்தரமும் தந்தனர். அவள் எப்படியும் இருக்கலாம்; இஷ்டமான பேரைக் காதலித்து வாழலாம். ஜாதகமும், சடங்கும் ஒளபாசனப் புகையும், மேளமும், தாலியும் அநாகரிகப் பழக்கங்கள் அன்றோ?

*　　　*　　　*

லைலா காலை பெட்காபி தயாரானதுமே எழுந்திருப்பாள். பேஸினில் லவண்டர் சோப் போட்டு முகங்கழுவி, உடனே காப்பியைக் கொட்டிக்கொண்டு, பிறகு மக்ளீன் செய்து கொண்டு படக் படக் என்று க்த்தியைத் தீட்டுவாள். அவள் உதட்டிலும் கன்னத்திலும் லேசாக மயிர் நீட்டிக்கொண்டிருக்கும்; அதை தெறிந்த பிறகு, நாகரிகத் தைலந் தடவிக் வழித்கழுவிப் பிறகு, லிப் ஸ்டிக், க்ரீம், ஸ்நோ—இன்னும் பல சாயத் தினுசுகளையும் புருவ மைகளையும் போட்டு, ஒரு மணி நேரம் கண்ணாடி முன்னே "மேகப்" செய்து கொள்வாள். சில நாட்கள் தொட்டியில் மல்லாந்து உடம்புக்குச் சோப்பும் வாசனைப் பொடிகளும் போட்டுத் தேய்ப்பதுண்டு. நகங்களுக்குச் செவ்வரக்குத் தடவிக்கொண்டு, கைக்குட்டைக்கு அத்தர் போட்டு வைத்து விட்டு, லைலா துணிமணி பீரோவைத் திறப்பாள். இங்கேதான் நாகரிக-விசாரம் பலமாக நடக்கும். லைலா வண்ணாத்திப் பூச்சிகளைப் போல் அழகாயிருக்கப் பிரியப் படுவாள். ஆதலால் நிறம்பார்த்துப் புடவை ரவிக்கை முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து, மிகவும் நாகரிகமாக அணிந்து, இடுப்பை நன்றாக இறுக்கி, ஒரு தங்க ஒட்டியாணமும் போடு

வாள். நாகரிகப்பண்ணையில் தோடு, மூக்குத்தி, புல்லாக்கு முதலிய முக நகைகளும், தாலியுமே விலக்கு. உயர்ந்த முத்து ரத்னமாலைகள் அணியலாம். தலைக்கு அழகான கிரீடம் அணியலாம். லைலா கையில் தங்க வளைகளும் கழுத்தில் நவரத்னமாலையும் முத்துமாலையும் தலையில் கிரேக்க ராணிகளைப்போலத் 'தங்கப் பட்டமும்' அணிந்து இளம் அரசி மாதிரியே காட்சியளிப்பாள். அவள் ஆங்கிலமே பேசுவாள்; ஆங்கிலப்பேச்சு நடையுடை பாவனையுள்ள நண்பருடன் கலகலவென்று கைகுலுக்கிப்பேசுவாள். டாக்டர் பாலி "லைலா! அச்சம் நாணம் எல்லாம் அசட்டுப்பைத்தியம், நீ நிமிர்ந்து நட; உரிமையுடன் பேசு" என்று தூபம் போட்டுவிட்டான். லைலா ஆண்களை மதிப்பதேயில்லை. அழகின் செருக்காலும், வயதின் மதர்ப்பாலும், நாவல் படிப்பாலும், திரைக்காட்சியாலும் லைலா ஆண்களெல்லாம் தனக்கு அடிமைகள் என்றே நினைத்தாள். இருந்தாலும் இயற்கையின் வேகத்தை அவளால் அடக்கமுடியவில்லை. அடிக்கடி தன் வாழ்வுக்கொடிக்கு ஒரு கொழுகொம்பைத் தேடினாள். பிசகுகளும் நடந்தன—யார் கேட்பது? காமாக்ஷி இந்தப்பெண்ணின் விபரீதங்களைப் பார்த்து வருந்தி, சிவகடாக்ஷத்திடம் சொல்லிக் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்தாள். தகப்பனார் நல்ல நல்ல வரன்களை ஏற்பாடு செய்தார்; ஜாதகப் பொருத்தம் பார்த்தார்.

லைலா "இந்த பூல் எனக்கு வேண்டாம்; இந்த இடியட், அந்த யானை இந்த மூஞ்சூறு, இந்த எலும்புக்கூடு, இந்தப் பொதுக்கை, இந்த வறட்டன், இந்த மிருகம், இந்த ஓநாய், இந்தக் குரங்கு எனக்குவேண்டாம்" என்று வந்த வாலிபர்களையெல்லாம் நாகரிகச் செருக்கில் நாவடங்காமல் பிரசங்கம் செய்து துரத்திவிட்டாள். இந்தப் பெண்ணை. "நாகரிகப் பிடாரி" என்று வாலிபர் அஞ்சினர். இருபதடிக்கப்பாலிருந்து அவளது பூச்சழகையும் ஒய்யார நடையையும் வியப்பவர்கள்கூடக் கிட்ட நெருங்கப் பயந்தனர். அவள் செருக்கே வெறுப்பாக முடிந்தது. "அடங்கி நடந்தால் எவனாவது உன்னைக் கட்டிக்கொள்வான்; இல்லாவிட்டால் ஓரியா யிருக்கவேண்டியதுதான்" என்று காமாக்ஷி ஜாடையாகச் சொல்லுவதுண்டு. "இந்த அநாகரிக மிருகங்கள் என்னை விரும்பாவிட்டாலென்ன? நான் ஓரியல்ல...?" என்று லைலாவும் வெட்டிப் பேசி வந்தாள். காரணம் அவள் கண்கள் ஒருவரிடம் லயித்துப்போயின.

* * *

டாக்டர் பாலி வீட்டு மாடியிலிருந்து பார்த்தால் ஸ்வீடி தன் உப்பரிகையில் சொகுசாக நடப்பதும், கொச்சி நாயைக் கொஞ்சுவதும் நன்றாகத்தெரியும். ஸ்வீடி ஒரு மர்மப்பேர்வழி, ஆணா பெண்ணா என்று கூட யாருக்குந்தெரியாது; கிராப்புத்தலை; ஹாட்; காகி ஷர்ட், டை., ஹண்டிங்கோட்டு, நிக்கர்ஸ், ஸ்டாகிங்ஸ் பூட்ஸ், கையில் ரிஸ்ட் வாட்சு, உதட்டில் லேசாக மயிர்கள், முகவாய்க்கட்டையில் நாலைந்து மயிர்கள், உதட்டில் கம்பீரமான அலட்சிய நகை, வாயில் ஸ்பென்ஸர் சுருட்டு, பின்னால் ஒரு நாய், மாலையில் ஸுண்டர்—வீட்டுவேலை செய்ய ஒரு வேலைக்காரி, வேலைக்காரன். வீட்டிற்குள் இரகசியமாக இரண்டுபேர்—இந்த ஒழுங்கில் ஸ்வீடி — விளங்குகிறான் — (ள்). ஸுண்டர் ஒருவனே அவனு(ளு)டன் நெருங்கிப்பழகுகிறான். ஸ்வீடியை அவன் டீ என்றே அழைக்கிறான். அவனை அவன்(ள்) ஸுன் என்கிறாள். ஸுன்—டீ தோள்மேல் கைபோடுவது முதல் ஒருவர் சுருட்டில் ஒருவர் சுருட்டைப் பற்றவைப்பது வரையில் நட்பாடுகிறார்கள்.

லைலா தன் மாடியில் ரோஜாச் செடிகளை வெட்டிவிடுவதும் மலர் பறிப்பதும் போல், அங்கே டீயின் ஆணழகை வலைவீசிப் பார்ப்பாள். "ஆஹா என்ன அழகு, என்ன பாஷன்! எவ்வளவு நாகரிகம்! ஐம்பது படியேறி M. F. பட்டம்பெற்ற இவனையல்லவா நான் மணம் புரிய வேண்டும்? எவ்வளவு தாராளமான செலவு; அவன் மோட்டாரே நாகரிகத்தின் வெற்றித் தேராயிருக்கிறதே! நாகரிகப் பண்ணையில் எவ்வளவு அழகாக இந்த வாலிபன் புதுவாழ்வைப் பற்றிப் பேசுகிறான். நல்ல படிப்பு, இனிய ஆங்கிலம். வயசு இருபத்தைந்துதான் இருக்கும்; பால் வடியும் முகம்;


## சேலத்தில்

கல்யாணப் பட்டு ஜவுளி ரகங்கள் வாங்க சிறந்த இடம்

# கோபால பத்ம விலாஸ்

385, கடைவீதி, சேலம்.

*Proprietors :*

S. N. PATHMANABA CHETTIAR

P. R. JAYAGOPALA CHETTIAR

நிருங்கொடிகள் போலக் கிராப்பு சுருண்டு சுருண்டு மேகராசிபோலப் படிப்படியாகப் படர்ந்த அழகென்ன! மூக்கும் விழியும், பவழ வாயும் சலவைச் சிற்பம் போலச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. அண்ணாவுக்குக்கூடத் தெரியாமல் இந்த அழகனை நான் காதல் மணம் புரிவேன். இவனைத் தவிர வேறெந்த மிருக மும் என் கிட்ட வரக்கூடாது". லைலா இப்படி உறுதிகொண்டு தன் மாடியிலிருந்தே புன்ன கைத் தூதும், விழித்தூதும் அனுப்பினாள். இவள் காதலை அங்கீகரிப்பதுபோல, டீயின் விசாலப்புன்னகை முப்பத்திரண்டு—தந்தப் பற்களையும் காட்டின. இவளைப் பைத்திய மாகவே டீ உறுதிகொண்டான்(ள்).

* * *

நாகரிகப் பண்ணையில் இருவரும் கைகுலுக் கினர்; லைலா தன் காதலனுக்குத் தினம் ஒரு ரோஜாக்கொத்துத் தந்தாள். காதலனும் அதை முத்தமிட்டு ஏற்றான். இருவருக்கும் கடிதக் காதல் தொடங்கியது; "என் உயிரே; நீயின்றி நான் வாழேன்; என் காதலே நீயின்றி நான் சாவேன்" என்ற பண்பில் கடிதங்கள் தூது சென்றன.

ஒரு நாள் லைலா உணர்ச்சி பொறுக்கமுடியா மல், மாடிக்குமாடி தாவி, டீயின் மாடியறைக் கே போய்ச்சேர்ந்தாள். பட்டு நிலா அடிக் கிறது; டீ அப்போதுதான் சாப்பிட்டு ஓர் ஏப் பம் விட்டான். லைலா வந்ததும் "கண்ணே காதலே வா, வா, உனக்கே காத்திருந்தேன். இந்தா சாப்பிடு" என்று வெண்ணெய் தட விய பிஸ்கோத்து தந்தான்—தலைக்கும் வெண் ணெய் தடவினான்(ள்.) ஒருவர் கடித்த பிஸ் கோத்தையும் சாக்லெட்டையும் ஒருவர் அன் புடன் கடித்து உண்டனர். பிறகு மனதை விட்டுப் பேசினர். லைலா டீயின் மெத்தையிற் சாய்ந்தாள்; டீ அவள் முகத்தைக் கையால் தடவி "என்கண்ணே உன் அழகு எவ்வளவு வசீகரமாயிருக்கிறது; என்றான்(ள்)" "காதலா நீ என் உயிர்; இதோ சந்திரன் தன் சீத கிரணங்களை நீட்டி, நம்மை உற்றுப்பார்க் கிறான்; மதியும் நிலவும் போல நாம் இனிச் சேர்ந்து வாழ்வோம்"

"அப்படியே வாழ்வோம்; கண்ணே அதற் கென்ன தடை. ஆனால் நீ ஒன்று செய்ய வேண்டும்." என்று டீ உற்றுப்பார்த்ததுமே

"என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்." என்றாள் லைலா.

"நீ ஆணாக மாறினால் அவசியம் உன்னை என் காதலர் வரிசையில் சேர்த்துவிடுகிறேன்......" என்றாள் டீ.

லைலா திகைத்து நின்றாள். அப்போது கதவு திறந்தது; ஸௌண்டர் உள்ளே நுழைந்தான்.

டீ கடகடவென்று சிரித்து, "இதோ என் காதலி; இவளைக் கலியாணம் செய்துகொள் ளப்போகிறேன்; மிஸ்டர் ஸௌண்டர் நீ எங்கள் கையைச்சேர்" என்றாள். "ஹல்லோ லைலி" இதென்ன பைத்தியம்; அவள் என் காதலி" என்றான்.

லைலி முகம் சிவந்தது. "அண்ணா இதென்ன பைத்தியக்கார நாகரிகம். ஆண் பெண் தெரி யாமல்!......" என்று வெளியே சென்றாள். டீ அவள் பின்னே சென்று, மை டியர் லைலி, என் காதலர் ஒருவரை உனக்குத் தருகிறேன். நீ சினிமாவில் சேர்ந்தால் அழகுச்செருக்கி (Proud Beauty) என்ற படத்தில் கதாநாயகி யாக நடிக்கலாம். காதல் வக்கிரம் (Crooked Love) என்ற படம் ஷூட்டிங் நடக்கிறது. நான் அதற்கே இப்படி ஆணானேன்" என்றாள். "டாம், போடீ" என்றொரு குண்டுபோட்டு லைலி வீட்டிற்கு ஓடினாள்.

காமாக்ஷியை நமஸ்காரம் செய்தாள். "மாமி! இன்றே நான் புது வாழ்வு பெற்றேன். இனி நாகரிகப் பண்ணை முகத்தில் விழிப்பதில்லை. தங்கள் கையால் மஞ்சள் குங்குமம் தாருங்கள்; அப்பாவிடம் போகிறேன்"என்றாள் காமாக்ஷி. "தீர்க்கசுமங்கலீ பவ" என்று மஞ்சள் குங்குமம் தந்து, சிவகடாக்ஷம் வீட்டிற்கு லீலா வதியைக்கொண்டு சேர்த்தாள்.

சிவகடாக்ஷம் "லீலாவதி, நீ திருந்தவேண்டு மென்றுதான் பஞ்சாக்ஷரி ஜபித்தேன் அம்மா! உனக்குக் கணவன் தயாராயிருக்கிறான். ஹைகோர்ட் வக்கீல் முத்துசாமி! நாளையே நிச்சிதார்த்தம் செய்யலாம். அம்மா, இல் லறத்தில் ஒருவனுடன் கற்புள்ள மனைவியாக வாழ்வதே பெண்ணுக்கழகு" என்றார்.

லீலாவதி மறுவாரமே ஸ்ரீமதி முத்துஸாமியா னாள். தம்பதிகள் குலதர்மத்தை ஒழுங்காகவே நடத்திவருகிறார்கள். லீலாவும் தமிழ் கற்கிறாள்.

---

2/8/56

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.




# T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் ஐந்து வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 6000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அநுபவத்தால்தான் T.V.S. இஞ்சினியர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

**பிரதான அம்சங்கள்**

- ஸ்டார்டிங் அதிசுலபம்:—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- சமகனம்:—டயர் தேய்வு குறைவு. பிரேகிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- மும்முறை வடிகட்டும் வசதி:—சுத்தமான கேஸ். மேற்பார்வை செலவு குறைவு.
- மிகவும் நம்பிக்கையானது:—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- நேர்த்தியான தோற்றம்:—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்த தோற்றம்.

வாங்குமுன் மாதிரிகளைப் பாருங்கள். T·V·S கியாஸ் பிளாண்ட்

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

**T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்**

மதுரை & சென்னை.

TVS.K - 7 TM

Regd. No. M. 4405 CAUVERI

THE REGISTRAR OF BOOKS
17 JAN 1945
MADRAS



— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —
தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல்
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
— அகமகிழ்கிறாள். —

இம் மகிழ்ச்சியை நீங்களும் எளிதில் அடையலாம்

டி. எஸ். ஆர்

**கோகுல் கூந்தல் தைலம்,**

**சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்**

**இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!**

மதராஸ் ஸிடி ஏஜண்டு: **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

**T. S. R. & CO.** PERFUMERS KUMBAKONAM

Edited & Published by N. ... inted by S. Rangaswami at the Cauveri Colour Press

32

# காவேரி

MARCH-1945
தாரண-பங்குனி

4 - APR 1945

32.

4-8



-/6

Widest Circulated Monthly

# மகத்தான ஆரம்பம்!

பக்தி, காதல், ஹாஸ்யம், சங்கீதம் ஒருங்கே
ததும்பும் இவ்வருஷத்திய இணையற்ற புராணப்படம்.




பாட்டு: சிவன் ஸ்டுடியோ: பிரிமியர், கோவை

விபரங்களுக்கு

தென், வட ஆற்காடு, செங்கல்பட்டு, மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி:
ஜெயலக்ஷ்மி பிக்சர்ஸ், அமிஞ்சிகரை, மதுரை.

பெங்களூர், ஆந்திரா: பாஸ்கர் பிக்சர்ஸ், பெங்களூர் சிடி.

மலையாளம்: அஸோஸியேடட் பிக்சர்ஸ், எர்ணுகுளம்.

சேலம், கோயமுத்தூர், நீலகிரி: ஸ்ரீராம் பிக்சர்ஸ், கோயமுத்தூர்.

மற்றுமுள்ள இடங்களுக்கு உரிமையாளர்:

## பத்மா பிக்சர்ஸ் லிமிடெட்

தியாகராய நகர் — மதராஸ்




# T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் ! ஐந்து வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 6000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T.V.S. இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

**பிரதான அம்சங்கள்**

- ஸ்டார்டிங் அதிசுலபம்:—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- மும்முறை வடிகட்டும் வசதி:—சுத்தமான கேஸ். மேற்பார்வை செலவு குறைவு.
- சமகனம்:—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- மிகவும் நம்பிக்கையானது:—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- நேர்த்தியான தோற்றம்:—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்த தோற்றம்.

வாங்குமுன் மாதிரிகளைப் **T·V·S** கியாஸ் பிளாண்ட் பாருங்கள்.

**T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்**

மதுரை & சென்னை.

TVSR-71V

Regd. No. M. 4405 CAUVE...

21 MAR 1945
MADRAS




— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —
தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது ...ந்த
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
— அகமகிழ்கிறாள். —

இம் மகிழ்ச்சியை நீங்களும் எளிதில் அடையலாம்

டி. எஸ். ஆர்

கோகுல் கூந்தல் தைலம்,

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைல...

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரான

மதராஸ் ஸிடி ஏஜண்டு: புஷ்பவனம் ஸ்டோர்ஸ் பைக்ராப்ஸ் ...
திருவல்லிக்...

**T. S. R. & CO.** PERFUMER...
KUMBAKON...


Edited & Publi... ...nujam & Printed by S. Rangaswami at the Cauveri Col...
Besant Road, Kumbakonam.